★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜூலை 4 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 158 | Thursday 04, July, 2024 | 20பக்கங்கள் | 50/-




காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை

# பாடசாலை கல்வியை சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்க முடியாது

## தேவையான மேலதிக நடவடிக்கைகளை ஆராயுமாறு சட்ட மாஅதிபருக்கு ஜனாதிபதி பணிப்பு

ஆசிரியர் பணியில் இணைந்து கொள்ளும் அனைவரும் எதிர்கால சந்ததியினருக்காக தமது சேவைகளை அர்ப்பணிக்க வேண்டுமெனவும், ஒழுக்கமின்றி ஒரு நாட்டில் கல்வியைப் பேண முடியாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வலியுறுத்தினார்.

காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாடசாலைக் கல்வியை சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாதென கூறிய ஜனாதிபதி, இது தொடர்பில் தேவையான மேலதிக நடவடிக்கைகளை ஆராயுமாறு சட்ட மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

**2,159 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி**

கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான நியமனங்கள் மற்றும் டிப்ளோமாதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (03) அலரி மாளிகையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

06



# ஆசிரியர் நியமனத்தைப் பெற்றதும் தொழிற்சங்க நடவடிக்கையில் சிலர்

## பிள்ளைகளின் கல்வியை இருளாக்க வேண்டாம்



நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி ஒதுக்கீடுகளைச் செய்ததால் இந்த நியமனங்களை வழங்க முடிந்தது. இவ்வாறு நியமனங்களை பெற்றுக் கொண்ட சிலர் தொழிற்சங்க நடவடிக்கைகளில் இணைந்து பிள்ளைகளின் எதிர்காலத்தை இருளாக்குகின்றனர். இவ்வாறு செய்ய வேண்டாமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று ஆசிரியர் நியமனம் பெற்றவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான நியமனங்கள் மற்றும் டிப்ளோமாதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (03) அலரி மாளிகையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

06

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மறுசீரமைக்கப்படும்

## எவருக்கும் விற்கப்பட மாட்டாதென்கிறார் நிமல்



ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விற்பனை செய்யப்படவில்லை எனவும், மறுசீரமைப்பு பணிகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

சட்ட ரீதியில் கூட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் 49% மட்டுமே வேறொரு நிறுவனத்திற்கு வழங்க முடியும் என்றும், அதற்காக இதுவரை எவரும் முன்வரவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

06

## சம்பந்தனின் பூதவுடலுக்கு பாராளுமன்றத்தில் நேற்று இறுதி அஞ்சலி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் இரா.சம்பந்தனின் பூதவுடல் நேற்று பாராளுமன்றத்திற்கு எடுத்து வரப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. நேற்று பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரது பூதவுடல் பாராளுமன்ற வளாத்திற்கு எடுத்து வரப்பட்டதுடன் பாராளுமன்ற முன் வாசலிலிருந்து அவரது பூதவூடல் வைக்கப்பட்டிருந்த கேட்போர் கூட மண்டபம் வரை,

06

# போதைப்பொருள் வர்த்தகர்களிடம் பணம்பெறும் சிலர் அவர்களுக்கு ஆதரவு

## சில சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்களும் உள்ளனர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



போதைப் பொருள் வர்த்தகர்களிடம் பணம் பெற்று யுக்திய இராணுவ நடவடிக்கையை சீர்குலைக்க முயற்சி செய்வோருக்கு அடிபணியப் போவதில்லை என, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார். இவ்வாறு பணம் பெற்று போதைப் பொருள் வர்த்தகர்களுக்கு ஆதரவு வழங்குவோரில் சில சட்டத்தரணிகள் மற்றும் ஊடகவியலாளர்களும் உள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். நாட்டின் எதிர்காலம் மற்றும் எமது எதிர்கால பரம்பரையினரின் நலனைக் கருத்திற்கொண்டு இவ்வாறு செயற்பட வேண்டாமென, அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

யுக்திய நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு ஆறு மாதங்கள் நிறைவுற்றுள்ளது. இது தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வொன்று கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், நாட்டிலிருந்து போதைப் பொருள் மற்றும் பாதாள உலகக் குழுவை இல்லாதொழிக்கும் நடவடிக்கையை தீவிரப் படுத்துமாறு, கடந்த டிசம்பரில் பொலிஸ்மா அதிபர் உட்பட சம்பந்தப்பட்ட பிரிவினருக்கு உத்தரவிட்டேன்.

இந்நடவடிக்கைகளில் எவரானாலும் சரி அரசியல்வாதிகள் பிரபுக்கள் உட்பட எத்தகைய பதவிகள் தராதரங்களைக் கொண்டிருந்தாலும் பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கையை எடுக்குமாறும் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

இது தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழு ஒன்று

06

# வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு: இலங்கைக்கு ஜப்பான் பாராட்டு



பொருளாதார நெருக்கடியை உரியவாறு கையாள்வதிலும், கடன் மறுசீரமைப்பு செயன்முறையைப் பூர்த்திசெய்வதிலும் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொகோ கமிகவா பாராட்டியுள்ளார்.

ஜப்பானிய வெளிவிவகாரஅமைச்சர்யொகோ கமிகவாவின் அழைப்பின்பேரில், உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கடந்த திங்கட்கிழமை (01) ஜப்பான் பயணமானார்.

இதன்படி ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொகோ கமிகவாவுடனான இருதரப்பு சந்திப்பு செவ்வாய்க்கிழமை (02) டோக்கியோவில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது பொருளாதார நெருக்கடியை உரியவாறு கையாள்வதிலும்,

06

## ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தடைவிதிக்க உச்ச நீதிமன்றில் மனு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் அரசியலமைப்பிற்கிணங்க உச்ச நீதிமன்றம் அதன் உறுதிப்பாட்டை தெரிவிக்கும் வரை, ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தடை விதிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டத்தரணி சமிந்த லெனவ என்பவரினால் மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பின் 30 (2) சரத்து உரிய வகையில் திருத்தப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள

06

## திருமலை ஸாஹிரா மாணவியரின் உயர்தர பெறுபேறுகள் வெளியாகின

இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த திருகோணமலை ஸாஹிரா கல்லூரியின் மாணவிகளின் உயர்தர பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டுள்ளதாக, கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று தெரிவித்தார்.

பரீட்சைத் திணைக்களத்தின் பேச்சாளரும் இதனை நேற்று உறுதி செய்தார்.

திருகோணமலை ஸாஹிரா கல்லூரியின் 70 க்கும் மேற்பட்ட மாணவிகளின் உயர்தர பெறுபேறுகள் பரீட்சைகள் திணைக்களத்தால் இடைநிறுத்தப்பட்டன. இவ்விவகாரம் குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் மாணவர்கள் கடந்த மாதம் முறைப்பாடு செய்தனர்.

மாணவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட ஆளுநர் செந்தில் தொண்டமான், அவர்களுடைய பிரச்சினைகள் குறித்து பரீட்சைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடல் மேற்கொண்டு அவர்களுடைய பெறுபேறுகளை வெளியிட தேவையான நடவடிக்கைகளை

06

## பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்கும் காலம் நாளையுடன் நிறைவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

2023 ஆம் ஆண்டுக்கான கல்வி பொது தராதர உயர்தர பரீட்சையில் சித்தியடைந்துள்ள மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான காலம், நாளை வெள்ளிக்கிழமையுடன் நிறைவு பெறுவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இணைய வழியாக மாத்திரமே பல்கலைக்கழகங்களுக்கான விண்ணப்பங்களை

06



03

**அமரர். இரா. சம்பந்தனின் பூதவுடல் ஞாயிறன்று திருமலையில் தகனம்**

இன்று யாழ். நகரில் இறுதி அஞ்சலி



03

இந்திய நடிகர் சல்மான் கானை

**கொலை செய்தபின் இலங்கைக்கு தப்பிச் செல்லவிருந்த குழு கைது**

## மனித உரிமைகளை மீறியோர் தண்டிக்கப்படுவது அவசியம்

### கர்தினால் மெல்கம் ரஞ்சித்



மனித உரிமைகளை மீறியவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். மன்னார் மருதமடு தேவாலயத்தின் நூற்றாண்டு திருவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இனங்களுக்கிடையில்

06

## தொடர் லயன்குடியிருப்பில் தீ விபத்து; கணவன், மனைவி உடல் கருகி பலி

**பொகவந்தலாவ நிருபர்**



எட்டியாந்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனாவத்த தோட்டம் 02ம் பிரிவிலுள்ள தொடர் லயன் குடிருப்பொன்றில், ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் ஐந்து வீடுகள் தீக்கிரையாகி, இருவர் பலியானதாக எட்டியாந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று (03) அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

06

## 67ஆவது மாடியிலிருந்து விழுந்து மாணவன், மாணவி உயிரிழப்பு

### கொழும்பு, கொம்பனித் தெருவில் சம்பவம்

கொழும்பு சர்வதேச பாடசாலையில் கல்வி கற்கும் 15 வயது மாணவன் ஒருவரும் மாணவியும் கொம்பனி வீதியிலுள்ள அடுக்குமாடி கட்டடத்தின் 67ஆவது மாடியிலிருந்து விழுந்து, உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் வெள்ளவத்தை மற்றும் களனி பிரதேசத்தை சேர்ந்தவர்களென பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் விசாரணைகளின்படி, மாணவனும் மாணவியும் சர்வதேச பாடசாலையில் ஒரே

06

## நயினாதீவு கடலில் படகு விபத்து; கடலில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு

### மேலும் மூவர் உயிருடன் மீட்பு

**யாழ். விசேட நிருபர்**



யாழ். குறிகட்டுவானிலிருந்து நயினாதீவுக்குப் பொருட்களை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில், ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார்.

புங்குடுதீவு 03ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கோபி என்றழைக்கப்படும்

# நகர்வலம்



# நாடளாவிய ரீதியில் 26 சுற்றுலா கவர்ச்சிகரமான கடற்கரை திட்டம்

## 11 கரையோர பாதுகாப்பு திட்டமும் முன்னெடுப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், நீர்கொழும்பு, ஹம்பாந்தோட்டை உட்பட நாடளாவிய ரீதியில் கவர்ச்சிகரமான 26 கடற்கரை சுற்றுலா வலயங்கள் உருவாக்கப்பட்டு,11 கரையோர பாதுகாப்பு திட்டங்களும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் பிரசன்னரணதுங்க தெரிவித்தார்.

இதற்காக அடிப்படை வடிவமைப்புகள் மற்றும் கட்டமைப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கரையோர பாதுகாப்பு, கரையோர வள முகாமைத்துவ திணைக்களம் இணைந்து இதனை நடைமுறைப்படுத்துகின்றன.

வன்னாத்திவில்லு ஆற்றின் வாடி, வன்னாத்திவில்லு களப்புத் தீவு, கல்பிட்டி குடா , கல்பிட்டி வைக்கால, நீர்கொழும்பு தடாகம், நீர்கொழும்பு கபுங்கொட, வத்தளை பிரிதிபுர, பெந்தோட்டை கடற்கரை, ஹபராதுவ கொக்கல கடலேரி, திக்வெல்ல சீதாகால்ல, தங்கல்ல ரெகவ கடலேரி, அம்பலாங்கொடை லூனம் கடலேரி, ஹம்பாந்தோட்டை மலலலேயாவ, திஸ்ஸமஹாராம கிரிந்த வெலிமலை, லாஹுகல குனுக்கல கடற்கரை, பொத்துவில் எலிபெண்ட் ரொக், மட்டக்களப்பு கோறளைப்பற்று வடக்கு சல்லதீவு, கிண்ணியா, தம்பலகாமம் குடா, திருகோணமலை ஆளுநரின் அலுவலகப் பகுதி, திருகோணமலை உப்புவெளி, திருகோணமலை சாம்பல் தீவு, குச்சிவெளி அரிசிமலை முல்லைத்தீவு நாயாறு குடா, முல்லைத்தீவு நந்திக்கடல் குடா, யாழ்ப்பாணம் சென்னக்குளம் கடற்கரை, யாழ்ப்பாணம் கசூரினா கடற்கரை ஆகிய கரையோரப் பகுதிகள் இதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன.



கடலோர சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் வகையில் இந்தத் திட்டம் தனியார் துறையுடன் இணைந்து முன்னெடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வருடம் இரணைவில, உப்பாறு, கீரிமுந்தல், மூதூர், காரைதீவு, நிந்தவூர், பூஸா, தல்தியவத்தை, கொக்கல, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காத்தான்குடி, உஸ்வெட்டகெய்யாவ ஆகிய கரையோரங்களில் 14 அவசரகால கரையோர பாதுகாப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அபிவிருத்திப் பணிகளுக்காக 520 மின் அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வருடம் 30 கடற்கரை துப்புரவு வேலைத் திட்டங்களும் 04 சதுப்புநிலத் தாவரங்கள் நடுகை வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம் தெரிவித்துள்ளது. இதற்காக செலவிடப்பட்ட தொகை 300 மில்லியன் ரூபா.

இந்த ஆண்டில், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம் 11 கடலோரப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

# இரா.சம்பந்தன் மறைவுக்கு சர்வமத தலைவர்கள் அனுதாபம்

இலங்கை நாட்டில் பிரிவினைவாதம் இல்லாமல் ஒரு தாய் மக்களாக தத்தம் இனத்தின் அடையாளங்களுடன் சுதந்திரமாக வாழ வேண்டும்.

தாய் நாட்டின் தேசிய கொடியின் கீழ் அனைவரும் ஒரு தாய் மக்களாக ஒன்றாக வாழ வேண்டும் என்ற உணர்வை கொண்டவராக அமரர் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் செயற்பட்டாரென சர்வமத தலைவர்கள் விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டான அரசியல் சூழலில் தளராமல் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்து வந்தவர் சம்பந்தன் ஐயா. அதேவேளை எதிர்கட்சி தலைவராகவும் நல்லாட்சி அரசாங்கத்தில் இருந்து அனைத்து மக்களின் கருத்துகளையும் உள்வாங்கி அரசியல் சாணக்கியமாக செயற்பட்டவர்.

இலங்கை நாட்டினுடைய அனைத்து அரசியல்வாதிகளினாலும் மதிக்கப்படும் பெருந்தலைவராக அவர் வாழ்ந்தார்.

அந்த வகையில் அன்னாரின் மறைவுக்கு அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவன் அருள வேண்டும் என சர்வமத தலைவர்களான வணக்கத்துக்குரிய கலகம தம்மரன்சி தேரர்,சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா, அஷ்ஷெய்க் ஹசன் மௌலானா, அருட்தந்தை நிஷான்குரே ஆகியோர் கூட்டாக இணைந்து இவ் அனுதாப செய்தியை தெரிவித்துள்ளனர்.

# வத்தளையில் யோகா தின நிகழ்வு






சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு வத்தளையில் அமைந்துள்ள *Rhytmic Yoga* நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட யோகா நிகழ்வு கடந்த 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை மாபாகே நவலோக மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வில் மாணவர்கள் மற்றும் ஏனைய பங்கேற்பாளர்கள் யோகாசனத்தில் ஈடுபடுவதையும் பிரதம அதிதியாக பங்கேற்ற கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமாருக்கு *Rhytmic Yoga* நிலையத்தின் பணிப்பாளரும் பயிற்றுவிப்பாளருமான டொனீசியா மயிலேந்திரன் நினைவு பரிசினை வழங்குவதையும் அருகில் வத்தளை நகரசபையின் முன்னாள் உறுப்பினர் சசிகுமார் இருப்பதையும் படங்களில் காணலாம்.



தேசிய ஒருமைப்பாட்டிற்கான பாக்கீர் மாக்கார் மத்திய நிலையத்தின் நிர்வாகக் குழு கூட்டத்தின் பின்னர் அதன் அங்கத்தவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருடன், பாராளுமன்ற வளாகத்தில் எடுத்துக்கொண்ட படம்.




இந்தியாவிற்கான இலங்கையின் துணை உயர் ஸ்தானிகர் டாக்டர் வெங்கடேஷ்வரன், ரோட்டரி நிறுவல் விழாவில், கிரேட்டர் சென்னை கார்ப்பரேஷன் (GCC) ஆணையர் Dr. J. ராதாகிருஷ்ணன் IAS உடன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். இதன்போது மாமல்லபுரம் ரோட்டரி கிளப்பின் தலைவராக போஸ் தர்மலிங்கம் நியமிக்கப்பட்டார்.

துபாய் சயீதா நிதி உதவியில்

# கொழும்பு செபஸ்தியன் கல்லூரியில் அமைக்கப்பட்ட மண்டபம் திறந்து வைப்பு





**ருஸைக் பாரூக்**

துபாய் நாட்டின் சயீதா அறக்கட்டளையின் நிதியுதவியுடன் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் நவ்சர் பௌசியின் ஏற்பாட்டில் கொழும்பு புனித செபஸ்தியன் சிங்கள மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட பிரதான மண்டபத்தின் திறப்பு விழா பாடசாலை அதிபர் ரோஷனி பிரீனா ரபான் தலைமையில் நடைபெற்றது.

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நவ்சர் பௌசி ஆகியோர் முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி பிரதான மண்டபத்தை வைபவரீதியாக திறந்து வைத்தார்.

மேலும் 2023ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 100 மற்றும் 70 க்கு மேல் புள்ளிகளைப்பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றதுடன், புனித செபஸ்தியன் சிங்கள மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் திருமதி ஷிஹானா அஸ்லம் மற்றும் அதிதிகள் இந்நிகழ்வில் மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

கொழும்பு முன்னாள் பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால், செரண்டிப் பாடசாலை மேம்பாட்டு அறக்கட்டளை தலைவர் ரிஸ்வி ஷஹீத், செரண்டிப் கல்வி அறக்கட்டளை தலைவர் பசல் அமானுல்லா, இன்ஸ்பிரேஷன் குழுமத் தலைவி நவாசியா பாரூக், ஸாஹிரா கல்லூரியின் 80 குழு முன்னாள் தலைவர் ஏ.எல். அன்வர், மேமன் ஹுமானிட்டி சொசைட்டி சலீம் ஜாபர், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் , மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வியங்கல்லை மக்களுக்கு உலர் உணவுப்பொதிகள் அன்பளிப்பு

## சீனன்கோட்டை வாழ் மக்களுக்கு நன்றி

களுத்துறை மாவட்டத்தில் உள்ள வியங்கல்லைப் பகுதி அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டது. இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்காக பேருவளை, சீனன்கோட்டைப் பகுதி வாழ் மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட உலர் உணவுப் பொதிகள் சீனன்கோட்டை பிரமுகர்களினால் வியங்கல்லை ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகிகளிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 550 குடும்பங்களுக்கு இதன் போது உலர் உணவுப் பொதிகள் பள்ளிவாசல் நிர்வாகிகளான எச்.எம்.எம். றியாஸ் மற்றும் எம்.ஐ.எம்.இஷாக் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன.



வெள்ளம் ஏற்பட்ட கடந்த 2 ஆம் திகதி முதல் சீனன் கோட்டைப் பகுதி சமூக சேவையாளர்கள் குழுவினர் வியங்கல்லைக்கு விரைந்து சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவுகளை இரவு, பகல் என வழங்கியதோடு, நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு படகு மூலமும் சென்று இவர்கள் உதவிக் கரம் நீட்டியுள்ளனர். இவர்களின் தியாகமிகு சேவைகளுக்கும், உலர் உணவுப் பொதிகள், சமைத்த உணவுகளை உடனுக்குடன் பெற்றுக் கொடுத்த சீனன் கோட்டை வாழ் மக்களுக்கு வியங்கல்லை வாழ் மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**



ஐக்கிய மக்கள் சக்தி பேருவளைப் பிரதான அலுவலகத்தை எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச (01) சீனன் கோட்டையில் திறந்து வைத்தார். ஐ.ம.சக்தி பேருவளை அமைப்பாளர் இப்திகார் ஜெமீல் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் பா. உறுப்பினர்களான அஜித் பெரேரா, அஸ்லம் ஹாஜியார்,ஐ.ம.சக்தி களுத்துறை மாவட்ட அமைப்பாளர் எம்.எம் அம்ஜாத் உட்பட மாவட்டத்தைச் சேர்ந்த தொகுதி அமைப்பாளர்கள், பிரதேச சபை முன்னாள் தலைவர்கள், கட்சி ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

படம் - பேருவளை விசேட நிருபர்

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஜுலை 4 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

தொழுகை நேரம்
சுபஹ் - 04.35
லுஹர் - 12.16
அஸர் - 03.43
மஃரிப் - 06.31
இஷா - 07.47

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆனி 20
ராகுகாலம் : பகல் : 1.27 - 2.57வரை
சுபநேரம் : காலை : 7.27 - 8.57வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## "ரீட் மாவத்தையின் நூற்றாண்டு விழா" சஞ்சிகை ஜனாதிபதியிடம் கையளிப்பு



ரீட் மாவத்தையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அச்சிடப்பட்ட The Royal College Magazine "Celebrating 100 Years at Reid Avenue என்ற சஞ்சிகையின் முதல் பிரதி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று (02) கையளிக்கப்பட்டது. கொழும்பு ரோயல் கல்லூரி அதிபர் திலக் வத்துஹேவா, சிரேஷ்ட பிரதி அதிபர் எல்.டபிள்யூ.கே. சில்வா, உதவி அதிபர் எம்.ஏ.எம்.ரியாஸ், றோயல் கல்லூரி ஒன்றியச் செயலாளர் அருண சமரஜீவ, பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் டபிள்யூ.வி.என்.பி.வேரகொட, மாணவர் தலைவர் டபிள்யூ.ஏ.எஸ்.எஸ்.வனசிங்க, சஞ்சிகை ஆசிரியர் சத்தில் எஸ். தர்மவர்தன மற்றும் றோயல் கல்லூரியின் மாணவ தலைவர்கள் மற்றும் பழைய மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## UNDP இலங்கையின் வதிவிட பிரதிநிதி அசுசா குபோடா பிரதமருடன் சந்திப்பு



ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி திருமதி அசுசா குபோடா அண்மையில் (01) பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை அலரிமாளிகையில் சந்தித்தார். மாற்றம், நல்லிணக்கம் உள்ளடங்கிய ஜனநாயக ஈடுபாட்டை வலுப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் மாண்புகள் மற்றும் பூர்வாங்க பரிந்துரைகளை இதன் போது அவர் பிரதமரிடம் கையளித்தார். STRIDE என்பது உள்ளூர் மட்டத்தில் சேவைகளின் அணுகல் மற்றும் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் சமூகங்கள், உள்ளூராட்சி அமைப்புக்களிடையே உரையாடலை மேம்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தால் நிதியளிக்கப்படும் பல பங்குதாரர்களின் முன்முயற்சியாகும்.

2024 ஜூன் 10 11 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட 'மாற்றத்துக்கான வினையூக்கியாக செயற்படல் – உள்ளூராட்சி அமைப்புகளை எதிர்காலத்திற்கு பொருத்தமானதாக மாற்றுதல்' என்ற தலைப்பிலான தேசிய கருத்தரங்கின் சுருக்கமே பிரதமரிடம் சமர்பிக்கப்பட்டது.

மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களின் அபிவிருத்தி, அரசாங்க பாடசாலைகள், அரச நிறுவனங்களுக்கு சூரிய சக்தி பெனல்களை அமைக்கும் திட்டங்கள், கிராமிய விவசாயப் பொருளாதாரம் மற்றும் பெண்களை மையமாகக் கொண்ட குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஆதரவு போன்ற பல பெறுமதியான விடயங்கள் இத்திட்டத்தில் உள்ளன.

பிரதமருக்குப் பதிலளித்த திருமதி குபோடா, தாங்கள் ஏற்கனவே இந்தப் பகுதிகளில் கவனம் செலுத்தி வருவதாகவும், கிராமப்புற விவசாய மேம்பாட்டுக்கான தங்கள் முயற்சியை விரிவுபடுத்துவதற்காக ஒரு பணிக்குழுவை உருவாக்குவது குறித்து மேலும் கலந்துரையாட விரும்புவதாகவும் கூறினார்.

## தினகரன் 92 வருடங்களுக்கு முன்

### தினகரன்

இன்று 04 ஜூலை 1932


இலவசக் கல்வி
வைத்தியக் கல்லூரி முறையில் அதிருப்தி
விசாரணை
இலங்கை, வைத்தியக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களில் சிலருக்கு வருடா வருடம் இலவசக் கல்வி பத்திரங்கள் வழங்கும் முறையைக் குறித்துப் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டு வந்தன. அதன் பலனாக, அதிகாரிகள் சில விசாரணைகளை நடத்தினார்கள். இவ் விசாரணைகள் மூலம், கல்விக் கட்டணம் கொடுக்க முடியாதென்றும், ஆதலால் இலவசக் கல்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு அருகர் என்றும் கூறப்பட்ட மாணவர்களுள் பலர், மோட்டார்கார்களையுடைய செல்வந்தர்களின் பிள்ளைகளாக இருக்கிறார்களென்றும், அவர்கள் கல்லூரிக்கு வரும்போது கார்களிலேயே வருகிறார்களென்று தெரியவந்தது. ஒரு சந்தர்ப்பத்

### இலவசக் கல்வி

#### வைத்தியக் கல்லூரி முறையில் அதிருப்தி

#### விசாரணை

இலங்கை, வைத்தியக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களில் சிலருக்கு வருடா வருடம் இலவசக் கல்வி பத்திரங்கள் வழங்கும் முறையைக் குறித்துப் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டு வந்தன. அதன் பலனாக, அதிகாரிகள் சில விசாரணைகளை நடத்தினார்கள். இவ்விசாரணைகள் மூலம், கல்விக் கட்டணம் கொடுக்க முடியாதென்றும், ஆதலால் இலவசக் கல்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு அருகர் என்றும் கூறப்பட்ட மாணவர்களுள் பலர், மோட்டார்கார்களையுடைய செல்வந்தர்களின் பிள்ளைகளாக இருக்கிறார்களென்றும், அவர்கள் கல்லூரிக்கு வரும்போது கார்களிலேயே வருகிறார்களெனத் தெரியவந்தது.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

## ஹோமாகமவில் அதிகளவு அபிவிருத்தி செய்த அமைச்சர் பந்துல குணவர்தன எமக்கு கற்பகத்தரு

கல்வி அமைச்சின் பிரிவேன பிரிவின் உதவிப் பணிப்பாளர் மாதோவிட்ட வஜிரபுத்தி நாயக தேரர்





ஹோமாகம பிரதேசத்தில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் வெளிநாட்டுக் கடன் உதவியுடன் அமுல்படுத்தப்படவுள்ள வீதி அபிவிருத்தித் திட்டங்களின் உத்தியோகபூர்வ அங்குரார்ப்பண நிகழ்வு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் ஹோமாகமவில் இடம்பெற்றது.

ஒபெக் கடனுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் வல்கமவிலிருந்து டயகம வரையான வீதியும், சவூதி அரசாங்க கடனுதவியுடன் செயற்படுத்தப்படும் ஹோமாகம தொடக்கம் கொடகம வரையான வீதியும் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இதேவேளை, ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ் விஸ்தரிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட ஹோமாகம பிடிபன சந்தியும் மக்களிடம் கையளிக்கப்பட்டது.மேலும்,பிடிபன சந்தியில் வாகன நெரிசலை குறைக்கும் நோக்கில் கட்டப்பட்ட நடைபாதையும் நவீன வடிவில் திருத்தப்பட்டு பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

"நாட்டின் ஏனைய மாவட்டங்கள் மற்றும் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் ஹோமாகம பிரதேசத்தில் மிகவும் பெறுமதியான பொருளாதார அபிவிருத்தியும் கல்வி அபிவிருத்தியும் ஏற்பட்டுள்ளது.இவ்வளவு சிறந்த அபிவிருத்தியை இப்பிரதேசத்தில் ஏற்படுத்திய அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன எமக்கு கிடைத்தது பெரும் பாக்கியமாகும்.

06

## அமரர்.இரா.சம்பந்தனின் பூதவுடல் ஞாயிறன்று திருமலையில் தகனம்

இன்று யாழ். நகரில் இறுதி அஞ்சலி

அன்புவழிபுரம் தினகரன், யாழ்.விசேட நிருபர்கள்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின்பெருந் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (07) ஞாயிற்றுக் கிழமை திருகோணமலை இந்து மயானத்தில் நடைபெறவுள்ளது. சம்பந்தனின் பூதவுடல் செவ்வாய்க்கிழமை (02) காலை முதல் புதன் கிழமை (03) மதியம் வரை, பொரளை ஏ.எப். ரேமன்ட் மலர்ச்சாலையில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் நேற்று 2.30 மணியிலிருந்து மாலை 04 மணி வரை பாராளுமன்றில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அன்னாரது பூதவுடலுக்கு பிரதமர் உள்ளிட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள், தூதரக அதிகாரிகள் உள்ளிட்ட பொது மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

06

குமண, யால காட்டுப்பகுதியில்

## கதிர்காமம் பாத யாத்திரீகருக்கு இராணுவத்தினர் ஒத்துழைப்பு





வருடாந்த கதிர்காமம் பாத யாத்திரை நேற்று முன்தினம் குமண தேசிய வனப் பூங்காவின் உகந்த தேவாலயத்துக்கருகில் ஆரம்பமானது. பாதயாத்திரை குமண யால தேசிய வனப் பூங்கா ஊடாக சுமார் 79 கிலோ மீற்றர் பயணித்து கதிர்காமம் ஆலயத்தை சென்றடைகிறது.

வருடாந்தம் நடைபெறும் இந்நிகழ்வில் நாடளாவிய ரீதியிலிருந்து பெருமளவிலான அடியார்கள் பங்குபற்றுவதுடன், இந்நிகழ்வை சிறப்பாக நடத்துவதற்கு இராணுவத்தினரால் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

இங்கு பயணிக்கும் பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இராணுவத் தளபதியின் பணிப்புரையின் பிரகாரம் பாத யாத்திரையில் கலந்து கொள்பவர்களுக்கு நீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்க இராணுவத்தினர் ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

## முந்தல் பூனைப்பிட்டி கடற்கரையில் பெண்ணின் சடலம் கரையொதுங்கல்

(உடப்பு குறூப்,கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்கள்)

புத்தளம் உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூனைப்பிட்டி கடற்கரையோரத்தில் பெண்ணொருவரின் சடலம் (02) கரையொதுங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் கரையொதுங்கிய பகுதியில் ஆடு மேய்க்கச் சென்ற ஒருவர், இச்சடலத்தை அவதானித்துள்ளார். உடனடியாக பிரதேச மக்களுடன் இணைந்து அந்த பகுதிக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தரூடாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்கு விஜயம் செய்த உடப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். சடலமாக கரையொதுங்கிய பெண் 40 வயது முதல் 50 வயதுக்கு இடைப்பட்டவரென பொலிஸார் தெரிவித்தனர். பெண்ணின் சடலம் உருக்குலையாத நிலையில் ஆடை எதுவுமின்றி காணப்படுவதாகவும் பொலிஸார் கூறினர். சிறுநீர் வெளியேறுவதற்கான குழாய் பொருத்தப்பட்ட நிலையில் பெண்ணின் சடலம் கரையொதுங்கியுள்ளது. இப்பெண் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவராக இருக்கலாமென தாம் ,சந்தேகிப்பதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் ஏ.எம்.வசீம் ராஜா, பிரேத பரிசோதனைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு சடலத்தை கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

## யுக்திய நடவடிக்கையில் இதுவரை 5979 பேர் கைது

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நாட்டில் இந்த வருடத்தின் டிசம்பர் மாதத்திற்குள் போதைப் பொருள் பாவனையை 50 வீதமாக குறைக்க முடியும் என பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

போதைப் பொருளற்ற நாட்டைக் கட்டி யெழுப்பும் நோக்கில், ஆரம்பிக்கப்பட்ட யுக்திய சுற்றி வளைப்பு நடவடிக்கைகளுக்கு ஆறு மாதம் நிறைவடைந்துள்ளது.

புலனாய்வுப் பிரிவினர் பொலிஸார் மற்றும் பொது மக்களின் ஒத்துழைப்புடன் இதுவரை 5979 நபர்களை கைது செய்ய முடிந்துள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். யுத்திய நடவடிக்கைகளில் இதுவரை கைப்பற்றப்பட்டுள்ள போதைப் பொருட்களின் பெறுமதி 19 ஆயிரத்து 75 மில்லியன் ரூபா என்றும் அவர் தெரிவித்தார். யுத்திய நடவடிக்கைகளின் போது பல்வேறு வகையிலும் தமக்கு அச்சுறுத்தல்கள் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்தாலும், இந்நடவடிக்கையை கைவிடப் போவதில்லை என தெரிவித்த அவர்,

06

இந்திய நடிகர் சல்மான் கானை

## கொலை செய்தபின் இலங்கைக்கு தப்பிச் செல்லவிருந்த குழு கைது

இந்திய திரைப்பட நடிகர் சல்மான்கானை படுகொலை செய்துவிட்டு இலங்கைக்குத் தப்பவிருந்ததாக கூறப்படும் குழு தொடர்பாக, தகவல்கள் வெளியாகியுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஏப்ரல் மாதம் (14) மும்பை – பண்ட்ராவிலுள்ள சல்மான்கானின் பண்ணை வீட்டுக்கு வெளியில், அடையாளம் தெரியாத குழுவொன்று துப்பாக்கிச் சூடு நடத்தியது.

இதனையடுத்து ஐந்து பேர் இச்சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இது தொடர்பான குற்றப்பத்திரிகை நேற்று முன்தினம் (02) மும்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்து, அதன் விபரங்களை இந்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

இதில் சல்மான்கானை படப்பிடிப்பின் போது சுட்டுக் கொல்வதற்கு அந்தக் குழு திட்டமிட்டிருந்தமை தெரியவந்துள்ளதாக, பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இதற்காகக் கடந்தாண்டு ஒகஸ்ட் மாதம் முதல் அவர்கள் திட்டமிட்டு வந்திருப்பதாகவும், இதற்கென அதிநவீன ஆயுதங்களைப் பாகிஸ்தான் மற்றும் துருக்கியிலிருந்து கொள்வனவு செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 20ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜஹ் பிறை 27

## குறள் தரும் சிந்தனை



கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்

ஒருவர் செய்யும் மிகக் கொடுமையான தீமைகூட நமது உள்ளத்தைப் புண்படுத்தாமல் அகன்றுவிட வேண்டுமானால், அந்த ஒருவர் முன்னர் நமக்குச் செய்த நன்மையை மட்டும் நினைத்துப் பார்த்தாலே போதுமானது.

# நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றுபடுவதன் அவசியம்

இலங்கை மிகவும் முக்கியமான காலகட்டத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறது. இருந்தும் இக்காலகட்டத்தின் முக்கியத்துவமும் பெறுமதியும் ஒரு சில அரசியல் தலைவர்களால் புரிந்து கொள்ளப்படாதிருப்பதாகவே தெரிகிறது. அதேநேரம் இன்னும் ஓரிரு அரசியல் தலைவர்கள் இக்காலக்கட்டத்தின் முக்கியத்துவத்தை அறிந்திருக்கின்ற போதிலும், நாட்டின் நலன்களை விடவும் கட்சி நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுகின்றனர். நாடு மீண்டும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாவதோ, கஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் மக்கள் உள்ளாவதோ பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை. தங்களது அற்ப அரசியல் நலன்களே இவர்களது ஒரே இலக்காக உள்ளது. ஆனால் இவர்களைப் பற்றி மக்கள் அறியாதவர்கள் அல்லர்.

கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் இந்நாடு கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானது. அந்த வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க முடியாத நிலையில் அன்றைய ஆட்சியாளர்கள் தம் பதவிகளை விட்டு விலகிச் சென்றனர். அந்தச் சூழலில் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தார். இப்பொருளாதார நெருக்கடியை அவர் தன் அரசியல் நலன்களுக்காக பயன்படுத்தவில்லை. மாறாக பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதே அவரது ஒரே நோக்கமும் இலக்கும் ஆகும். அதற்கேற்பவே அவர் முடிவுகளையும் தீர்மானங்களையும் எடுத்தார். அதன் பயனாக 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நாட்டில் நிலவிய நெருக்கடிகளும் அசௌகரியங்களும் குறுகிய காலத்திற்குள் நீங்கத் தொடங்கின.

இந்தச் சூழலில் இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளக்கட்டியெழுப்புவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி, ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. அந்நிதியம் அளித்துவரும் உதவி ஒத்துழைப்புக்கள் என்றும் மறக்க முடியாதவை.

இவ்வாறான பின்னணியில் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்று நம்பிக்கை அளிக்கும் வகையில் நாடு முன்னோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது. இப்பயணம் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை நாட்டில் ஏற்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். அதன் நிமித்தம் விரிவான அடிப்படையில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பொருளாதார நெருக்கடி நாட்டில் மீண்டும் ஒரு தடவை ஏற்படுவதற்கு இடமளிக்காத வகையில் இவ்வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கின்றன. அதனால் கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் இவ்வேலைத்திட்டங்களின் வெற்றிக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்குவது அவசியம்.

இப்பின்புலத்தில்தான் ஜனாதிபதி, நாட்டை மீளக் கட்டியெழுப்பும் சவாலான முயற்சியில் கட்சி, நிற வேறுபாடுகளின்றி இணையுமாறு நாட்டை நேசிப்பவர்கள் அனைவருக்கும் பல சந்தர்ப்பங்களில் அழைப்பு விடுத்திருக்கிறார். இவ்வழைப்பின் பின்புலத்தில் பலர் நேரடியாகவும் சிலர் எதிரணியில் இருந்தபடி அமைதியாகவும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கி வருகின்றனர். தனிப்பட்ட தேவைகளை விடவும் நாட்டின் நலன்கள் குறித்து சிந்திப்பவர்கள் நாட்டில் பலர் உள்ளனர் என்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டாகும். அவர்களது எதிர்பார்ப்பும் விருப்பமும் நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியேயாகும்.

நாடொன்றை நிலைபேறான வகையில் கட்டியெழுப்புவதற்கு நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பினரதும் ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியமான காலகட்டத்திலேயே நாடு பயணித்துக் கொண்டிருக்கிறது. அற்ப அரசியல் இலாபம் தேடுவதற்காக அரசியல் செய்வதற்கான காலம் இதுவல்ல.

இப்பின்னணியில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது, 'அரசியல் அதிகாரத்திற்காகவோ, அரசியல் பிரபல்யத்திற்காகவோ நான் தீர்மானங்களை எடுப்பதில்லை. நாட்டிற்காகவும், இளைஞர்களின் எதிர்காலத்திற்காகவுமே தீர்மானங்களை எடுக்கிறேன். கடந்த இரண்டு வருடங்கள் நான் அரசியல் செய்யவுமில்லை. அரசியல் இலாபங்களைப் பெறுவதற்காகத் தீர்மானங்களை எடுக்கவுமில்லை. அதனால் நான் விரும்பும், விரும்பாத, என்னை மதிக்கும், மதிக்காத இச்சபையில் அங்கம் வகிக்கும் அனைத்து உறுப்பினர்களிடமும் நாட்டைப் பற்றி சிந்தித்து நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் இணைந்து கொள்ளுமாறு மீண்டும் அழைப்பு விடுகின்றேன்' என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

கட்சி, அரசியல் பேதங்களுக்கு அப்பால் நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப உண்மையாகவே உழைப்பவரின் அழைப்பு எவ்வாறு இருக்குமோ அதனையே ஜனாதிபதியின் இவ்வழைப்பு வெளிப்படுத்தி நிற்கிறது. நாட்டை உண்மையாக நேசிப்பவர்களின் கூற்றும் அதுவேயாகும்.

ஆகவே ஜனாதிபதியின் அழைப்புக்கு ஏற்ப நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான பணியில் கட்சி, அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். அது ஒவ்வொரு பிரஜையினதும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# வடக்கு–கிழக்கை இணைக்கும் சகவாழ்வு நிகழ்ச்சித் திட்டம்

இனங்களுக்கு இடையில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல், கலாசாரப் பண்புகளைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் தொடர்பாடல் பிரச்சினைகளைக் குறைத்து பரஸ்பர புரிந்துணர்வைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் தேசிய இளைஞர் படையணி இளைஞர் பயிலிளவல்களுக்கு நடத்தப்பட்ட மூன்று நாள் வடக்கு_தெற்கு சகவாழ்வு நிகழ்ச்சித் திட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்தது.

அதன் முதல் நாளன்று திவுலப்பிட்டிய பயிற்சி நிலையத்தில் உற்சாகமான வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றதுடன், தெற்கின் அறுஞ்சுவை உணவு மேசை வடக்கிலுள்ள இளைஞர்களின் சுவாரசியமான அம்சமாக இருந்தது.

இரண்டாம் நாளன்று ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம், இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார வரலாற்று அருங்காட்சியகம், தாமரை கோபுரம், விஹாரமஹா தேவி பூங்கா மற்றும் கொழும்பு நகரைச் சுற்றியுள்ள சிறப்பு இடங்களையும் பார்வையிடுவதற்கான வாய்ப்பு கிடைத்ததுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் மற்றும் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் பங்குபற்றும் வாய்ப்பும் இளைஞர் பயிலிளவல்களுக்கு கிடைத்தது.

மூன்றாம் நாள் காலையில், அத்தனகல்ல ரஜமஹா விகாரை, கம்பஹா ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா ஆகிய இடங்களுக்குச் சென்ற இளைஞர் பயிலிளவல்கள் அன்று மாலை திவுலப்பிட்டிய பயிற்சி நிலையத்தில் கிரிக்கெட் மற்றும் கரப்பந்து விளையாட்டுகளில் கலந்து கொண்டனர். அன்றைய தினம் இரவில் தீப்பாசறை மற்றும் கலாசார நிகழ்ச்சியும் திவுலப்பிட்டி பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.



தேசிய இளைஞர் படையணி பணிப்பாளர் பிரிகேடியர் சுஜீவ ரத்நாயக்க, யூ.எஸ்.பி பிஎஸ்சி ஐஜீ, மேலதிக பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) சட்டத்தரணி நிஷாந்த புஷ்பகுமார, மேலதிக பணிப்பாளர் (பயிற்சி மற்றும் அபிவிருத்தி) ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் மற்றும் உதவிப் பணிப்பாளர்கள், மேல் மாகாண பணிப்பாளர் கேர்ணல் எல்பீ மென்டிஸ் மற்றும் வடமாகாண பணிப்பாளர் கேர்ணல் அமித் லியனகே ஆகியோரின் நெறிப்படுத்தலில் இந்நிகழ்ச்சி இடம்பெற்றது.





நிலையப் பொறுப்பதிகாரிகள், நிலைய பணியாளர்கள், பிரதம அலுவலக பணியாளர்கள் மற்றும் இளைஞர் பயிலிளவல்கள் இத்திட்டத்தில் பங்குபற்றினர்.

மேஜர் வா.சுதர்ஸ்சன்...
இராணுவ ஊடக மற்றும் உளவியல் செயற்பாட்டு பணிப்பகம்
இராணுவத் தலைமையகம்
ஸ்ரீ ஜயவர்தனபுர

# கொட்டாஞ்சேனை ஸ்ரீ சீரடி சாயி நாதர் சரணாலயத்துக்கு வருகை தரும் சுவாமி பிரம்மயோகானந்தா மஹாராஜ்

பூஜ்ய ஸ்ரீ சுவாமி பிரம்மயோகானந்தா மஹாராஜ் அவர்கள் எதிர் வரும் 11 ஆம் திகதி மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை கொழும்பு கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் கோயில் வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சீரடி சாயி நாதர் சரணாலயத்துக்கு வருகை தர இருக்கிறார்.

அவர் 'வேதநெறி வாழ்க்கை முறை' என்னும் தலைப்பில் ஆன்மிக உரை நிகழ்த்தி பின்பு பக்தர்களுக்கு அருளாசி வழங்க இருக்கிறார்.

சுவாமிகள் தமிழ்நாடு, பாரதத்தைச் சேர்ந்த ஒரு ஆன்மீக ஆசிரியர் ஆவார். அவர் உலகளாவிய அன்பையும் நல்லிணக்கத்தையும் கடைப்பிடித்து வருகிறார். ஏழைகளுக்கு சேவை செய்வதை தேசசேவையாகக் கருதி, தனது 17 ஆவது வயதில் வீட்டை விட்டு வெளியேறினார்.

இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக ஆன்மீகப்பணி ஆற்றி வரும் சுவாமிகள், 1995 ஆம் ஆண்டில் சென்னையில் யோக சாந்தி குருகுலத்தை நிறுவி, ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு யோகா கற்பித்தார்.

அயோத்தியில் இராமர் கோயில் நிர்மாணத்திற்காக, 16 கோடிக்கும் அதிகமான காயத்ரி ஜெபம், 328 கோடிக்கும் அதிகமான விஜயமந்திர ஜபத்தைச் செய்ய பக்தர்களை ஊக்கப்படுத்தி வழிநடத்தினார்.



கிராம மக்களை ஈஸ்வரருடன் இணைக்க ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு கிராமங்களில் 27 இற்கும் மேற்பட்ட கோயில்களின் கும்பாபிஷேகங்களை நிகழ்த்தினார். வீட்டுக்கு வீடு பிரசாரம் செய்து, கிராம மக்களுக்கு 2000 இற்கும் மேற்பட்ட தீபங்களை விநியோகித்து, நாளைத் தொடங்க ஒரு விளக்கை ஏற்ற ஊக்குவித்தார். பாடசாலை மாணவர்களுக்கு ஸ்லோகங்கள் கற்பித்தல் மற்றும் ஒழுக்கத்தை வளர்ப்பது போன்றவை, அருகிலுள்ள அரசுப் பள்ளிகளில் வருகை மற்றும் தேர்ச்சி சதவீதத்தை அதிகரிக்க உதவியது. அத்துடன் குற்ற வீதம், வீட்டு துஷ்பிரயோகத்தைக் குறைக்க உதவியது. அவர் நடத்திய மதுபோதை ஒழிப்பு இயக்கம் இங்கு குறிப்பிடத்தக்கது.

அவரது நீலமங்கலம் ஆசிரம வளாகத்திற்குள், பண்டிகை நாட்களில் அன்னதானம் மற்றும் வஸ்திர தானம் செய்வதுடன் நின்றுவிடாமல், உஜ்ஜைனி மகா காளேஷ்வர் கோவிலையும் சுவாமிகள் கட்டியுள்ளார்.

பாரத் மாதாவுக்கு ஒரு தனிக்கோயிலைக் கட்டி மே 2023 இல் கும்பாபிஷேகம் நடத்தினார். வேதாந்த ஆசிரியரான சுவாமிஜி இதிகாசங்கள், பகவத் கீதை, 10 முக்கிய உபநிடதங்கள், வியாசரின் பிரம்ம சூத்திரங்கள் போன்றவற்றைக் கற்பித்து வருகிறார்.

அகண்ட் ஐக்யா பாரத் யாத்திரையின் வழியில் சுவாமிஜி இலங்கை உட்பட உலகின் பல நாடுகளுக்கும் பயணித்துள்ளார்.

சுவாமிஜியின் அமைதியான பிரசன்னத்தில் மக்கள் அமைதியை அனுபவித்து, அவரது ஞான உபதேசங்கள் மூலம் தங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்கின்றனர்.

இலங்கை சீதையம்மன் ஆலயம், ரம்பொட ஆஞ்சநேயர் ஆலயம், அவிசாவளை சீரடி பாபா ஆசிரமம், கொழும்பு தெமட்டகொட ஸ்ரீ செந்தில்குமரன் ஆலயம் மற்றும் தொண்டீஸ்வரம் ஸ்ரீ உத்பலவர்ணன் ஆலயம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்து வழிபாடு செய்ய இருக்கிறார். விபரங்களுக்கு +94 (74) 045 0906 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இறைஅடியார்கள் சுவாமிகளை தரிசனம் செய்து ஆசி பெற முடியுமென்று அறங்காவலர் குழு தெரிவித்துள்ளது.

# உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒப்பற்ற இலக்கியப் படைப்பாளி மக்சிம் கார்க்கி

உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒப்பற்ற இலக்கியப் படைப்பாளி மக்சிம் கார்க்கி உயிர்நீத்த நாள் ஜூன் 18 ஆகும். உழைக்கும் மக்களுக்காக எழுச்சி விதைகளை விதைத்தவர் கார்க்கி. அவரது நினைவுநாள் ஜூன் 18 சர்வதேச இலக்கிய பரப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

முற்போக்கு இலக்கியத்தில் கூடியளவு வாசிக்கப்பட்ட முதன்மையான நூல் மக்சிம் கார்க்கியின் 'தாய்' என்றே கூறலாம். உலகம் வியந்த 'தாய்' நாவலைப் படைத்த மக்சிம் கார்க்கி உலகப் புகழ் பெற்ற இலக்கியப் படைப்பாளர்கள் வரிசையில் முன் நிற்கிறார்.

மேற்கத்திய தொழிற்புரட்சிக்குப் பின்னர் புதிய இலக்கிய வகைகளும் உத்திகளும் தோன்றின. தொழிற்சாலை முறை தோற்றுவித்த அவலங்கள் சுரண்டல், வறுமை, பிணி, ஏற்றத்தாழ்வுகள், சமூகக் கொடுமைகள் பற்றிப் பாடல்களும், சிறுகதைகளும் புதினங்களும் வெளிவந்தன.

மத்திய காலத்தில் இத்தாலியில் லியனார்டோ டா வின்சி கண்ட மறுமலர்ச்சி இயக்கம் பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பரவிச் செல்வாக்குப் பெற்று ரஷ்ய நாட்டையும் பாதித்தது.

கார்க்கி 1868 மார்ச் 28ஆம் நாள் ரஷ்யாவில் நிஜினி நோவோகார்டு என்னும் இடத்தில் பிறந்தார். இவருடைய இயற்பெயர் அலக்ஸி என்பதாகும். இவருடைய தந்தையார் ஒரு தச்சுத் தொழிலாளி. சிறுவயதிலேயே தந்தையை இழந்தார். தாயும் மறுமணம் செய்துகொண்டார். எனவே அலக்ஸி தம் தாய்ப்பாட்டியால் வளர்க்கப்பட்டார். இதனால் வாழ்நாள் முழுதும் பாட்டியிடம் பாசமும், பரிவும், நன்றியும் காட்டி வந்தார், இவரை வளர்த்து ஆளாக்கிய பெருமை பாட்டிக்கு உரியது.

1879 இல் அவருடைய தாய் இறந்தார். சிறுவனாக இருந்தபோதே பல பணிகளைச் செய்ய வேண்டியவரானார். முதலில் காலணிகள் உற்பத்தித் தொழிற்சாலையில் வேலைக்குச் சேர்ந்தார். ஓர் ஆண்டுக்குப் பிறகு கட்டட ஒப்பந்தகாரரிடம் வேலை செய்தார். வேலை கடினமாக இருந்ததால் தப்பியோடி டோப்ரி என்னும் பயணக்கப்பலில் வேலைக்குச் சேர்ந்தார். கப்பலில் சமையல்காரராக இருந்த மிகைல் அகிமோவிச் என்பவர் அவருக்குப் புத்தகங்கள் படிப்பதற்கு ஆர்வம் ஊட்டினார். கோகோல், ஹேன்றி பீல்டிங் முதலான நாவல் ஆசிரியர்கள் அறிமுகமானார்கள்.

இதற்குப் பின் ஏராளமான படைப்புகளைச் சிறிது காலத்திலேயே படித்து முடித்தார். சோஷலிச கம்யூனிச கருத்துகள் ஐரோப்பிய நாடுகள் முழுவதிலும் பரவி உறக்கத்தில் ஆழ்ந்திருந்த மக்களைத் தட்டி எழுப்பின.

ரஷ்யாவை ஆண்ட ஜார் மன்னன் மக்களுக்குக் கொடுமை இழைப்பதை ஒரு பெருமையாகவே கருதினான். எதேச்சதிகாரமும் கொடுங்கோன்மையும் அடக்குமுறையும் ஜார் மன்னனுக்கு கைவந்த கலை.

இலக்கிய வாசிப்பு படிப்பு பயிற்சி கார்க்கியின் அறிவைக் கூராக்கியது. சிந்தனையை விரிவாக்கியது. அவரும் எழுதத் தொடங்கினார்.

1896ஆம் ஆண்டு அச்சுப்பிழை திருத்துவதில் துணைவராக இருந்த ஏகடரினா பவ்



லோவ்னா வால்ழினா என்னும் பெண்ணை வாழ்க்கைத் துணைவியாகத் தேர்ந்தெடுத்தார். 1898 இல் 'படங்களும் கதைகளும்' தொகுதிகள் வெளிவந்தன, அவர் டிப்லிஸ் நகரில் இருந்தபோது சமூக ஜனநாயக அமைப்புடன் தொடர்புகொண்டு இருந்ததற்காகச் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்து விடுதலையான பின்னர் தொடர்ந்து பொலிஸ்துறையின் கண்காணிப்பில் இருந்தார்.

1899 இல் அவருடைய 'பாமா கோர்தயேவ்' என்னும் நாவல் வெளிவந்தது. 1990 இல் லியோடால்டாயைச் சந்தித்துக் கருத்து பரிமாறிக்கொண்டார். 1901ஆம் ஆண்டு புரட்சி இயக்கத்தில் மிக தீவிரமாகப் பங்குபெற்றார். அறிவியல் கழகம் அவரை உறுப்பினராகச் சேர்த்துக்கொண்டது 'பெட்டிபூர்ஷ்வா' என்னும் நாவல் 1902இல் வெளிவந்தது.

தீவிரவாத நடவடிக்கைகள் காரணமாக அரசு அவரை அர்சமஸ் நகருக்கு கடத்திற்று. 'சோர்மோவோ' தொழிலாளர்கள் கிளர்ச்சியில் பங்கு பெற்றார். நிஜினி நோவோகார்டில் தொழிலாளர் ஆர்ப்பாட்டம் தீவிரமாக நடைபெற்றது.

1917, 1921இல் புரட்சி முடிந்து, சில ஆண்டுகளில் லெனின்_கார்க்கி உறவு வலுப்பட்டதோடு சில தகராறுகளும் ஏற்பட்டன. கார்க்கியை லெனின் அதிகமாக மதித்தார், நேசித்தார். ஆனால், அதேபோது அவருடைய பிழைகளைத் திருத்தத் தயங்கியதில்லை.

கார்க்கியின் படைப்புகள் மீண்டும் மீண்டும் அச்சாயின. 1936இல் கார்க்கி நோய்வாய்ப்பட்டார். குடும்பத்தினர் கட்சியினர் முழு அக்கறைகாட்டியும் ஜூன் 18 அன்று காலை 11 மணிக்கு உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒப்புயர்வற்ற இலக்கியப் படைப்பாளி உயிர் நீத்தார்.



ஐங்கரன் விக்கினேஸ்வரா...

# ஸிகா வைரஸ் பரவுவதால் இந்திய அரசு எச்சரிக்கை!

இந்தியாவில் பரவும் ஸிகா வைரஸ் தொடர்பாக எச்சரிக்கையுடன் இருக்கும்படி அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

டெங்கு மற்றும் சிக்குன் குனியா போன்ற தொற்றுநோய்களை பரப்பும், ஏடிஸ் வகை நுளம்பு வாயிலாகவே ஸிகா வைரஸ் பரவி வருகிறது. குறிப்பாக, மஹாராஷ்டிராவில் இரண்டு கர்ப்பமான பெண்கள் உள்பட 7 பேருக்கு ஸிகா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில், ஸிகா வைரஸ் தொடர்பாக எச்சரிக்கையுடன் இருக்கும்படி அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், புனேவில் கர்ப்பிணிப் பெண்கள் உட்பட 7 பேருக்கு ஸிகா வைரஸ் பாதிப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் ஸிகா வைரஸ் பரவலை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தலைவலி, மூட்டு வலி

மருத்துவமனைகள் அனைத்தையும் கண்காணித்து போதிய சிகிச்சை அளிக்க வேண்டும். கொசு பெருக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.




காய்ச்சல், தோல் வெடிப்பு, தலைவலி, மூட்டு வலி 7 நாட்களுக்கு நீடித்தால், மக்கள் டாக்டரை அணுக வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மறைந்த இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு பாராளுமன்றில் அஞ்சலி



படங்கள் சுலோச்சன கமகே

# ஆரிய ரூபசிங்கவின் 'சுய சரித நூல்' நாளை வெள்ளிக்கிழமை வெளியீடு



நாட்டின் ஊடகத்துறையில் சில காலங்களுக்கு முன் அனைவராலும் பேசப்பட்ட ஒரு பாத்திரம் ஆரிய ரூபசிங்க. அவரது வாழ்க்கைப் பாதையினதும் சேவைப் பணியினதும் சவாலான மற்றும் சர்ச்சைக்குரிய அம்சங்களை நூலின் மூலம் வெளிப்படுத்தும், 'ஏ தமா ஆரி' என்னும் வாழ்க்கை சரித நூல் வெளியீட்டு விழா நாளை 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு, அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

ஆரிய ரூபசிங்க, விடுதலைப் புலிகளின் பயங்கரவாத அச்சுறுத்தல் உச்சத்திலிருந்த காலப்பகுதியில், அரசாங்க செய்திப் பணிப்பாளராகவும், போர்ச் செய்திகளை வெளியிடும் தகுதி வாய்ந்த அதிகாரியாகவும் இருந்தார்.

தகுதிவாய்ந்த அதிகாரத்தின் நிலைப்பாடு மற்றும் அதன் நடைமுறைகள் பத்திரிகையாளர்களால் அடிக்கடி தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டாலும் 'ஆரி' அன்பான நண்பராக இருந்தார்.

கடந்த சில தசாப்தங்களில் இந்நாட்டில் நிலவிய அரசியல், சமூக, பொருளாதார, கலாசாரத்துறைகள் பற்றிய அறியப்படாத பல தகவல்கள் ''ஏ தமா ஆரி' நூலில் வெளியாகியுள்ளன.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் சிறப்புரையை சிரேஷ்ட நிருவாக உத்தியோகத்தர் ஓய்வுபெற்ற ஜனாதிபதி செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ ஆற்றவுள்ளார். திலீப் குலதுங்க எழுதிய ''ஏ தமா ஆரி' புத்தகம்.

டபிள்யூ.எம்.கே.விஜயபண்டார படைப்பு இயக்குநராகப் பங்களித்துள்ள இந்நூலின் சிறப்பு புகைப்படப்பதிவை சரத் பெரேரா செய்துள்ளார். 'ஏ தமா ஆரி' ஒரு சரசவி வெளியீடாகும்.

## பல்கலைக்கழகங்களுக்கு...

அனுப்ப முடியும் என்றும், உரிய காலப்பகுதிக்குள் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் அந்த ஆணைக்குழு கேட்டுள்ளது.இதற்கிணங்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் www.ugc.ac.lk என்ற உத்தியோகபூர்வ இணையதளத்தில் பிரவேசித்து, விண்ணப்பங்களை உரிய முறையில் அனுப்பி வைக்க முடியும் என்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## மனித உரிமைகளை மீறியோர்...

பேதங்களை ஏற்படுத்தி முரண்பாடுகளை உண்டாக்கியவாறு முன்னெடுத்துச் செல்லப்பட்ட கொள்கை, ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னர் மேலும் வலுவடைந்தது. இன, மத பேதங்களை உண்டாக்கியதுடன், நாட்டைத் துண்டாக்கி அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்த அரசியல்வாதிகளே இவ்வாறான கொள்கைகளைக் கொண்டு சென்றதுடன், தொடர்ந்தும் கொண்டு செல்கின்றனர்.காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரிக்கப்பட வேண்டும். இன, மத பேதங்களைத் தூண்டிவிட்டு, ஸ்திரமற்ற நிலையை உருவாக்கியவர்கள் குறித்து, விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் கர்தினால் மெல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டு கடன்மறு சீரமைப்பு:...

கடன்மறுசீரமைப்பு செயன்முறையைப் பூர்த்திசெய்வதிலும் இலங்கையினால் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் பாராட்டுத் தெரிவித்தார். அதுமாத்திரமன்றி இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு தொடர்புகளை மேலும் விரிவுபடுத்துவது குறித்துக் கலந்துரையாடப்பட்டது. மனிதவளப் பரிமாற்றத்தை வலுப்படுத்துதல் உள்ளடங்கலாக பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு ஏதுவான வாய்ப்புக்கள் தொடர்பிலும் இங்கு ஆராயப்பட்டது.

## ஆசிரியர் நியமனத்தைப் பெற்றதும்...

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் சுசில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

''இந்த ஆசிரியர் நியமனங்களை வழங்குவது இலகுவான காரியமல்ல. பொருளாதார நெருக்கடி நிலையிலும் இந்த ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்கான சவாலை நாங்கள் ஏற்றுக்கொண்டோம். இன்று தேசிய பாடசாலைகளுக்கு சுமார் 2,000 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஸ்ரீலங்கா ஏயர்லயன்ஸ்,...

ஜனாதிபதி ஊடக மையத்தில் (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு தேவையான கடன் மறுசீரமைப்பின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் விளக்கமளித்தார். அரசியல் காரணங்களுக்காக, எதிர்க்கட்சிகள் இது நற்செய்தி அல்ல என்று கூறினாலும், நாட்டைப் பற்றி சிந்தித்தால், இது மிகவும் ஒரு நற்செய்தி என்பதைக் கூற வேண்டும்.

சர்வதேச நாணய நிதியம் யாருடைய முகத்தையும் பார்க்காமல், சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் அளவுகோல்களின் அடிப்படையில் மாத்திரமே மறுசீரமைப்பு செயல்பாட்டில் ஈடுபடுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கூற்றுப்படி, ஆர்ஜென்டீனா, ஈக்வடோர் ( Ecuador) மற்றும் கானாவில், இருதரப்புக் கடன்களுக்காக அன்றி, வர்த்தகக் கடன்களுக்கே ( Commercial Loans) 25% கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

## சம்பந்தனின் பூதவுடலுக்கு...

செங்கம்பளம் விரிக்கப்பட்டு அவருக்கு மரியாதை செலுத்தப்பட்டது. பாராளுமன்ற முன் வாசலிலிருந்து அவரது பூதவுடலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோர் தலைமையிலான பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு பொறுப்பேற்றது.

அதனையடுத்து சபாநாயகர்,பிரதமர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, மற்றும் வெளிநாட்டு தூதுவர்களும் மலர் வளையங்கள் வைத்து அன்னாரின் பூதவுடலுக்குக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். பாராளுமன்ற வளாகப் பகுதி நேற்றைய தினம் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டு சோகமயமாகக் காட்சியளித்தது.

சுசில் பிரேம ஜயந்த, மஹிந்த அமரவீர, ஜீவன் தொண்டமான், உள்ளிட்ட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண ஆளுநர்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற செயலாளர் நாயகம் உள்ளிட்ட பாராளுமன்ற உயர் அதிகாரிகள் எனப் பெருந்திரளானோர் அன்னாரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர். அத்துடன் அங்கு வைக்கப்பட்டிருந்த நினைவுப் பதிவேட்டில் பிரதமர், சபாநாயகர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்களும் கையொப்பமிட்டனர்.

இதனையடுத்து 3.30 மணியளவில் பாராளுமன்றத்திலிருந்து மீண்டும் அவரது பூதவுடல் சபாநாயகர் மற்றும் பிரதமரினால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவர்களால் பாராளுமன்ற வாசல் வரை பூதவுடல் சுமந்து செல்லப்பட்டு மீண்டும் வாகனத்தில் ஏற்றப்பட்டது.

## ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு...

அவர், அதற்கான வியாக்கியானத்தை பெற்றுத் தருமாறு அந்த மனுவில் கோரியுள்ளார். அந்த மனுவில் பிரதிவாதிகளாக தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர், ஆணையாளர்கள், மற்றும் சட்டமா அதிபரும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அந்த மனு விசாரணை நிறைவு பெறும் வரை ஜனாதிபதித் தேர்தல் நடத்துவதை இடைநிறுத்தி தடையுத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறும் அரசியலமைப்பின் 30 (2)சரத்து உரிய வகையில் திருத்தப்படவில்லை என்பது தொடர்பில் உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறும் அந்த மனுவில் மேற்படி சட்டத்தரணி கோரியுள்ளார்.

# இன்றைய பலன்கள் (04.07.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
உத்தியோகத்தில் புதியவர்களிடம் வெளிப்படையாக அலுவலக விஷயங்களில் பேசுவது பிரச்சினையை ஏற்படுத்தும்.



**ரிஷபம் :**
சிலருக்கு அலுவலகத்தில் எதிர்பார்த்த கடன் தொகை வந்து சேரலாம். சொந்த தொழில் செய்பவர்கள் வாடிக்கையாளர்களின் ரசனை அறிந்து பணிகளை செய்து கொடுத்து பாராட்டு பெறுவார்கள் .



**மிதுனம்:**
சொந்தத் தொழில் செய்பவர்கள் தங்கள் பணிகளில் நிதானத்தோடு செயற்படாவிட்டால் வாடிக்கையாளர்களிடம் நல்ல பெயர் வாங்க இயலாது.



**கடகம்:**
பணிச்சுமை அதிகரித்தாலும் ஏற்கனவே செய்து கொடுத்த பணிகளில் உண்டான குறைகளை சரி செய்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும்.



**சிம்மம்:**
சொந்தத் தொழில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்காமல் போகலாம். பணிகளில் தடை தாமதங்களை சந்திப்பீர்கள்.



**கன்னி:**
கூட்டுத் தொழிலில் எதிர்பார்க்கும் லாபம் பெற கடின உழைப்பு தேவைப்படும். குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை இருந்தாலும் சிறு சிறு பிரச்சனைகளும் தோன்றத்தான் செய்யும்.



**துலாம்:**
எதிர்பார்த்த லாபம் கிடைத்து மகிழ்ச்சிப்படுத்தும். கூட்டுத்தொழிலில் பணியாளர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள்.



**விருச்சிகம்:**
குடும்பத்தில் திட்டமிட்டபடி சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். இல்லத்தில் மகிழ்ச்சி கூடும். பெண்களுக்கு பிரச்சனை நீங்கி கணவன் வழி உறவுகள் பலப்படும்.



**தனுசு:**
வியாபாரத்தை விரிவாக்க பங்குதாரர்களோடு ஆலோசிப்பீர்கள். போட்டிகள் அதிகரிப்பதால் அவற்றை முறியடிக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது இருக்கும்.



**மகரம்:**
கூட்டுத் தொழிலில் லாபம் அதிகரிக்கும். தொழில் நிறுவனத்தை விரிவாக்கம் செய்வது பற்றியும் புதிய கிளைகள் தொடங்குவது பற்றி கூட்டாளிகளுடன் ஆலோசிப்பீர்கள்.



**கும்பம்:**
உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளை அனுசரித்து செல்லுங்கள். சொந்த தொழிலில் வாடிக்கையாளரின் அவசர வேலைகளை முடிக்க ஓய்வின்றி பணியாற்றுவீர்கள்.



**மீனம்:**
பழைய வாடிக்கையாளர்கள் புதிய நபரை அறிமுகப்படுத்துவர். அவரால் தொழில் முன்னேற்றம் ஏற்படும்.

## பாடசாலை கல்வியை சீர்குலைக்க...

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிள்ளைகளின் கல்வியில் சகலரும் கவனம் செலுத்துமாறும் நாசகார செயல்களுக்கு ஆதரவளிக்க வேண்டாமெனவும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்காலத்தில் இணையவழி முறையில் ஆசிரியர் இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு வழங்குவது தொடர்பில் கல்வி அமைச்சருடன் கலந்துரையாடியதாகத் தெரிவித்த ஜனாதிபதி, பதவி உயர்வு அல்லது ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் எவருக்கும் அநீதி இழைக்க இடமளிக்கப்பட மாட்டாதெனவும் வலியுறுத்தினார்.

அரச சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 60 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டதுடன் 1,706 பட்டதாரிகளுக்கும் 453 ஆங்கில டிப்ளோமா பெற்றவர்களுக்கும் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடையாளமாக சில நியமனங்களை வழங்கி வைத்தார். இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

''நிர்வாக சேவை மற்றும் ஆசிரியர் சேவையில் நுழையும் உங்கள் அனைவரையும் நான் வாழ்த்துகிறேன். இன்று நீங்கள் ஒரு முக்கியமான பொறுப்பை ஏற்கிறீர்கள். கடந்த இரண்டு வருடங்களில் நாடு வங்குரோத்தடைந்த போதும், அந்த வங்குரோத்து நிலையிலிருந்து வெளிவர நடவடிக்கை எடுத்த போதும் கல்விக்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டது. வெற்றிடங்களுக்காக மாத்திரமன்றி மேலதிகமாகவும் ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்தோம். இக்கட்டான காலங்களிலும் நாட்டின் எதிர்காலத்தை மையமாக வைத்து இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

நம் எதிர்காலமே நமது குழந்தைகள் தான். அதனால்தான், மாறிவரும் உலகில் புதிய அறிவு மற்றும் நவீன தொழில்நுட்ப அறிவுடன் எதிர்கால சந்ததியினரைப் பலப்படுத்த அரசு செயற்பட்டு வருகிறது. அது நமது அனைவரின் பொறுப்பாகும்.

எனவே, கௌரவமான தொழிலில் ஈடுபடும் அனைவரும் எதிர்கால சந்ததியினருக்காக தங்கள் சேவையை அர்ப்பணிக்க வேண்டும். ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும். ஒழுக்கம் இல்லாமல் ஒரு நாட்டில் கல்வியைப் பேண முடியாது. உங்கள் வகுப்பறையில் 40 50 மாணவர்கள் இருக்கலாம். ஆனால் ஆசிரியருக்கும் இராணுவ அதிகாரிக்கும் வித்தியாசம் உண்டு. இராணுவ அதிகாரிகளின் கீழ் பயிற்சி பெற்ற மூத்தவர்கள் உள்ளனர். ஆனால் உங்களிடம் 18 வயதுக்குட்பட்ட நபர்களே உள்ளனர். இதில் கவனம் செலுத்தி செயற்பட வேண்டும். நாட்டின் கல்வியைப் பாதுகாக்காது, கல்வி முறையை சீர்குலைத்தால், நம் எதிர்கால சந்ததியை இழக்க நேரிடும்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப, நாம் வேகமாக முன்னேற வேண்டும். 85 பில்லியன் டொலர்களாக இருந்த நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியை அடுத்த 20 25 ஆண்டுகளில் குறைந்தபட்சம் 350 பில்லியன் டொலர்களாக உயர்த்த முயற்சிக்க வேண்டும். இது நமது எதிர்கால சந்ததியினருக்காக செய்யப்பட வேண்டும்.

அதற்கிணங்க குழந்தைகளின் எதிர்காலத்தில் கவனம் செலுத்தி அதற்கு முன்னுரிமை கொடுப்பது நம் அனைவரின் பொறுப்பாகும். ஆசிரிய சேவை என்பது மற்ற சேவைகளிலிருந்து வேறுபட்ட சேவை என்றே சொல்ல வேண்டும். அந்த கண்ணியத்தைப் பாதுகாக்க வேண்டும்.

தற்பொழுது பாடசாலைகளின் ஒழுக்கத்தைப் பாதுகாக்க வேண்டும். பாடசாலைகளில் நடக்கும் இந்த வேலை நிறுத்தங்கள் நல்லதல்ல. அப்படி வேலை நிறுத்தம் செய்வதற்கு எந்த காரணமும் இல்லை. 2022ஆம் ஆண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்பு மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டு அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பத்தாயிரம் ரூபா கொடுப்பனவொன்றை வழங்கினோம். நாட்டின் பொருளாதார சூழ்நிலையில், அதற்கு மேல் வழங்க முடியாது. அதன்பிறகு, சில தொழிற்சங்கங்கள் இதை மறுபரிசீலனை செய்து கூடுதலாக வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளன. ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு கோருவது எனக்கு ஆச்சரியமாக உள்ளது. அவர்களுக்கு இரண்டு சம்பள உயர்வு வழங்கினோம்.

அண்மையில் ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அவர்கள் வகுப்பறைக்கு வரவில்லை. கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். பல்கலைக்கழக மாணவர்களும் ஏனைய மக்களும் வந்து, கூச்சலிட்டு, ஜனாதிபதி அலுவலகத்திற்கு வர முயற்சி செய்தனர். வீதித் தடைகளை தள்ளி, கண்ணீர் புகைக் குண்டுக்கு மத்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இது ஒரு புதிய நிகழ்வு அல்ல. ஆனால் கௌரவமான தொழிலுக்கு அது பொருந்தாது.

அன்று, ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் செய்தபோது, வரவுப் பதிவுகளில் கையெழுத்திடாமல் பிள்ளைகளுக்கு பாடம் நடத்தினார்கள். சில நாடுகளில் கருப்பு பட்டியுடன் கற்பிக்கின்றனர். ஆனால் அண்மையில் நடத்தப்பட்ட வேலை நிறுத்தம் முற்றிலும் மாறுபட்டது.

தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் இந்நிலை காணப்படவில்லை. பிள்ளைகளுக்கான கல்வி நடவடிக்கைகளை நடத்தினர். அத்துடன் சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் உரிய முறையில் பேணப்பட்டது.

ஆனால் அனைத்து சிங்கள மொழி மூலப் பாடசாலைகளிலும் கல்வி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. சாதாரண கிராமங்களைச் சேர்ந்த ஏழைப் பிள்ளைகள் இந்தப் பாடசாலைகளுக்கே செல்கின்றனர். இதுவா ஆசிரியர் பணியின் பொறுப்பு? என்று கேள்வி எழுப்ப விரும்புகிறேன். தமிழ், முஸ்லிம் பாடசாலைகளின் ஆசிரியர்கள் கல்வியின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டுள்ளனர். நுவரெலியா போன்ற பிரதேசங்களில் சிங்கள மொழி மூலப் பாடசாலைகள் நடைபெறாத போது தமிழ் மொழிப் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்தன. இவ்வாறான நிலை நாட்டில் ஏற்படக் கூடாது.

சில பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு பாடசாலைக்கு வரக்கூடாது என மிரட்டல் விடுத்தனர். அரசாங்கம் எதுவும் செய்யவில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். அதேபோன்று அவர்களுக்கு ஆதரவாக செயற்படுகின்றார்கள் என்று எதிர்க்கட்சிகள் எம்மீது குற்றம் சாட்டுகின்றனர். இது ஒரு நல்ல நிலைமை இல்லை.

காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை யாரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாடசாலைக் கல்வியை சீர்குலைக்க முடியாது. இது தொடர்பான பரிந்துரையொன்றை வழங்குமாறு நான் சட்ட மாஅதிபரிடம் தெரிவித்தேன். பாடசாலையை மூடுவதன் மூலமோ, வேலை நிறுத்தம் செய்வதன் மூலமோ பிள்ளைகளின் கல்வியை யாரும் சீர்குலைக்க முடியாது. எதிர்கால சந்ததியினருக்காக நாம் அந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும்

ஆசிரியர் இடமாற்றல் முறையை கணினி மூலம் செய்யலாமா என்பது குறித்து அமைச்சரிடம் நேற்று கலந்துரையாடினேன். இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

## திருமலை ஸாஹிரா மாணவியரின்...

மேற்கொண்டிருந்தார். இதன்படி அவர்களுடைய பெறுபேறுகள் கல்வி அமைச்சினால் நேற்று வெளியிடப்பட்டன.

## தொடர் லயன்குடியிருப்பில் தீ விபத்து...

இரவு வேளை லயன் குடியிருப்பிலுள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளை, திடீரென லயன் குடியிருப்பில் தீ பற்றிக் கொண்டதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதில் ஒரு குடியிருப்பில் இருந்த கணவனும் மனைவியும் தீயில் கருகி பலியாகினர். மேலதிக விசாரணைகளுக்காக சம்பவ இடத்துக்கு தடைவியல் பொலிஸார் அழைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் 60 வயதான சொக்கன் வீரசீங்கம் மற்றும் 50 வயதான முத்தையா சாந்திதேவி ஆகிய தம்பதியினரே பலியானதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

தீயில் கருகிய இருவரின் சடலங்களும் நீதவான் தலைமையிலான மரண விசாரணைகள் நிறைவடைந்ததும் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக கரவணல வைத்தியசாலைக்கு சடலம் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

## 67ஆவது மாடியிலிருந்து விழுந்து...

வகுப்பில் கல்வி கற்று வந்ததாகவும், நேற்று முன்தினம் பாடசாலை நேரம் முடிந்ததும் கட்டடத்தில் நடைபெற்ற விருந்தில் கலந்து கொண்டதாகவும் தெரியவந்துள்ளது. இந்த விருந்தில் சுமார் 100 மாணவர்கள் கலந்து கொண்டதாக கூறப்படுகிறது. நேற்று முன்தினம் மாலை இவர்கள் 67ஆவது மாடியிலிருந்து குதித்துள்ளதாகவும், 03 ஆவது மாடியின் மேல் தளத்தில் அவர்களின் உடல் கண்டெடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நயினாதீவு கடலில் படகு விபத்து...

இந்திரலிங்கம் அருண் என்ற (42 வயது) இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

குறிகட்டுவானுக்கும் நயினாதீவுக்குமிடையில் பொருட்களை ஏற்றி இறக்கலில் ஈடுபட்ட படகு, நான்கு தொழிலாளர்களுடன் செவ்வாய்க்கிழமை இரவு 07 மணியளவில் நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.இதில், படகில் பயணித்த நால்வரும் கடலில் வீழ்ந்தனர்.

இவர்கள் கரை நோக்கி நீந்திய வேளை, கிராம மக்களின் உதவியுடன் மூவர் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். மற்றையவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார். உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அமரர்.இரா.சம்பந்தனின்...(03 ஆம் பக்க தொடர்ச்சி)

சம்பந்தன் கல்வி கற்ற பாடசாலைகளில் ஒன்றான யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையினர், அன்னாரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இதனையடுத்து அமரர் இராஜவரோதயம் சம்பந்தனின் பூதவுடல் விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு யாழ். தந்தை செல்வா கலையரங்கில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். இன்று வியாழக்கிழமை (04) காலை 10 மணி முதல் மாலை 04 மணி வரை அன்னாரது பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த முடியுமென கட்சியினர் அறிவித்துள்ளனர்.

சம்பந்தனின் இறுதிக்கிரியை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் நடைபெறவுள்ளமையால் யாழ்ப்பாணத்திலிருந்து பூதவுடல் திருகோணமலைக்கு த ரைவழிப்பா தையூடாக கொண்டு செல்லப்படும்.

நாளை வெள்ளிக்கிழமை (05) முதல் ஞாயிற்றுக்கிழமை (07) வரை அன்னாரது இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 07 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று மாலை 4.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

## போதைப்பொருள் வர்த்தகர்களிடம்...

நியமிக்கப்பட்டு இதற்கான நடவடிக்கைகள் முறைப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## யுக்திய நடவடிக்கையில்...(03 ஆம் பக்க தொடர்ச்சி)

நாட்டில் இறுதியான ஒரு போதைப் பொருள் வர்த்தகரை கைது செய்யும் வரை இந்த நடவடிக்கைகள் தொடரும் என்றும் தெரிவித்தார். யுத்திய நடவடிக்கைக்கு ஆறு மாதங்கள் நிறைவு பெறும் நிலையில், இது தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வொன்று கொழும்பில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உட்பட துறை சார்ந்த முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர் ; போதைப் பொருள் வர்த்தகத்தை மேற்கொள்வோர் பலர் சுமார் 40 வருடங்களாக இரண்டு மூன்று பரம்பரையாக இந்த போதைப் பொருள் வர்த்தகத்தை மேற்கொண்டு வருகின்றனர். இதன் மூலம் அவர்கள் சம்பாதித்த சொத்துக்கள், பங்களாக்கள், கார்கள் என அனைத்தையும் அரசுடமையாக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பெரும்பாலானவர்கள் மேல் மாகாணத்திலேயே உள்ளனர். அவர்களில் எஞ்சியுள்ளவர்களையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

## ஹோமாகமவில் அதிகளவு...(03 ஆம் பக்க தொடர்ச்சி)

பிரதேசத்தில் ஆறு பல்கலைக்கழகங்கள், மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி,மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கம் போன்ற பல தனித்துவமான அபிவிருத்தி திட்டங்களை ஹோமாகம பிரதேசத்திற்கு கொண்டு வந்தமைக்காக எமது மரியாதைக்கும் ஆசிகளுக்கும் உரியவராகிறார். பதினைந்து வருடங்களுக்கு முன்னர் அவருக்கு தனிப்பட்ட முறையில் கிடைத்த எண்பது இலட்சம் ரூபாவை ஹோமாகம தம்ம பாடசாலைகளுக்கு பகிர்ந்தளித்தார். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களைக் கொண்ட குழு ஹோமாகமவிற்கு வரவழைக்கப்பட்டு அவர்களுக்கு பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் ஞாயிறு பாடசாலை சீருடைகள் வழங்கப்பட்டன. ஊடகங்கள் மூலம் இதுபோன்ற விஷயங்களை யாரும் பிரசாரம் செய்வதில்லை. நாட்டுக்கு எவ்வளவோ நல்ல தொண்டு செய்தாலும் யாரும் அதில் கவனம் செலுத்துவதில்லை. இவ்வாறான நிலையில் கலாநிதி பந்துல குணவர்தன இந்தப் பிரதேசத்திற்கு ஆற்றிய மாபெரும் பணியை நாம் பாராட்ட வேண்டும். நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் பெரும்பாலான திட்டங்களை ஹோமாகம பிரதேசத்திற்கு பெற்றுக்கொடுத்து இந்த பிரதேசத்தை அபிவிருத்தி அடைந்த நகரமாக மாற்றுவதற்கு அவர் உறுதியளித்துள்ளார். தொழில்நுட்ப பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் உயர்தர மாணவர்களுக்கு புதிய பாதை திறக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன,

“கடந்த நான்கு தசாப்தங்களில் இலங்கையில் எந்தவொரு அரசாங்கமும் செலவினங்களை ஈடுசெய்யும் அளவுக்கு வருமானத்தை ஈட்ட முடியவில்லை. 2023 இல் மக்கள் மீது பாரிய வரிச்சுமையை சுமத்தி பெறப்பட்ட வரி வருமானம் மற்றும் வரி அல்லாத வருமானம் மூன்று இலட்சம் கோடியே. அதற்கேற்ப 4.7 ட்ரில்லியன் அரசாங்கத்தை நடத்துவதற்காக 1.7 லட்சம் கோடி கடனாகப் பெறப்பட்டிருக்கிறது, இதைப் புரிந்து கொள்ளாத ஒருவர் பொதுமக்களின் பணத்தில் இந்த வளர்ச்சிப் பணிகளைச் செய்கிறார் என்றால் அது முழுப் பொய்யாகும். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெறப்பட்ட கடன்களில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்தால் நாடு வீழ்ச்சியடையும் என பொருளாதார நிபுணர்கள் அரசாங்கத்திற்கு அறிவித்திருந்தார்கள். இதிலிருந்து விடுபட நிபுணர்களின் ஆதரவைப் பெற வேண்டும் என அன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சரவைக்கு அறிவித்தார். இந்தப் பொறுப்பு; சர்வதேச அனுபவத்துடன் மிகவும் பொருத்தமான நிறுவனமான பிரான்சின் லாசார்ட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. சர்வதேசரீதியில் முகம் கொடுக்க கூடிய வழக்குகளுக்காக கிளிப்ட் ஹான்ஸ் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அத்துடன், கடன் மறுசீரமைப்புக்காக சர்வதேச நாணய நிதியத்தை அணுக வேண்டியுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார். அவ்வேளையில் அமைச்சரவையில் பிளவு ஏற்பட்டது. சில அமைச்சர்கள் அமைச்சரவையில் இருந்து விலகத் தயாரானார்கள். இதன் காரணமாக சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்ல முடியாமல் போனது. அந்த சூழ்நிலையால், நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை சந்திக்க நேரிட்டது. அனைத்து வெளிநாட்டு கையிருப்புகளும் தீர்ந்தன. இந்த சந்தர்ப்பத்தை சில சக்திகள் அரசாங்கத்துக்கு எதிராக பயன்படுத்தியதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்

# கம்பளை புப்புரஸ்ஸ – உனுகலை பிரதான வீதி அமைச்சர் பந்துல குணவர்தனவால் திறந்துவைப்பு

**கம்பளை நிருபர்**

கம்பளை புப்புரஸ்ஸ நகரில் இருந்து உனுகலை பிரதேசத்திற்குச் செல்லும் பிரதான வீதி காபட் வீதியாக மக்கள் பாவனைக்கு அண்மையில் ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்தின தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர் அருண பிரசாத் மற்றும் பெரும் தொகையான பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## மலைச்சாரல்

# தேயிலைத் தூளில் சுண்ணாம்பு, சீனி கலப்பது உடல் நலத்துக்கு பாதிப்பு

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார மற்றும் பொருட்களின் அதிக விலை அதிகரிப்பு நெருக்கடி நிலையை சாதகமாகப் பயன்படுத்தி கலப்படம் செய்யப்பட்ட தேயிலைத் தூள் சந்தையில் விற்கப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது. தேயிலை கழிவுகளை அரைத்து சுண்ணாம்பு கலத்தல் மற்றும் தேயிலை தூளுக்கு சீனி கலந்து இவ்வாறு கலப்படம் செய்வதாக துறைசார்ந்த அனுபவம் பெற்ற நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

தேயிலைத் தூள் உற்பத்தி ஆவதற்கு முன் தேயிலை கொழுந்து பதப்படுத்தப்படும் போது தேயிலைத் தூளை அதிகமாகவும் கறுப்பு நிறமாக மாற்றுவதற்காகவே இந்த கலப்பட முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

அதேபோன்று தேயிலைத் தூளின் சாயத்தை அதிகரிப்பதற்காக சுண்ணாம்பு கலக்கப்படுவதாகவும் இதனால் தேயிலைத்தூளில் அதிக சாயம் கிடைப்பதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால் நுகர்வோர், நோய் சுகாதார சீர்கேடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதாகவும் இவ்வாறான தொழிற்சாலைகளை இனங்கண்டு அவற்றுக்கெதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# குடியிருப்பு எரிந்து இருவர் மரணம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

யட்டியாந்தோட்டை பெலெல்லேகம தோட்டத்தில் தொழிலாளர் குடியிருப்பு பகுதியில் தீயில் எரிந்து இருவர் பலியாகியுள்ளனர். நேற்று (3) அதிகாலை இடம் பெற்ற இத்தீச்சம்பவத்தில் 3 இருப்பிடங்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் 60 வயதான ஆண் ஒருவரும் 50 வயதான பெண் ஒருவரும் பலியாகி உள்ளதாகவும் தீவிபத்துக்கான காரணம் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

# இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்திக்காக 2959.52 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

**(பலாங்கொடை தினகரன் நிருபர்)**

2024 ஆம் ஆண்டின் இரத்தினபுரி மாவட்டத்தின் அபிவிருத்தி பணிகளுக்காக 2959.52 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட பணிப்பாளர் (திட்டமிடல்) லலித் பம்பர பொடுவ தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்ட செயலாளரும் மாவட்ட இணைப்பு கமிட்டி கூட்ட செயலாளருமான வசந்த குணரத்னவின் அழைப்பின் கீழ் இரத்தினபுரி மாவட்ட இணைப்பு கமிட்டி கூட்ட சம தலைவர்களான சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அகில சாலிய எல்லாவல ஆகியோர் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பணிப்பாளர் (திட்டமிடல்) மேலும் கருத்து தெரிவிக்கையில் 2024 ஆம் ஆண்டில் மலையக கிராம அபிவிருத்தி வேலை திட்டத்திற்காக 1400 மில்லியன் ரூபாவும் நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டத்திற்காக 638 மில்லியன் ரூபாவும் கிராமிய பாதை அபிவிருத்தி பணிகளுக்காக 760 மில்லியன் ரூபாவும் சௌபாக்கிய உற்பத்தி கிராம வேலை திட்டத்திற்காக 16.52 மில்லியன் ரூபாவும் மின்சார வேலி அமைப்பதற்காக 14 மில்லியன் ரூபாவும் கித்துல் அபிவிருத்தி பணிகளுக்காக 01 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

### நுவரெலியா ஸ்ரீ சீதையம்மன் ஆலய

# மண்டலாபிஷேக பூர்த்தி விழா, திருக்கல்யாணம் மற்றும் பட்டாபிஷேகம்

**நுவரெலியா நிருபர்**

நுவரெலியா சீதையம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மண்டாலாபிஷேக பூர்த்தி விழாவும் திருக்கல்யாணம் மற்றும் பட்டாபிஷேகம் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

06ஆம் திகதி சனிக்கிழமை ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்தி சீதையம்மன சமேத ஸ்ரீ இலட்சுமணன் ஸ்ரீ ஆஞ்சநேயர் உற்சவ மூர்த்திகள் அலங்கரிக்கப்பட்ட விசேட ஊர்தியில் காலை 8.00 மணிக்கு நுவரெலியா ஆவெலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகி உடபுஸ்ஸல்லாவ வீதி வழியாக நுவரெலியா பொருளாதார மத்திய நிலையம் தர்மபால சுற்றுவட்டம் நுவரெலியா பிரதான தபாற்கந்தோர் கண்டி வீதி ஜனாதிபதி மாளிகை ஊடாக கண்டி வீதியில் அமைந்துள்ள விநாயகர் ஆலயத்தை சென்றடைந்து அங்கு விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்று அங்கிருந்து மீண்டும் நுவரெலியா புதிய கடை வீதி, பிரதான வீதி, பதுளை வீதி வழியாக மாகாஸ்தோட்ட கட்டுமானை ஊடாக சீத்தாஎலிய எஸ்போட் வீரந்தகத்தின் முன்பு ஆரம்பமாகும் பால்குட பவனியுடன் ஊர்வலம் இணைந்து கொண்டு ஸ்ரீ சீதையம்மன் ஆலயத்தை காலை 11.00 மணியளவில் வந்தடையும்.

தொடர்ந்து 1008 சங்காபிஷேக பூஜை நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

07ஆம் திகதி காலை 8.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் பூஜைகள் ஆரம்பமாகி தொடர்ந்து ராமர் சீதா திருக்கல்யாணம் நடைபெற்று பட்டாபிஷேகம் இடம்பெறும். அதனை தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதான பிரசாதம் வழங்கப்படும்.

இந்த இரண்டு நாள் நிகழ்வுகளிலும் பக்த அடியார்கள் கலந்து கொண்டு சீதா பிராட்டியின் அருளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

# கதிர்காமத்திற்கு பக்தர்கள் படையெடுப்பு

**(ஊவா சுழற்சி நிருபர்)**

மலையகத்தின் வெல்லவாய மற்றும் புத்தள பிரதேசங்களில் இருந்து கதிர்காம கந்தனை தரிசிக்க பக்தர்கள் கால்நடையாக செல்வதைக் காணக்கூடியதாக வுள்ளது.

குறிப்பாக ஹட்டன், பொகவன்தலாவை, தலவாக்கலை, நானுஓயா, நுவரேலியா, ஹக்கலை, பண்டாரவளை, எல்ல, வெள்ளவாய, புத்தள வழியாக "அரோகரா கதிர்காம கந்தனுக்கு அரோகரா" என கோசங்களை எழுப்பியாவாறு நூற்றுக்கு மேற்பட்ட யாத்திரிகர்கள் கதிர்காமத்திற்கு செல்கின்றனர்.

இவர்களை அருகிலுள்ள கிராம மக்கள் வரவேற்று நீர் பந்தல் அமைத்து குடி நீர் மற்றும் குளிர் பானம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியா-தலவாக்கலை தனியார் போக்குவரத்தை சீர்செய்யுங்கள்!

**ஆ.ரமேஸ்**

நுவரெலியாவிலிருந்து தலவாக்கலை வரை தனியார் பஸ்களின் பணிபகிஷ்கரிப்பு நான்காவது நாளாகவும் தொடர்கிறது.

இந்த நிலையில் தனியார் பஸ்களை நம்பி நுவரெலியாவிலிருந்து தலவாக்கலைக்கும், தலவாக்கலையிலிருந்து நுவரெலியாவுக்கும் பயணிக்கும் பயணிகளின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், நுவரெலியா தொடக்கம் ஹட்டன் வரை பயணிக்கும் சொகுசு பஸ் சேவை வழமைக்கு திரும்பியுள்ளது.

அதேநேரத்தில் நுவரெலியாவிலிருந்து தலவாக்கலையை நோக்கி நானு ஓயா டெஸ்போட் சுற்று பாதையில் பயணிக்கும் அதிக அளவிலான பயணிகளின் போக்குவரத்து நன்மை கருதி இவ்வீதி ஊடாக இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களை அதிகரித்து சேவையில் ஈடுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன் வரவேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



இது இவ்வாறிருக்க

ஹட்டனில் இருந்த பயணிக்கும் தனியார் சொகுசு பஸ்சேவை, மற்றும் தலவாக்கலையிலிருந்து நுவரெலியா, டயகமை வரையும் மற்றும் குறுந்தூர சேவையில் ஈடுப்படும் தனியார் பஸ் சேவை உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துனர்கள் இடையில் கடந்த மூன்று நாட்களாக இடம்பெற்ற முறுகல் நிலைக்கு சமரச பேச்சு நடத்த மத்திய மாகாண தனியார் போக்குவரத்து அதிகார சபை உயர்மட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும் தனியார் பஸ் சாரதிகள் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பிலும் ,தலவாக்கலை தொடக்கம் நுவரெலியா வரை சேவையில் ஈடுப்பட்ட தனியார் பஸ் தாக்கப்பட்டது தொடர்பிலும் லிந்துலை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்டிருந்த முறைப்பாட்டுக்கு அமைவாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த இருவர் (02) மாலை நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

அதேநேரம் இதுவரை காலமும் நுவரெலியாவிலிருந்து இரதல்ல குறுந்தூர பாதை வழியாக ஹட்டன் நோக்கி பயணித்து வந்த தனியார் சொகுசு பஸ்களை நானு ஓயா டெஸ்போட் சுற்று பாதையில் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென தலவாக்கலை நுவரெலியா தனியார் பஸ் சாரதிகள் வேண்டுகோள் ஒன்றை மாகாண போக்குவரத்து சபைக்கு முன் வைத்துள்ளனர்.

இந்த நிலையில் இரதல்ல குறுந்தூர வீதியில் செலுத்தப்படும் சொகுசு பஸ்கள் பயணிகளை ஏற்றியபின் இவ்வீதியில் பயணிக்க தடை உத்தரவிடப்பட்டுள்ள கனரக வாகனங்களின் பாரத்திற்கு உட்படுத்தால் சொகுசு பஸ் சேவை இவ் வீதியில் நிறுத்தப்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கே/ பாபுல் ஹஸன் மத்திய கல்லூரியின் மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டி

கேகாலை மாவட்டம் வரக்காபொல கே/ பாபுல் ஹஸன் மத்திய கல்லூரியின் 80 வருடத்தை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பழைய மாணவர்களுக்கிடையிலான மாபெரும் மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டி இம்மாதம் ஜூலை 20, 21 ஆம் திகதிகளில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

போட்டியில் பங்குபெற விரும்பும் (வயதெல்லை மட்டுப்படுத்தப்பட வில்லை) பாபுல் ஹஸன் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரும் தொடர்பு கொள்ளவும்.

# வத்துகாமத்தில் ஓய்வூதியம் பெறுவோரின் கூட்டம்

**(அக்குறணை குறூப் நிருபர்)**

ஓய்வூதியம் பெறுபவர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் பாத்ததும்பறைத் தொகுதி அங்கத்தவர்களது கூட்டம் ஒன்று வத்துகாமத்தில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதி வத்துகாமம் வித்தியாதர்சன விகாரையில் அமைந்துள்ள பிரிவேனா மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

எதிர் வரும் 25ஆம் திகதி இடம் பெறவுள்ள மேற்படி தேசிய அமைப்பின் மாவட்ட கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ள விடயங்களுக்கு தேவையான விபரங்கள் திரட்டப்படவுள்ளதாகவும் பாத்ததும்பறைத் தெகுதியைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்கள் இதில் கலந்து கொள்ளும்படியும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# பிரதேச அபிவிருத்திகளை கவனிக்க இணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்

**ஆ.ரமேஸ்**

நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச வாரியாக முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி பணிகளை கண்காணித்து அதை விரைவுபடுத்துவதற்கான பணிகளுக்கு புதிய இணைப்பாளர்களை மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே நியமித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஆலோசனைக்கு அமைவாகவும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதுபாண்டி ராமேஸ்வரன் ஆகியோரின் வழிகாட்டலுக்கு அமைவாகவும் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு மத்திய மாகாண ஆளுனர் லலித் யு கமகே தலைலையில் மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை (01) இடம்பெற்றது.

உள்ளூராட்சி மன்ற சபைகளின் ஊடாக கொண்டு செல்லப்படுகின்ற சகல அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேலும் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்காகவே முன்னாள் தவிசாளர்கள் உள்ளடங்கலாக இந்த விஷேட நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஹட்டன்டிக்கோயா நகர சபைக்கு தயாளன் குமாரசாமி நியமிக்கப்பட்டுள்ளார். நுவரெலியா மாநகர சபைக்கு முன்னால் தலைவர் சந்தனலால் கருணாரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். நுவரெலியா பிரதேசத்திற்கு வேலு யோகராஜ், கொட்டகலை பிரதேசத்திற்கு ராஜமனி பிரசாந்த், மஸ்கெலியா பிரதேசத்திற்கு கோவிந்தன் சென்பகவள்ளி, நோர்வுட் பிரதேசத்திற்கு ரவி குழந்தைவேல், அக்கரபத்தனை பிரதேசத்திற்கு எஸ்.சச்சிதானந்தன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.



மலையக மக்கள் முன்னணியின் மத்திய குழு உறுப்பினரும் நுவரெலியா மாவட்ட தொழிற்சங்க பணிப்பாளரும் விளையாட்டு வீரருமான அமரர் செல்வநாதன் அவர்களுக்கு கௌரவத்துடனான இறுதி அஞ்சலியை மலையக மக்கள் முன்னனியின் தலைவர் இராதாகிருஷ்ணனின் ஏற்பாட்டில், செயலாளர் நாயகம், மலையக தொழிலாளர் முன்னணியின் பொது செயளாளர், நிதி செயலாளர், மத்திய குழு உறுப்பினர்கள், காரியாலய உத்தியோகஸ்தர்கள், மாவட்ட தலைவர்கள், தோட்ட தலைவர்கள் உள்ளிட்டோர் செலுதியபோது.

# வெடிகுண்டு சோதனை

**(அக்குறணை குறூப் நிருபர்)**

கண்டி நீதிமன்ற வளாகத்தில் வெடிகுண்டு இருப்பதாக பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவுக்கு (119) கிடைத்த தகவலுக்கு அமைய நீதிமன்ற வளாகத்தில் அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி, அங்குள்ள மக்களை வெளியேற்றி விரிவான சோதனையில் ஈடுபட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை (02) காலை 10.00 மணியளவில் இந்த தொலைபேசி அழைப்பு கிடைக்கப்பெற்றதையடுத்து உடனடியாக விசேட அதிரடிப்படையின் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினர் சம்பவ இடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
செவ்வாய் 2024.07.02
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

| | | |
|---|---|---|
| மஹஜன சம்பத | சீட்டிழுப்பு இலக்கம் 5522 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.36,317,736.00 |
| ஆங்கில எழுத்து A | வெற்றி இலக்கங்கள் | 7 4 8 0 7 9 |
| அத சம்பத | சீட்டிழுப்பு இலக்கம் 097 | ஆங்கில எழுத்து A; வெற்றி இலக்கங்கள் 8 0 7 9 |
| கொவிசெத | சீட்டிழுப்பு இலக்கம் 3764; சீட்டிழுப்பு திகதி 2024.07.02 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.63,858,432.76 |
| ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கங்கள் 11 18 35 71; விசேட எழுத்து E | இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 28475 |
| Mega Power | சீட்டிழுப்பு இலக்கம் 1870; 2024.07.02; 84425 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.437,547,526.00 |
| ஆங்கில எழுத்து L | சுப்பர் இலக்கம் 13; வெற்றி இலக்கங்கள் 03 19 38 46 | அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 |
| VIP | திகதி 2024.07.02; சீட்டிழுப்பு இலக்கம் 348 | ஆங்கில எழுத்து R; வெற்றி இலக்கங்கள் 3 9 1 8 0 7; L7 எழுத்து R |
| | | அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 32,080,479.28 |
| ராசி சுப பலன் | திகதி 2024.07.02; சீட்டிழுப்பு இலக்கம் 831 | அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,000,000.00 |
| வெற்றி இலக்கினம் கன்னி | வெற்றி இலக்கங்கள் 39 41 49 51 | தனயோக இலக்கம் 33299; நாளுக்கான விதி எண் 04 |
| தன நிதானய | சீட்டிழுப்பு இலக்கம் 1552; 2024.07.02 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 99,234,631.60 |
| ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கங்கள் 34 56 71 81; விசேட எழுத்து I | இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 77685 |

# காமன் கூத்துக் கலைஞர் பொன். பாலகிருஸ்ணன் எழுதிய

# 'ரதி மதன் நவரத்தின பாடல்கள் 100' என்ற நூலின் வெளியீடு

மலையக மண்ணின் உன்னத கலை காக்கும் காமன் கூத்துக் கலைஞர் பொன் பாலகிருஸ்ணன் ரதி மதன் நவரத்தின பாடல்கள் – 100 என்ற நூலை வெளிக்கொணர்ந்துள்ளார். அவர் இத்துறைக்காக பல கலை கலாசார அமைப்புக்களின் பாராட்டுக்களையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். அந்த வகையில் சமீபத்தில் மலையக கலை கலாசார இரத்தின தீப சங்கத்தினால் அவர் பொன்னாடை போர்த்தி சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இக்கலைஞரின் காமன் கூத்துக் கலை தொடர்பிலான நடவடிக்கைகளையும் அவர் சமீபத்தில் வெளியிட்ட நூல்கள் தொடர்பான கருத்துக்களை தேசமான்ய சந்திர வதனா ரட்ண ராஜ குருக்கள் தனது பார்வையின் பதிவில் வெளிக் கொணர்ந்துள்ளார்.

**நீங்கள் காமன் கூத்துக் கலை பற்றி ரதி மதன் நவரத்தின 100 பாடல்களை வெளியிட்ட புசல்லாவ பொன். பால கிருஸ்ணன் கூறுகின்ற கருத்துக்கள் யாவை. உங்களால் விவரிக்க முடியுமா?**

காமம் பண்டிகையானது எமது மலையக மக்கள் இந்தியாவில் வருகை தந்த காலம் தொட்டு நடைபெற்று வரும் கூத்துக் கலைகளில் ஒன்று காமன் கூத்துக் கலையாகும்.



தேசமான்ய சந்திர வதனா ரட்ண ராஜ குருக்கள்

கும்மி, கோலாட்டம், தாலாட்டு, ஒப்பாரி போன்ற கலைப்படைப்புக்களை தோட்டங்கள் தோறும் பரப்பினர். இக்கலைகளில் ஒன்றான காமன் பண்டிகையை ஒவ்வொரு மாசி மாதங்களிலும் வளர்பிறை மூன்றாம் பிறை முதல் ஒன்பதாம் பிறை வரையிலும் ஆரம்ப காலமாக கருதி அமைத்தனர். இக் கூத்துக் கலையானது தற்போது ஒவ்வொரு தோட்டப் புறங்களிலும் வெவ்வேறு விதமாக நடத்தி வருகின்றனர்.

காமன் கூத்துக் கலையானது ஆரம்ப காலம் தூதுவர் வருவதை மட்டும் காட்டி நடத்தி வந்ததை நாம் கண்டுள்ளோம். ஆனால் ஆய்வின்படி இன்று பல்வேறு நவீனங்கள் உட்புகுத்தி நடத்துவது எப்படி சாத்தியமாகும் என்ற கேள்வியை அவர் முன் வைக்கின்றார். ஒரு ஆன்மீகக் கலையில் நவீனப்படுத்தல் என்பது புதியன புகுத்தல் என்பது ஒரு நாகரீகமற்ற செயற்பாடாக அவர் பார்க்கின்றார். இந்தக் கலையை அவர்களுடைய பரம்பரையினரான அவர் பாட்டனார் காலம் தொட்டு நடத்தி வந்ததை அவர் கண்டுள்ளார். அதைத் தொடர்ந்து அவர் தாய் மாமன் எஸ். சின்னையா, சிறிய மாமா எஸ். வேலு தூதன் வேடத்தில் பல ஆண்டுகளாக ஆடிவந்ததை பார்த்தும் ரசித்தும் வந்துள்ளார்.

அந்த வகையில் அவர் நான்காவது பரம்பரையாக இக்கலையை காலத்திற்கு ஏற்றவாறு நவீனப்படுத்தலை விரும்பாமல் பழைய கலையை பாதுக்காப்பதில் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றார்.

**கலைஞர் பொன். பாலகிருஸ்ணன் பற்றி கூறுவீர்களா?**

அவர்பெயர் காமன் கூத்துக் கலைஞர் பொன்னம்பலம் பாலகிருஸ்ணன். பாலகிருஸ்ணன் வாரியகலத் தோட்டத்தில் 1953.05.18 ஆம் திகதி பிறந்தார். இந்தக் காமன் கூத்துக் கலையில் பொன். பாலகிருஸ்ணன் ஈடுபடுவதற்கான காரணம் அவருடைய தாய் மாமாமார்கள். அவர் சிறு வயதில் அவர்களுக்கு காமன் கூத்துக்காக மாமாமார்களுக்கு உதவியாக இருந்து செயற்பட்டவர். கம்பத்திற்குச் சுற்றுவதற்காக அரலிப்பூ பறித்துக் கொண்டு வந்து கொடுக்க வேண்டும். அப்பொழுது அவருக்கு சிறிய வயது. பெரியவர்கள் பாடுவார்கள் அவர் கேட்டுக் கொண்டிருந்து அதைப் பாடமாக்கிப் பாடும் பழக்கம் நெடுக இருந்தது. கேள்வி ஞானத்தின் மூலம் பாட ஆரம்பித்தார்.



1960, 1962 களில் டெல்டா தோட்டத்திற்கு வந்து விட்டார். டெல்டா தோட்டத்தில் காமன் கூத்துக் கலைகள் இல்லை. வாரியகலத் தோட்டத்தில் தான் நடைபெறும். காமன் கூத்துக் கலையில் இருந்த ஆர்வத்தின் காரணமாக ஒவ்வொரு வருடமும் அங்கு சென்று அதில் கலந்து கொள்வார். சிறிய வயது முதல் 24 வயது வரையிலும் அந்த காமன் கலையை அங்கு சென்று கலந்து கொண்டு பாடுவார். அதேபோல் ஏனைய இடங்களுக்குச் சென்றும்



பாட்டு பாடுவார்.

காமன் கூத்தைப் பார்வையிடுவதற்காக வாரியகலத் தோட்டத்திற்கு



எல்லாப் பகுதியில் இருந்து பெருந்திரளான மக்கள் கலந்து கொள்வார்கள். அதே போன்று டெல்டா தோட்டத்தில் இருந்தும் பெரு எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொள்வார்கள். சகோதர இனத்தைச்சேர்ந்த எச். எம். ஜோன்ஸ் சிங்க என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிங்களவராக இருந்தாலும் அவர் தமிழ் பாட்டு நன்கு பாடுவார். அவர் காமன் கூத்துப் பாடலைப் பாடுவார். அவர் ஒரு தடவை அவரிடம் காமன் கூத்துக் கலை பற்றி நன்கு தெரியும்தானே. தானே செய்யலாம் என்று பொன் பாலகிருஸ்னிடம் கூறினார். அவர் மிகுந்த தூண்டுதலாக இருந்தார். அந்த வகையில் காமன் கூத்துக் கலை டெல்டா தோட்டத்தில் 1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

**கூத்துக் கலையினை எவ்வாறு அரங்கேற்றுவது பற்றி சுருக்கமாகக் கூற முடியுமா?**

காமன் கூத்துக் கலைக்கு காப்புக் கட்ட வேண்டும். பார்த்தீபன் என்ற சிறுவன் மன்மதன் என்ற பாத்திரத்திற்கும் சுரேஸ் என்ற சிறுவன் ரதி என்ற பாத்திரத்திற்கும் நடிப்பார்கள். இவர்கள் இருவரும் சிறு வயதில் மிகவும் அழகான சிறுவர்கள் ஆவர். இதன் ஆரம்ப கால கட்டம் மிகவும் வரட்சியான கால கட்டம். அவர்கள் ஆற்றுக்குச் சென்று கம்பங்கள் எடுத்து வருவார்கள். மன்தன் எரியும் போது மூங்கில் செங்கரும்பு, அரசன்கம்பு, கொட்டை முத்து மரம் போன்ற ஐந்து கம்பங்களிலான மர வகைகள் பக்கத்தில் இருக்கும். அருகிலே வயல் இருத்தல் வேண்டும். இந்தக் கம்பங்களை வைக்கோலினை கயிறு மாதிரி திரித்து சுற்றி வைக்கப்பட்டு இருக்கும். இப்படி முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட போது அன்று கடுமையான வெயில் இருந்தது. அத்தினத்தில் திடீரென கன மழைபெய்தது. இப்படியான வரட்சி காலத்தில் இந்த கலையை ஆரம்பித்த போது மக்கள் மத்தியில் மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தி விட்டது. இந்த தோட்டத்தின்



கலைஞர் பொன். பால கிருஸ்ணன்

துரை இந்நிகழ்வை விடிய விடிய இருந்து பார்வையிட்டுச் சென்றுள்ளார்.

அந்த நிகழ்வினை பிறை மூன்றில் ஆரம்பித்து 16ஆவது நாளில் அதனைக் கொளுத்த வேண்டும். அக்கால இடைவெளிகளில் சமய கிரியைகள் இடம்பெறும் ஈஸ்வரன்



மேடையில் இருப்பார். ஈஸ்வரனை தூதன் வந்து ஓலையைக் கொடுத்து இந்திரன் வரச் சொல்லியிருக்கிறார் என்று கூறி அவரை கூட்டிக் கொண்டு செல்வார்கள். இரு உச்சி வெடில் கொளுத்தப்படும். ஒரு வெடில் மேல் செல்லும் மற்ற வெடில் மதனின் படத்தில் வந்து வெடித்துப் பத்தும் அதன் பின் மூன்றாம் நாள் முதலில் சாம்பலைத் தட்டி விட்டு மன்மதனை ஆசனத்தில் அமர வைத்து படுக்க வைத்தல் வேண்டும். மீளவும் உயிர்ப்பித்து எழுவார்.

**கலைஞர் பொன். பாலகிருஸ்ணன் காமன் கூத்துக் கலைப் பாடல்களை இன்றைய காலத்தில் தொகுப்பது என்பது மிகக் கடினமான காரியம். எனினும் அவர் அவற்றை எவ்வாறு சேகரித்து ஓர் ஆவணமாக கொண்ட வர அவர் எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டார் என்பது பற்றிக் கூறுவீர்களா?**

நிச்சயமாக அவர் மனதில் நிறையப் பாடல்கள் மனப் பாடமாக இருந்தன. இவை எல்லாம் பழைய புத்தகங்களில் இருந்து பாடமாக்கி வைத்திருந்தார். இன்னும் சிலவற்றை அவர் குருவாக மதிக்கின்ற எம். மருதை வழங்கிய பழைய பாடல் புத்தகங்களில் இருந்தும் பெற்றுக் கொண்டார். அவர் இத்தகைய முயற்சியை மிகுந்த சிரமத்திற்கு மத்தியில்தான் செய்தார் என்று கூற முடியும். அவருடைய இத்தகைய முயற்சியின் காமன் கூத்துக் கலை மலையகத்தில் தொடர்ந்து வளர்வதற்கான நல்ல வாய்ப்புக்கள் உள்ளன.

எம். மருதை அவர்கள் இப்பாடல்களைத் தொகுப்பதற்கு உதவி செய்தார். அவர் பழைய புத்தகங்களும் கொடுத்து உதவினார். ஆனால் இப்போது அந்தப் புத்தகங்கள் இல்லை. அதனால்தான் இப்பாடல்களை மிகவும் சிரமத்திற்கு மத்தியில் தொகுத்துள்ளார். இப்புத்தகம் வெளி வந்தமையினால் இதன் வளர்ச்சி மென்மேலும் அதிகரிக்கலாம் என்பது எல்லோருடைய எதிர்பார்ப்பாகும். அருகிப் போகுகின்ற இந்த கலையை பாதுகாப்பதற்கான இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளார் பொன். பாலகிருஸ்ணன் அவர்களுக்கு என்னுடைய உள்ளார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இந்நூல் தொடர்பில் பிரபல்யமான கலைஞர் பலர் கருத்து தெரிவித்துள்ளார்கள். அந்த வகையில்,**

மலையகக் கலைஞர் எம். வாசுதேவன் கருத்து தெரிவிக்கையில், '1820 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தியா நாட்டில் வாழ்ந்து கொண்டிருந்த எமது மூதாதைதைகள் இலங்கையில் மலையகத்தில் தேயிலைப் பயிர்ச் செய்கைக்காக அழைத்து வரப்பட்டார்கள் என்பது நாம் அறிந்த விடயம். அப்படி அழைத்து வரப்பட்ட மக்கள் தமது சொத்துக்களையோஉடமைகளையோ கொண்டு வரவில்லை. ஆனால் அவர் எமது பாரம்பரியக் கலைகளை மட்டுமே கொண்டு வந்துள்ளார்கள். அப்படிக் கொண்டு வந்த கலைகளில் ஒன்றுதான் காமன் கூத்துக் கலை என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் நூல் வடிவில் கொண்டு வரவில்லை. இந்தக் கலை வடிவத்தை நெஞ்சிலே நிறுத்தி மனதில் பதிவு செய்து வாய்மொழிக் கதைகளாக, வாய்மொழிப் பாடல்களாக பாடியும் காலாகாலமாக முன்னெடுத்து வந்தார்கள். கலைஞர் பொன். பாலகிருஸ்ணன் இந்தக் காமன் கூத்துக் கலையை 25 வருடங்களுக்கு மேலாக பாதுகாத்து பராமரித்து பய பக்தியுடன் வருடா வருடம் காமன் பண்டியை கொண்டாடி வருவதை எண்ணி பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்' என்று தெரிவித்துள்ளார்.

**இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய உதவிக் கல்விப் பணிப்பாளர் துரைசாமி நடராஜா தனது கருத்தில்;**

நாட்டுபுறக் கலைகள் என்பன உயிரோடுள்ள புதைவடிவங்கள். அது மிகவும் உன்னதமானது. மனிதனோடு மனிதனை அது இணைத்து வைப்பதோடு இதயங்களைப் பிணைத்தும் வைக்கின்றது என்பது புத்திஜீவிகளின் கருத்தாகும். இது எத்துணை உண்மையானது. நாட்டுப்புறக் கலைகளின் வரிசை நீண்டு கொண்டே செல்லுகின்றது. இந்த வகையில் உயிரோடுள்ள புதை வடிவமாகிய நாட்டுப்புற கலைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் பாலகிருஸ்ணன். அதிலும் கூத்துக் கலை என்றால் பாலுவுக்கு அதிகமாகவே பிடிக்கும். இதன் அடிப்படையில் பாரம்பரிய கூத்து வடிவமான காமன் கூத்தின் மேம்பாட்டுத் தொடர்பில் தன்னை அர்ப்பணித்து இவர் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**ஏ.பி. ரெவல்ஸ் ஐ.வி. எஸ். விஜயன் தனது வாழ்த்துச் செய்தியில்,**

பாலகிருஸ்ணன் கடந்த காலங்களில் தோட்டத் தொழிலாளியாக கங்காணியாக தொழிற் சங்க தலைவராக அரசியல்வாதியாக சமூக சேவையாளராக மேடை நாடகக் கலைஞராக செயற்பட்ட பல்துறை ஆளுமைகொண்ட ஒரு சமூகப் பற்றாளர் என்பது குறிப்பிடத்தக்கது இவைகள் எல்லாவற்றுக்கும் மேலாக நமது பாரம்பரிய கலைகளில் ஒன்றான கடந்த 25 வருடங்களுக்கு மேலாக பாதுகாத்து கைவிடாமல், தவறால், பயபக்தியுடன் முன்கொண்டு செல்லுகின்ற கலைஞரை பாராட்டுவது சாலச் சிறந்தது என்று அவர் தெரிவித்துள்ளார்.

**கலைஞர் பொன். பாலகிருஸ்ணன் பற்றி கலைத்திலகம் மருத முத்து நவநீதன் கூறும் போது;**

காமன் கூத்தில் காப்புக் கட்டுதல் முதலான ஆரம்பம் தொட்டு மதனுக்கு மீண்டும் உயிர் கொடுப்பது வரையிலான 100 ஒழுங்குற தொகுத்து சிறு சிறு மாற்றங்களோடு காத்திரமாகப் படைப்பாகத் தந்திருப்பது காலத்திற்கு ஏற்ற பெறுமதியான விடயமாகும்.

இவ்வாறான வரலாறு பேசும் 'இரதி மதன் நவரத்தின பாடல்களின் தொகுப்பு' என்ற நூலை வெளியீடு செய்வதில் கடந்த 28 வருடங்களாக மலையகத்தில் கலை கலாசாரம், கல்வி சமூகம் விளையாட்டுத் துறையில் பாடுபடும் மலையக நட்சத்திரக் கலைப்பேரவை பெருமிதம் கொள்கிறது. இந்நூலை மலையக பிரதேசம் எங்கும் பரவச் செய்து பின்பற்றச் செய்வது பயன்தர வல்லது என்று அவர் தெரிவித்துள்ளார்.

நேர்காணல் ஜீவராஜ்...

## இரா. சம்பந்தனின் மறைவுக்கு இல்ஹாம் மரிக்கார் அனுதாபம்



பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகுமென அமேசான் கல்லூரி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி இல்ஹாம் மரைக்கார் தெரிவித்தார்.

மறைந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி பலரும் செலுத்தி வருகின்றனர். இந்த நிலையில் கொழும்பு பொரளையில் அமைந்துள்ள தனியார் மலர்ச் சாலையில் வைக்கப்பட்டிருந்த அன்னாரது பூத உடலுக்கு (02) மரியாதை செலுத்தினார். அதன் பின், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கை அரசியலில் அனுபவரீதியான அரசியல்வாதி மட்டுமல்லாமல் பாராளுமன்றத்திலும் துணிந்து தமிழ் பேசும் மக்களுக்காக குரல் கொடுக்கக் கூடிய ஒருவராக அமரர் இரா. சம்பந்தன் இருந்ததாக நினைவு கூர்ந்தார். இலங்கை அரசியலிலும் தமிழ் மக்களின் அரசியலிலும் குறிப்பாக இரா. சம்பந்தன் என்கின்ற பெயர் மிகவும் பிரபலமான தொன்று என்று குறிப்பிட்ட அவர், எல்லா சந்தர்ப்பங்களிலும் துணிந்து எவருக்கும் அஞ்சாமல் குரல் கொடுக்கக்கூடிய திறமை கொண்ட ஒருவராக அவர் இருந்திருப்பதாக சுட்டிகாட்டினார்.

அன்னாரது இழப்பு தமிழ் மக்களது அரசியலுக்கு பேரிழப்பாகும் என்று குறிப்பிட்ட அவர், அவரது இழப்பால் வேதனையுற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு தன்னுடைய ஆழ்ந்த கவலையினை தெரிவிப்பதாகவும் கலாநிதி இல்ஹாம் மரைக்கார் குறிப்பிட்டுள்ளார்.

## பங்களாதேஷ் மார்க்க அறிஞர் தென் மாகாணத்துக்கு விஜயம்

(வெலிகம தினகரன் நிருபர்)



ஜாமிஆ நளீமிய்யா பழைய மாணவர் அமைப்பான ராபிததுந் நளீமிய்யீனின் விசேட அழைப்பின்பேரில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள கலா பீடத்தில் நீண்ட காலம் அதிபராக, பிரதிப் பணிப்பாளராக சேவை புரிந்த பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த மார்க்க அறிஞர் மௌலானா ஷஹீதுள்ளாஹ் கவ்ஸர் வெலிகமை நகருக்கும் அண்மையில் விஜயம் செய்தார்.

தென் பிராந்திய ராபிதாவின் அழைப்பில் விஜயம் செய்த அவருக்கு ராபிதா அங்கத்தவர்களால் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. அன்னாருடன் நளீமிய்யா கலாபீட மாணவர்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டதோடு அன்னாருக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அவர், மர்ஹூம் கலாநிதி சுக்ரியின் மையவாடியைத் தரிசித்ததோடு, வெலிகம பாரி அரபுக் கல்லூரிக்கும் விஜயம் செய்தார். காலி இப்னு அப்பாஸ் அரபுக் கல்லூரி பணிப்பாளர் அஷ்ஷேக் எம்.ஓ. பத்ஹுர்ரஹ்மான் (பஹ்ஜி) வையும் சந்தித்தார். ராபிததுன் நளீமிய்யீனின் 10ஆவது வருடாந்த ஒன்றுகூடலுக்கு பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட இவர், 1978 முதல் 2001 வரை சுமார் 23 வருடங்கள் நளீமிய்யாவில் சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மகனின் தாக்குதலில் தந்தை உயிரிழப்பு

திறப்பனை தினகரன் நிருபர்

அநுராதபுரம் இபலோகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹிரிபிட்டியாகம பகுதியில் மகனின் தாக்குதலில் தந்தை ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஒன்று இபலோகம ஹிரிப்பிட்டியாகம பகுதியில் (30) இடம் பெற்றுள்ளது.

இபலோகம ஹிரிபிட்டியாகம பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய தந்தை ஒருவரே கொல்லப்பட்டவராவார். இக்கொலையுடன் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 34 வயது மகனை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

சந்தேக நபர் தனது தந்தையுடன் அடிக்கடி வாக்குவாதப்படுவதாகவும், தினமும் தனது தந்தையுடன் சண்டையில் ஈடுபடுவதாகவும் சம்பவம் நடைபெற்ற தினம் தந்தையும் மகனும் வீட்டில் தனியாக இருந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கிழக்கின் குரல்



## மாணவர் வரவு வீதத்தை அதிகரிக்க ஆசிரியர்களுக்கு விசேட வேலைத்திட்டம்

பாண்டிருப்பு தினகரன் நிருபர்



மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு வலய கல்விப் பணிமனைக்கு உட்பட்ட பாடசாலைகளில் மாணவர்களுக்கான கட்டாய கல்வி மற்றும் வரவு வீதத்தை செயற்படுத்தும் வேலைத்திட்டம், மேற்படி வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரனின் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள வரவுக் குழுக்கான ஆசிரியர்களை தெளிவுபடுத்தும் விழிப்புணர்வு கருத்தரங்கு வலய கல்வி அலுவலக ஒன்றுகூடல் மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்டது.

இந்த விழிப்புணர்வு கருத்தரங்கில் பட்டிருப்பு கல்வி வலயத்தில் அமைந்துள்ள 70 பாடசாலைகளினது வரவுக் குழுவைச் சேர்ந்த ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இதில் வளவாளர்களாக முகாமைத்துவத்துக்கு பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர் எஸ். தட்சனாமூர்த்தி, முறைசாரா கல்விப் பிரிவு இணைப்பாளர் றீட்டா கலைச்செல்வன், வழிகாட்டல் ஆலோசனை ஆசிரிய ஆலோசகர் பா.துஸ்யந்தன் ஆகியோர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

இதன்போது கட்டாய கல்வியின் ஊடாக சரி நிகர்த்தன்மையை பேணுதல், மாணவர்களினது வரவு வீதத்தை அதிகரித்தல், மாணவர் இடைவிலகலை தவிர்த்தல், மாணவர்களுக்கு கற்றல் செயற்பாட்டில் ஆர்வத்தை ஏற்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டன.

இந்நிலையில் பாடசாலைகளில் முன்னெடுக்கப்படவுள்ள இந்த செயற்பாடுகள் தொடர்பாக சுற்றறிக்கைகள் மற்றும் வர்த்தமானி வெளியீடுகள் தொடர்பாக ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டன.

## பாராளுமன்ற உறுப்பினர் அதாஉல்லா கௌரவிப்பு



அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

விளையாட்டுத் துறையில் இளைஞர்கள் சிறந்து விளங்க வேண்டுமென்பதற்காக பங்களிப்பு நல்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா அண்மையில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் இளைஞர்கள் வழிதவறி சென்றுவிடாது, அவர்கள் சகல விளையாட்டுகளிலும் சிறந்து விளங்கி சர்வதேசம்வரை அவர்களின் பெயர் பதியப்பட வேண்டுமென்பதற்காகவும் அக்கரைப்பற்று, பள்ளிக்குடியிருப்பில் விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுத்து பல விளையாட்டு வீரர்கள் சாதனை படைக்க காரணகர்த்தாவாக இருந்ததுடன், விளையாட்டுக்கழகங்களின் வளர்ச்சிக்கும் அதாஉல்லா எம்.பி. உதவி செய்திருந்தார்.

இந்நிலையில் அக்கரைப்பற்று றஹீமிய்யா விளையாட்டுக்கழகம் நடத்திய கிரிக்கெட் போட்டி தொடர் பரிசளிப்பு நிகழ்வில் றஹீமிய்யா விளையாட்டுக்கழகத் தலைவர் எல். முஸாதீக்கால் அதாஉல்லா எம்.பி. பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.றாசீக், பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள், றஹீமிய்யா விளையாட்டுக்கழக அங்கத்தவர்கள், விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பேசும் வகுப்பறைகளாக மாற்றுவதற்கான நிதியுதவி



மணல்சேனை நிருபர்

சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலயத்தின் வகுப்பறைகளை பேசும் வகுப்பறைகளாக மாற்றுவதற்கான நிதி உதவி நன்கொடையாளர் ஒருவரால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலை அதிபர் கே.தியாகராஜா தலைமையில் நாவிதன்வெளியைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் காந்தியின் புதல்வரான துரையினால் இதற்கான ஆரம்ப நிகழ்வு நடத்தப்பட்டது.

மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு உதவும் வகையில் 2 இலட்சம் செலவில் வகுப்பறைகளை அழகுபடுத்தும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்ததுடன், அவரது சேவையை பாராட்டி பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோரால் அவர் கௌரவிக்கப்பட்டார்.

## உருமய வேலைத்திட்ட நடமாடும் சேவை



தம்பலகாமம் குறுப், கந்தளாய் தினகரன் நிருபர்கள்

உருமய வேலைத்திட்டத்தின் கீழ் காணி உரித்து அளிப்பு வழங்குவது தொடர்பான நடமாடும் சேவை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (02) தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையின் போது, உருமய வேலைத்திட்டத்தின் கீழ் உரித்து அளிப்பு பத்திரங்களை இதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு கிடைத்துள்ளது.

இதன்போது மீராநகர், பொற்கேணி, முள்ளிப்பொத்தானை, சிராஜ்நகர், முள்ளிப்பொத்தானை வடக்கு, முள்ளிப்பொத்தானை கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்தவர்கள் இந்த நடமாடும் சேவையில் பங்குபற்றி பயனடைந்தனர். இதில் காணி ஆணையாளர் என்.வில்வரத்னம், காணி கிளை உத்தியோகத்தர்கள், பொதுமக்களாகிய பலரும் கலந்து கொண்டனர்.

## ஆளுமையுள்ள மூத்த அரசியல் தலைவரை நாடு இழந்துள்ளது

### முன்னாள் இராஜாங்க அமைச்சர் அமீர் அலி அனுதாபம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



ஓர் ஆளுமையுள்ள மூத்த அரசியல் தலைவரை நாடு இழந்துள்ளதாக, முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

த.தே.கூ. தலைவர் இரா. சம்பந்தனின் மறைவையிட்டு அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"மிக நீண்டகாலம் பாராளுமன்றத்தைபிரதிநிதித்துவப்படுத்தி தான் சார்ந்த சமூகத்தின் பிரச்சினைகளை மட்டுமன்றி, எமது சமூக பிரச்சினைகளுக்காகவும் ஓங்கிக் குரல் கொடுத்த ஒரு நேர்மையான அரசியல் தலைவராவார் இரா.சம்பந்தன்.

தமிழ் பேசும் இரண்டு சமூகங்களும் ஒன்றித்து பயணிக்க வேண்டுமென்பதில் அதிக கரிசனை கொண்டிருந்தவர்.

தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுக்கு பொருத்தமான தீர்வு கிடைக்க வேண்டுமென விரும்பிய தமிழ் அரசியல் தலைமை.

சம்பந்தன் போன்ற ஆளுமையும் அனுபவமும் மிக்க தலைவரின் இழப்பு இந்நாட்டில் ஈடுசெய்ய முடியாத வெற்றிடத்தை நிச்சயம் ஏற்படுத்தியுள்ளதே உண்மையாகும்.

அன்னாரின் இழப்பால் வாடும் அன்னாரது குடும்பத்தார், அவரது கட்சியினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்" என்றார்.

## பாடசாலைகளில் துரித மதிப்பீடு

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

தற்போது கல்முனை வலய பாடசாலைகளில் துரித மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இதற்கான ஆலோசனையை வலய கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. சஹ்துல் நஜீம் வழங்கி வருகிறார்.

முகாமைத்துவத்துக்கு பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர் றியாஸா தலைமையில் இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு, அதற்கான அபிவிருத்தி பிரேரணைகளும் முன்வைக்கப்படுகின்றன. இந்நிலையில் துரித மதிப்பீட்டு முடிவில் பாடசாலைகளுக்கான உயர்தர பண்பு சுட்டிப் புள்ளிகளும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நெல் கொள்வனவுக்கு நடவடிக்கை எடுக்காமைக்கு விவசாயிகள் கவலை

அட்டாளைச்சேனை குறூப் நிருபர்



இன்னும் சில நாட்களில் சிறுபோக நெல் அறுவடையை மேற்கொள்ளவுள்ள அம்பாறை விவசாயிகள், இதுவரை நெல் சந்தைப்படுத்தும் சபையினர் தமது நெல்லை கொள்வனவு செய்ய எந்தவித நடவடிக்கையும் எடுக்காமை தொடர்பாக கவலை தெரிவித்தனர்.

கல்ஓயா வலதுகை வாய்க்கால் விவசாய அமைப்புகளின் சம்மேளனத்தினர் கடந்த திங்கட்கிழமை அக்கரைப்பற்று காரியாலயத்தில் ஒழுங்கு செய்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் இது தொடர்பாக தெரிவித்தனர்.

இச்சந்திப்பில் மேற்படி அமைப்பின் தலைவர் பொறியியலாளர் ஏ.எம்.ஹாரூன் தெரிவித்த போது,

"அம்பாறையில் இவ்வருட சிறுபோகத்தில் 165,000 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் கல்ஓயா வலதுகை வாய்க்கால் விவசாய பிரிவில் சுமார் 30,000 ஏக்கரில்நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் இவ்வருட சிறுபோக செய்கையில் விவசாயிகள் மிகவும் ஆர்வத்துடன் நல்ல அறுவடையை எதிர்பார்த்துள்ளனர்.

## ப.நோ.கூட்டுறவு சங்க தேர்தல்

அக்கரைப்பற்று விசேட நிருபர்

அக்கரைப்பற்று மத்திய பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஒன்பது இயக்குநர் மன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு அச்சங்க தலைமை காரியாலயத்தில் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.சீ.எம். அஸ்ரப் தலைமையில் நடைபெறவுள்ளது.

திட்டமிட்டபடி இயக்குநர் சபை தேர்தலை நடத்தி முடிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக சங்கத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல்.எம்.பௌஸ் தெரிவித்தார்.

## ஒற்றுமையை நிலை நாட்டுவதில் இரா. சம்பந்தன் செயற்பட்டார்

### முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஹசன் அலி அனுதாபம்

ஒலுவில் விசேட நிருபர்



தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உண்மையான ஒற்றுமை நிலை நாட்டப்பட வேண்டுமென்பதில் என்றும் பற்றுறுதியுடன் செயற்பட்ட பெருந்தகை இரா. சம்பந்தனாவாரென, ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் சுகாதாரத்துறை முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி.ஹசன் அலி தெரிவித்தார்.

த.தே.கூ. தலைவர் இரா. சம்பந்தனின் மறைவையிட்டு அவர் விடுத்துள்ள அனுதாப செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"த.தே.கூ. தலைவர் இரா. சம்பந்தனின் மறைவு தமிழ் மக்களுக்கு மாத்திரமல்லாது, தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பேரிழப்பாகும்.

தமிழ் பேசும் சமூகங்கள் மத்தியில் நீடித்த ஒற்றுமை மூலம் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை பெரும்பான்மை சமூகத்திடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்று விசுவாசித்து தமிழ், முஸ்லிம்களுக்கு இடையில் ஒற்றுமையை கட்டியெழுப்புவதில் செயற்பட்ட கனவானாவார்.

சம்பந்தன் ஐயா, வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் உணர்வுகளை பிரதிபலித்தவர் என்றார்.

## புதிய நிர்வாக சபை தெரிவு

திருகோணமலை தினகரன், கந்தளாய் தினகரன் நிருபர்கள்



திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடக மன்றத்தின் 2024/2026ஆம் ஆண்டுகளுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இம்மன்றத்தின் 3ஆம் ஆண்டு நிறைவு விழாவின் போதே இத்தெரிவு மேற்கொள்ளப்பட்டது. இதன் தலைவராக அமரதோரு அமரஜீவ, செயலாளராக மனுசங்க காரியவசம், பொருளாளராக ஸ்ரனிஸ்லஸ் கீத பொன்கலன் ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் பிரதான அழைப்பாளராக கியாஸ் சாபி, உப தலைவராக சுகத் விஜயகுமார, உப செயலாளராக பாரூக் முபாரக், நிர்வாக சபை உறுப்பினர்களாக மலிக் ராஜபக்ஷ, எம்.எம்.நௌபீக் தெரிவு செய்யப்பட்டனர்.

மூதூர் கங்கை கடற்கரை உல்லாச பிரயாண விடுதியில் நடைபெற்ற இதன் ஆரம்ப நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எம்.ஈ.ஜி.திசாநாயக்கா முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். திருகோணமலை மாவட்டத்திலிருந்து செயற்படும் மூவின ஊடகவியலாளர்களை அங்கத்தவர்களாக கொண்ட இம்மன்றம், இலங்கை பத்திரிகை பேரவையில் பதிவு செய்யப்பட்ட ஊடக சங்கமாகும்.

## காத்தான்குடியில் ஆயுர்வேத மருத்துவ முகாம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அப்பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் நலன் கருதி ஆயுர்வேத மருத்துவ முகாம் மட்டக்களப்பு, மஞ்சந்தொடுவாய் யுனாணி ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை வைத்தியர்களால் நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்தப்பட்டது.

காத்தான்குடி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் சில்மியாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கமைய இந்த மருத்துவ முகாம் நடைபெற்றது.இதில் மட்டக்களப்பு, மஞ்சந்தொடுவாய் யுனாணி ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை வைத்தியர் வித்தியா கலந்துகொண்டு, வைத்திய பரிசோதனைகளை உத்தியோகத்தர்களுக்கு மேற்கொண்டதுடன், இலவசமாக ஆயுர்வேத மருந்துகளையும் வழங்கி வைத்தார்.

## புதிய முகாமையாளராக கடமையேற்பு

பாலமுனை தினகரன் நிருபர்



அட்டாளைச்சேனை மக்கள் வங்கியின் புதிய முகாமையாளராக நியமிக்கப்பட்ட எஸ்.எம்.அப்துல் ஜவாத் நேற்று தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

அட்டாளைச்சேனையை சேர்ந்த எஸ்.எம்.அப்துல் ஜவாத் 1998ஆம் ஆண்டு மக்கள் வங்கியில் உத்தியோகத்தராக இணைந்து கொண்டு மாவட்டத்தின் பல பிரதேசங்களிலுமுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் மிகச் சிறப்பாக கடமையாற்றியதுடன், கடந்த வருட இறுதியில் அவர் முகாமையாளராக தெரிவு செய்யப்பட்டு, சம்மாந்துறை மக்கள் வங்கிக் கிளையில் முகாமையாளராக கடமையை பொறுப்பேற்றார்.

அட்டாளைச்சேனை மக்கள் வங்கிக் கிளையில் ஏற்கெனவே கடமையாற்றிய முகாமையாளர் அம்பாறை பிராந்திய காரியாலயத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதால், அவரின் இடத்துக்கே புதிய முகாமையாளராக எஸ்.எம். அப்துல் ஜவாத் நியமிக்கப்பட்டார்.

அட்டாளைச்சேனை முதலாம் பிரிவை சேர்ந்த ஏ.பீ.சபூர் முகைதீன் (காதர்) தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வராவார்.

# வடக்கின் உதயம்

## மாங்குளம் ஏ-09 வீதி விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(பரந்தன் குறூப் நிருபர்)

முல்லைத்தீவு மாங்குளம் ஏ-09 வீதியின் கிழவன் குளம் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பனிக்கன் குளம் மாங்குளத்தை சேர்ந்த சுப்பையா சிறிதரன் (வயது 41)என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-09 வீதியின் கிழவன் குளம் பகுதியில் கடந்த 28ஆம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் டிப்பர் வாகனமொன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில் விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்நுள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி கிளிநொச்சி விஜயம்

(பரந்தன் குறூப் நிருபர்)



உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி உள்ளிட்ட குழுவினர் நேற்றுமுன்தினம் மாலை கிளிநொச்சிக்கு கள விஜயம் செய்தனர்.

உலக உணவுத்திட்டத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி Mr.Abdur rahim siddiqui உள்ளிட்ட உலக உணவுத்திட்ட அதிகாரிகள் இவ்விஜயத்தில் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனை சந்தித்து கலந்துரையாடிருந்தனர்.

கலந்துரையாடலின் பின்னர் கனகாம்பிகைக்குளம் பிரதேசத்திற்கான களவிஜயத்தை மேற்கொண்டிருந்தனர். உலக உணவுத்திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கு வழங்கும் உணவுகளுக்கு தோட்டச்செய்கையின் மூலம் மரக்கறிகளை வழங்கும் பொருட்டு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய வாழ்வாதார உதவிகள் கிடைக்கப்பெற்று திறமையாக செயற்பட்டு வருகின்ற கனகாம்பிகை பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளை சந்தித்து கலந்துரையாடியதுடன் தோட்டத்தையும் பார்வையிட்டனர்.

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகள் இன்று

(ஓமந்தை விசேட நிருபர்)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வாய்வின் மூன்றாம் கட்டப்பணிகள் இன்று மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு மே மாதம் (16) விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு ஜூலை மாதம் 04 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படுமென கூறப்பட்டிருந்தது. அதற்கமைய மூன்றாம் கட்ட அகழ்வுபணிகள் இன்று நடைபெறவுள்ளன.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில், கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன்மாதம் 29ஆம் திகதியன்று, முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினைப் பொருத்துவதற்காக, கனரக இயந்திரத்தின் மூலம் நிலத்தை அகழ்ந்தபோது மனிதப் புதைகுழியொன்று இனங்காணப்பட்டிருந்தது.

## மருதமடு திருத்தலத்தின் வருடாந்த ஆடித் திருவிழாவில் வடக்கு ஆளுநர் பங்கேற்பு





மன்னார் மருதமடு திருத்தலத்தின் வருடாந்த ஆடித் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆராதனைகள் நடைபெற்றன. இதனை தொடர்ந்து மருதமடு அன்னையின் திருச்சொரூப பவனியும் நடைபெற்றது. திருவிழாவில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்துகொண்டார். நாட்டின் அனைத்து மறைமாவட்ட ஆயர்களும், இலட்சக்கணக்கான பக்தர்களும் மடு அன்னையின் ஆடித்திருவிழாவில் கலந்துக்கொண்டனர்.



லைக்கா ஞானம் அறக்கட்டளை ஊடாக அண்மையில் கதிர்காம பாத யாத்திரிகர்களுக்கு மருத்துவ உதவிப்பொருட்கள் மற்றும் குடிநீர் ஆகியவை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.
(படம்: சாவகச்சேரி விசேட நிருபர்)

## இந்தியப் பிரஜைகளுக்கான தூதரக விடயங்களுக்கான 'ஓப்பின் ஹவுஸ்'

(தலைமன்னார் விஷேட நிருபர்)

வடக்கு மாகாணத்தில் வசிக்கும் மற்றும் தொழில் காரணமாக தங்கியிருக்கும் இந்தியப் பிரஜைகளுக்கான தூதரக விடயங்களுக்கான 'ஓப்பின் ஹவுஸ்' கலந்துரையாடல் தொடர்பாக யாழ் இந்தியத் தூதரகம் விசேட ஏற்பாடுகளை செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களான யாழ்ப்பாணம் . மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் மற்றும் பணிபுரியும் இந்திய பிரஜைகள் எதிர்நோக்கும் ஏதேனும் கடவுச்சீட்டு, தூதரக விவகாரங்கள் அல்லது அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை பூர்த்திச் செய்யும் நோக்கில் இல. 14, மருதடி லேன், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் 10.00 முதல் 11.00 மணி வரை 'ஓப்பின் ஹவுஸ்' கூட்டம் நடைபெறவுள்ளது.

குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளின் விசா, தூதரக சேவைகள் போன்றவை தொடர்பான குறைகள், வேண்டுகோள்கள் போன்றவை இக்கூட்டங்களில் போது பூர்த்தி செய்யப்படும் எனவும் இதில் பங்கேற்க விரும்புவர்கள் 021.2220504 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளும்படியும் வேண்டப்பட்டுள்ளனர்.

## காணி மோசடியில் சிக்கிய இரு பெண்களுக்கும் விளக்கமறியல்

(கரவெட்டி தினகரன் நிருபர்)



வெளிநாட்டில் வசிக்கும் நபருக்கு சொந்தமான காணியொன்றை ஆள் மாறாட்டம் செய்து உரிம மாற்றம் செய்த குற்றச்சாட்டில் கைதான இரு பெண்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரொருவர் வெளிநாடொன்றில் வசித்து வருகின்றார். அவர் தனது காணிக்கான அற்றோனித்தத்துவ அதிகாரத்தை தனது ஒன்றுவிட்ட சகோதரிக்கு வழங்கியிருந்தார்.

இந்நிலையில், காணி உரிமையாளரின் சொந்தச் சகோதரி பிறிதொரு தேவையைக் காரணம் காட்டி ஒன்றுவிட்ட சகோதரியிடமிருந்து உறுதியைப் பெற்றுச்சென்று மோசடியாக உரிமை மாற்றம் செய்துள்ளார்.

காணி உரிம மாற்றம் செய்யப்பட்டதை அறிந்து, அது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில், காணி மோசடி செய்த சகோதரியைக் கைது செய்தனர்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் அவர் ஆள்மாறாட்டம் செய்வதற்கு உதவிய பிறிதொரு பெண்ணும் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இருவரும் விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது, 10 ஆயிரம் ரூபாவுக்காகவே தான் ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட பெண் ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து நீதிமன்ற உத்தரவுக்கமைய அவர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆள்மாறாட்டத்துக்குத் துணைபோன பெண் (10 ஆயிரம் ரூபாவுக்காக கையொப்பம் வைத்தவர்) கொழும்பைச் சேர்ந்தவர் என்றும், சுன்னாகத்தில் தற்காலிகமாக வசித்தபோதே இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை ஆள்மாறாட்டம் செய்து, சட்டத்தரணியின் முன்னிலையில் கையொப்பம் வைத்த போது தான் நோய்வாய்ப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவர் மாஸ்க் அணிந்திருந்ததாக பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வட. மாகாணத்துக்கு புதிய நியமனங்கள்



வட மாகாணத்தின் இரண்டு திணைக்களங்களின் ஆணையாளர் பதவிக்கும், மாகாண பிரதி பிரதம செயலாளர் பதவிக்கும், புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, அவர்களுக்கான நியமனக் கடிதங்களை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் நேற்று வழங்கிவைத்தார்.

வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் ஆணையாளராக திருமதி சி.சுஜீவா, வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளராக கு.காஞ்சனா, வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (நிர்வாகம்) திருமதி எழிலரசி ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வைத்து நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

## பாடசாலை மாணவியை காணவில்லை

(சாவகச்சேரி விசேட நிருபர்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் 15 வயதான பாடசாலை மாணவியைக் காணவில்லையென நேற்று முன்தினம் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நித்திரைக்குச் சென்ற மாணவியை நேற்றுமுன்தினம் காலையிலிருந்து காணவில்லையென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## யுவதியின் சடலம் மீட்பு

(நாகர்கோவில் விசேட நிருபர்)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்வாய் வடக்கு, மாயக்கை பகுதியிலுள்ள காணியொன்றிலிருந்து யுவதியொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே இடத்தை சேர்ந்த செல்வராசா விரிந்தினி (வயது 38) என தெரியவருகின்றது. சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார்.

## டெங்கு நோய் பரவும் அபாயம்

(கோப்பாய் குறூப் நிருபர்)

வடக்கு, மேல் மாகாணங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் ஜனவரி மாதத்திலிருந்து ஜூன் மாதம் வரையான காலப்பகுதிக்குள் 28 ஆயிரத்து 239 டெங்கு நோயாளர்கள்

அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி, யாழ்ப்பாணத்தில் 3,974, கொழும்பில் 6,344, கம்பஹாவில் 2,820 டெங்கு நோயாளர்களும் பதிவாகினர். இந்த ஆண்டில் 10 டெங்கு

மரணங்களும் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

## வெளிநாட்டில் வசிக்கும் தம்பதியினருக்கு யாழில் விவாகரத்து பெற்றுக்கொடுத்த சட்டத்தரணி

(யாழ். விசேட நிருபர்)

வெளிநாட்டில் வசிக்கும் தம்பதியினருக்கு யாழ்ப்பாணத்தில் விவாகரத்து பெற்றுக்கொடுத்தமை தொடர்பில் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குற்றம் சாட்டப்பட்டுள்ள சட்டத்தரணியின் அலுவலகத்தில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் திருமணமாகி இத்தாலியில் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு இடையில், சில வருடங்களுக்கு முன்னர் மனஸ்தாபங்கள் ஏற்பட்டு இருவரும் இத்தாலியில் பிரிந்து வாழ்ந்துள்ளனர்.

இந்நிலையில் கணவன், சாவகச்சேரி பகுதியில் வசிக்கும் தனது சகோதரியிடம், தமக்கு யாழ்ப்பாணத்தில் திருமணம் நடைபெற்றமையால், அங்கு விவாகரத்திற்கு விண்ணப்பித்து, விவாகரத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கூறியுள்ளார்.

அதனையடுத்து சகோதரி , யாழ்ப்பாணத்திலுள்ள பெண் சட்டத்தரணி ஒருவரை நாடி, வெளிநாட்டிலுள்ள தம்பதியினருக்கு யாழ்ப்பாணத்தில் விவாகரத்து பெற்றுத் தருமாறு கோரியுள்ளார்.

அதற்கமைய சட்டத்தரணி , தனது கனிஷ்ட சட்டத்தரணிகள் இருவரை இதற்காக நியமித்து சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு விசாரணைகளை முன்னெடுத்தனர். இறுதியில் நாட்டில் இல்லாத இருவருக்கும் விவாகரத்து பெற்றுக்கொடுத்தனர்.

அதன்பின்னர், இத்தாலியில் வசித்து வந்த பெண், யாழ்ப்பாணம் வருகை தந்து, பிறிதொரு சட்டத்தரணி ஊடாக விவாகரத்துக்கு விண்ணப்பித்த போது அப்பெண்ணுக்கு ஏற்கனவே விவாகரத்து கிடைத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

நாட்டில் இல்லாத தனக்கு , தன்னுடைய சம்மதம் எதுவும் பெறப்படாது எவ்வாறு விவாகரத்து வழங்கப்பட்டது என நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து இது தொடர்பில் சாவகச்சேரி நீதிமன்றம் விசாரணைகளை முன்னெடுத்தது.

இந்நிலையில் நீதிமன்ற அனுமதியுடன் விவாகரத்து நடவடிக்கையை முன்னெடுத்த சட்டத்தரணியின் அலுவலகம் சோதனையிடப்பட்டது.

## பொலிஸார் தாக்கப்பட்ட சம்பவம்; திருகோணமலையைச் சேர்ந்த நால்வர் கைது

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் வைத்து பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் திருகோணமலையைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய பஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு 07 மணியளவில் இளைஞர்கள் குழுவொன்று அமைதியின்மையை ஏற்படுத்துவதாக யாழ்ப்பாண பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

தகவலின் பிரகாரம் பஸ் நிலையத்திற்கு விரைந்த பொலிஸ் குழு அங்கு அமைதியின்மையை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் நான்கு இளைஞர்களை கைது செய்ய முயற்சித்துள்ளனர். அதன்போது, இளைஞர்கள் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். தாக்குதலில் இரு பொலிஸார் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை நான்கு இளைஞர்களையும், பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டமை, கடமைக்கு இடையூறு விளைத்தமை , பொது இடத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களில் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நான்கு இளைஞர்களும் திருகோணமலையை சேர்ந்தவர்கள் எனவும், அவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தினகரன் வர்த்தக உலா

# கப்பற் சரக்குத் துறையில் மிக உயர்ந்த விருதை வென்ற எயிற்கன் ஸ்பென்ஸ்

எயிற்கின் ஸ்பென்ஸின் கப்பற் சரக்குச் சேவைத் துறை, 2024ஆம் ஆண்டின் தேசிய வியாபாரத் தரச் சிறப்பு விருதுகள் நிகழ்வில் "கப்பற்றுறை மற்றும் தொடர்புடைய சேவைகள்" பிரிவின் கீழ் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது. வியாபாரத் துறையில் தரச்சிறப்பை அங்கீகரித்துப் பாராட்டும் இந்த மதிப்பார்ந்த விருதுகள் நிகழ்வு கொழும்பிலுள்ள சங்ரிலா ஹொட்டேலில் இடம்பெற்றது.

தேசிய வியாபாரத் தரச்சிறப்பு விருதுகள் என்பது இலங்கையின் தேசிய வணிகச் சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்படும் மதிப்பு மிக்க அளவுகோல் போட்டியாகும். 19ஆவது வருடமாக நடத்தப்படும் இந்த நிகழ்வு, இலங்கையில் வியாபாரச் சாதனைகளின் உச்சநிலையை கொண்டாடும் நிகழ்வாகும்.

தரச்சிறப்பின் உலகத் தராதரங்களை அடைந்த நிறுவனங்களைப் பாராட்டி பாராட்டி விருதுகள் வழங்கப்படுகின்றன. நிறுவன ஆளுகை, ஆற்றலைக் கட்டியெழுப்புதல், செயற்றிறன் முகாமைத்துவம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளின் அணுகுதிறன், நிறுவன சமூகநலப் பொறுப்புணர்வு, சூழல் நல பேண்தகு தன்மை, வியாபார மற்றும் நிதிப் பெறுபேறுகள் போன்ற விரிவான துறைகளில் சிறந்த சாதனைகளைக் கருத்திற் கொண்டே விருதுக்குரிய நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இலங்கையின் சமூகபொருளாதார அபிவிருத்திக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செலுத்தக்கூடிய நிறுவன ரீதியான செயற்றிறனை மேம்படுத்துவதற்கு உதவும் கட்டமைப்பு ஒன்றை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

இலங்கையில் கப்பற் சரக்கு கையாளும் துறையின் முன்னோடியாக விளங்கும் எயிற்கின்



ஸ்பென்ஸ், கப்பற் சரக்குகள் தொடர்பாக யாவும் உள்ளடங்கிய விரிவான தீர்வுகளைத் தொடர்ந்து வழங்கி வருகின்றது. கப்பற் சரக்குகளைக் கையாளும் நிறுவனங்கள் மத்தியில் செயற்பாட்டுத் தரச்சிறப்பை பேணுவதோடு மட்டுமல்லாமல் சுறுசுறுப்பு மற்றும் புத்தாக்கத்தின் மூலம் விநியோகச் சங்கியிலியின் தாங்குதிறனை அதிகரிப்பதற்குப் புரட்சிகரமான புதிய தீர்வுகளையும் எயிற்கின் ஸ்பென்ஸ் அறிமுகப்படுத்துகின்றது.

உலக அரங்கம் மற்றும் உள்நாட்டுச் சந்தையில் நெருக்கடிகள் நிலவியபோதிலும், அணி உணர்வைத் தக்கவைத்துக்கொள்ள தலைமைத்துவம் காட்டிய அர்ப்பணிப்பு போட்டியின் நடுவர்களினால் பெரிதும் பாராட்டப்பட்டது.

# 2024 உலக திரவப் பெற்றோலிய வாயு தினத்தைக் கொண்டாடிய லிட்ரோ காஸ்




2024 உலக திரவப்பெற்றோலிய வாயு தினத்தைக் கொண்டாடும் முகமாக இலங்கையின் முன்னணி திரவப் பெற்றோலிய வழங்குனரான லிட்ரோ நிறுவனம், சமூக, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார மாற்றங்களின் ஊடாக சுத்தமான எரிசக்தியை வழங்குவதில் தான் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

"திரவப் பெற்றோலிய வாயுவுக்குப் பின்னாலுள்ள மக்களை வெளிப்படுத்தல் மற்றும் கொண்டாடுதல்" என்ற தொனிப்பொருளில் இந்த வருடக் கொண்டாட்டங்கள் அமைந்த நிலையில், தேசத்தக் கட்டியெழுப்புவதில் திரவப் பெற்றோலிய வாயு மற்றும் எரிசக்திப் பாதுகாப்பில் இலங்கையில் லிற்றோ நிறுவனம் வெற்றிகரமாக முன்னணியில் இருப்பதைக் குறிக்கும் முகமாக இது காணப்பட்டது.

லிட்ரோ காஸின் விரிவான அணுகுமுறை சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் முதல் ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட பாரிய வணிகங்கள் வரை அனைத்துத் தரப்பையும் திரவப் பெற்றோலிய வாயுவின் ஊடாக ஆதரவளிக்கின்றது. அத்தியாவசியப் பொருளாகத் திரவப் பெற்றோலி வாயுவின் மூலோபாயப் பயன்பாடானது, சிறிய தொழில்முனைவோர் முதல் பெரிய அளவிலான தொழில்கள் வரை உள்நாட்டின் பொருளாதாரத்தின் சுழற்சியை எளிதாக்குவதுடன், பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சி ஆகிய இரண்டிலும் அதன் முக்கிய பங்கை எடுத்துக்காட்டுகிறது.

இவ்வருட உலக திரவப் பெற்றோலிய வாயு தினத்தின் முக்கியத்தை வலியுறுத்திக் கருத்துத் தெரிவித்த லிட்ரோ காஸ் லங்கா நிறுவனத்தின் தலைவரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு. முதித பீரிஸ் குறிப்பிடுகையில், "2024 உலக திரவப் பெற்றோலிய வாயு தினம் முன்னெப்போதும் இல்லாததைவிட இலங்கைக்கு மிகவும் அர்த்தமுள்ளதாக அமைந்துள்ளது.

இலங்கையின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மிகவும் பாதுகாப்பான திரவப் பெற்றோலிய வாயுவை உறுதி செய்வதற்காக நாம் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பின் வெற்றி உள்நாட்டு நிரப்பும் தொழிற்சாலையை புதிதாகப் புனரமைத்து அதன் பணிகளை ஆரம்பித்துள்ளமைக்கு சமாந்தரமாக அமைந்துள்ளது." என்றார்.

# 'சிறந்த பொது ATM செயற்படுத்துநர்' விருது அமானா வங்கிக்கு



அமானா வங்கிக்கு சிறந்த பொது செயற்பாட்டாளர் (பிரிவு C) விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. தேசிய LankaPay கொடுப்பனவு வலையமைப்பை செயற்படுத்தும் LankaClear Limited இனால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த LankaPay Technnovation Awards நிகழ்வில் இந்த விருது வழங்கப்பட்டிருந்தது. இலத்திரனியல் கொடுப்பனவுகளை ஊக்குவிப்பது மற்றும் தொழினுட்ப புத்தாக்கங்களினூடாக வாடிக்கையாளர் சௌகரியத்தை மேம்படுத்துவதில் தொடர்ச்சியாக கவனம் செலுத்தும் நிதிசார் தொழினுட்ப புத்தாக்கங்களுக்கு இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்த கௌரவிப்பு தொடர்பில் அமானா வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால் கருத்துத் தெரிவிக்கையில், "புத்தாக்கம் மற்றும் தொழினுட்பம் போன்றவற்றினூடாக நிதிசார் உள்ளடக்கம் வாடிக்கையாளர் சென்றடைவு மற்றும் சௌகரியம் ஆகியவற்றில் நாம் தொடர்ச்சியாக காண்பிக்கும் முயற்சிகளுக்கு மீண்டும் ஒரு முறை LankaPay இனால் கௌரவிக்கப்பட்டுள்ளோம். எமது டிஜிட்டல் செயற்படுத்தப்பட்ட சுய வங்கிச் சேவை நிலைய வலையமைப்பை விஸ்தரிப்பதற்கான முதலீட்டின் மூலமாக தற்போது நாடளாவிய ரீதியில் 29 பகுதிகளில் இந்நிலையங்களைக் கொண்டுள்ளோம். இவற்றினூடாக, பின்தங்கிய பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் இலகுவான முறையில் வங்கிக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் வசதியை வழங்குகின்றோம். அதிகரித்துச் செல்லும் வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் டிஜிட்டல் எதிர்காலத்தை நோக்கி இலங்கையை கொண்டு செல்லல் போன்றவற்றை நோக்கி எமது சேவைகளை மேம்படுத்துவதில் நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்." என்றார்.

# SLIM "Heroes of Excellence" தேசிய சந்தைப்படுத்தல் விருதுகளை நடத்த திட்டம்



இலங்கையின் சந்தைப்படுத்தல் துறையில் முன்னணி நிறுவனமான இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தினால் (Sri Lanka Institute of Marketing) SLIM தேசிய சந்தைப்படுத்தல் விருதுகள் 2024 (SLIM National Sales Awards 2024) நிகழ்வை தொடர்ச்சியாக 24ஆவது முறையாக நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விருது வழங்கும் விழாவில், 20 இற்கும் மேற்பட்ட தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ள சந்தைப்படுத்தல் நிபுணர்களின் செயற்றிறனைப் பாராட்டி விருதுகள் வழங்கப்படுவதுடன், இவ்விருது வழங்கும் நிகழ்வில் பங்குபற்ற இலங்கையின் சந்தைப்படுத்தல் நிபுணர்கள் மிகவும் ஆர்வமாக உள்ளனர். இவ்வருடம் அதன் எண்ணக்கரு 'சிறந்த நாயகர்கள்' (Heroes of Excellence) என்பதாகும். தெற்காசிய பிராந்தியத்தில் சிறந்த விருது வழங்கும் விழாவாக அறியப்படும் இந்நிகழ்வு, சர்வதேச தரத்திற்கு ஏற்ப சந்தைப்படுத்தல் நிபுணர்களை அடையாளப்படுத்தி, மதிப்பீடு செய்து, அதன் மூலம் SLIM வெற்றியாளர்களை அங்கீகரித்து உலக அரங்கில் உயர்நிலைக்கு கொண்டு செல்கிறது.

இதற்காக விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்களுக்கு அவர்களது நிறுவனங்கள் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தற்காலத்தில் எந்தவொரு வணிகத்தின் வளர்ச்சியிலும் சந்தைப்படுத்தல் ஒரு முக்கிய காரணியாக மாறியுள்ளது. எனவே, சந்தைப்படுத்தல் வளங்கள், தொழில்நுட்பம், உட்கட்டமைப்பு ஆகியவற்றில் நிறுவனங்கள் அதிகளவில் முதலீடு செய்து வருகின்றன. அதற்கமைய, சந்தைப்படுத்தல் குழுக்கள் மிகவும் போட்டித்தன்மையுடன் தமது சேவைகளை மேற்கொள்கின்ற நிலையில், அவர்களுக்கு தேசிய ரீதியிலான அங்கீகாரத்தை வழங்குவதே SLIM தேசிய சந்தைப்படுத்தல் விருது நிகழ்வின் முதன்மையான நோக்கமாகும்.

# தேசிய வணிக விசேடத்துவ விருது 2024: உயர் கௌரவம் வென்ற ராஜா ஜுவலர்ஸ்



பெருமைக்குரிய இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் வழங்கப்படும் மதிப்புமிக்க 2024 தேசிய வணிக விசேடத்துவ விருதை (National Business Excellence 2024) பெற்றுக்கொண்டுள்ளதன் மூலம், இலங்கையின் மிக விருப்பத்திற்குரிய நகையகமான ராஜா ஜுவலர்ஸ், அதன் விசேடத்துவத்திற்கு மேலும் பெருமை சேர்த்துள்ளது. இந்த அங்கீகாரமானது, நாட்டில் அதிக விருதுகளைப் பெற்ற நகை விற்பனை வர்த்தகநாமம் எனும் ராஜா ஜுவலர்ஸின் நிலையை மேலும் உறுதிப்படுத்துகிறது. அத்துடன் இலங்கையின் நகைத் துறையில் விசேடத்துவம், தரம், புத்தாக்கம் ஆகியன தொடர்பில் அவர்கள் கொண்டுள்ள உறுதியான அர்ப்பணிப்புக்கு இது ஒரு அங்கீகாரமாக விளங்குகிறது.

தலைமைத்துவம், நிறுவன நிர்வாகம், திறன் மேம்பாடு, செயற்றிறன் முகாமைத்துவம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அணுகல், நிதிப் பெறுபேறுகள், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான பங்களிப்பு ஆகிய விடயங்களை உள்ளடக்கிய கடுமையான அளவீடுகளின் அடிப்படையில், வணிக நிறுவனங்களை மிக ஆழமாக மதிப்பிடும் ஒரு பெருமைமிக்க அங்கீகாரமாக National Business Excellence Award விருது அமைகின்றது

# சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய ஊழியர்களை கௌரவித்த சன்ஷைன் ஹோல்டிங்ஸ்

2023/24 நிதியாண்டில் பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான சன்ஷைன் ஹோல்டிங்ஸ் நிறுவனம், சிறந்த செயல் திறன்களையும் திறமைகளையும் வெளிப்படுத்திய ஊழியர்களை கௌரவிக்கும் முகமாக வருடாந்த விருது வழங்கும் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது. 'எதிர்காலத்தை ஒளிரச் செய்யுங்கள்' (Ignite the Future) என்ற தொனிப்பொருளின் கீழ், சுகாதார சேவைகள், வாடிக்கையாளர் சேவைகள் மற்றும் விவசாய வணிகம் போன்ற அதன் வணிகத் துறைகளின் ஊழியர்களை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கும் நிகழ்வ ஏற்பாடு செய்யப்பட்டது.

சன்ஷைன் ஹோல்டிங்ஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷியாம் சதாசிவம், துணைத் தலைவர் விஷ் கோவிந்தசாமி, சன்ஷைன் குழுமத்தின் நிறைவேற்று அதிகாரமுடைய முக்கிய குழு உறுப்பினர்கள், சிறப்பு விருந்தினர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்ட இந்த விருது வழங்கும் நிகழ்வில், 156 பேருக்குத் Merit, Excellence மற்றும் Chairman விருதுகள் வழங்கப்பட்டன.



# இலங்கையின் பாடசாலைக் கல்வி முறைமை: ஒரு சமூகவியல் நோக்கு

பாடசாலைக் கல்வி முறைமை மாணவர்களது சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்காகவும் அவர்களை சிறந்த உளநலமுள்ளவர்களாக மாற்றுவதோடு சமூகத்தை வழிநடத்தும் தலைவர்களை உருவாக்குவதற்காகவும் சமத்துவமின்மையையும் இயலாமையையும் அகற்றி ஒரு சமாதானம் மிக்க சமூகத்தை உருவாக்கும் நோக்கத்திலும் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சமூக நிறுவனம் ஆகும். பாடசாலைக் கல்வியைப் பொறுத்தவரையில் கொவிட் தொற்று. பொருளாதார நெருக்கடி, ஸ்திரமற்ற அரசியல் நிலைமை போன்ற பல காரணிகள் பாடசாலைக் கல்வி செயற்பாட்டு திட்டத்தில் பாரிய தாக்கத்தினை செலுத்தியுள்ளன எனலாம்.

உலக மனநல அமைப்பு ஒன்றின் கூற்றுப்படி மனநோய்கள் ஆரம்பமாகும் சராசரி வயது 14 என கணிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அறுபது வீதமான மனநலம் குன்றிய மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்வதில்லை எனவும் கண்டறியப்பட்டுள்ளது. கல்வித் துறையில் அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் பொறுத்தவரையில் அங்குள்ள பாடசாலைகள் ஆரோக்கியமான சமூக, மனவெழுச்சி மற்றும் நடத்தையினை மையமாகக் கொண்ட பாடத்திட்டத்தினையே கருத்திற் கொண்டு செயற்படுகின்றன. எந்தக் கல்வி செயற்பாடாயினும் அங்கு மாணவர்களதும் ஆசிரியர்களதும் மனப்பாங்கு,மன நலம் என்பன கருத்தில் கொள்ளப்படுதல் அவசியமாகும். 2024 ஆம் ஆண்டின் முதலாம் தவணையை பொறுத்தவரையில் மிகக் குறுகிய காலத்தில் பாடத்திட்ட அலகுகள் முடிக்கப்பட வேண்டிய கட்டாயத் தன்மை திணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அதற்கிடையில் பல நாட்கள் வெள்ளம், வேகமான காற்று போன்ற இயற்கை அனர்த்தங்களால் பாடசாலை நாட்கள் பாதிப்பை எட்டின. இதன் மத்தியில்:

1. சில ஆசிரியர்கள் தினம் தோறும் சமூகமளித்து பாடங்களை கற்பித்தனர்.

2.சிலர் பாடசாலைக்கு சமுகம் அளித்தும் வகுப்பறைக்கு சமூகம் அளிக்கவில்லை

3. சிலர் வகுப்பறைக்குச் சென்றும் பாடம் நடத்தவில்லை

4. சில ஆசிரியர்கள் பாடம் நடத்தியும் ஒரு சில தலைப்புகளை மாத்திரம் கற்பித்து சில தலைப்புகளை கற்பிக்காமல் பாடத்திட்டத்தை முடித்தோர்.

இவ்வாறு பல வகையிலும் ஆசிரியர்களது செயற்பாட்டினை அடிப்படையாக வைத்து ஆசிரியர்களை வகைப்படுத்த முடியுமாக உள்ளது.

இவ்வாறு இருக்கையில், தமது தொழில் கடமையை சரியாக நிறைவேற்றும் ஆசிரியர்களும் பல்வேறு சவால்களையும் சிக்கல்களையும் எதிர்நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இது இவ்வாறு இருக்கையில் பாடசாலையில் இருந்து வீடு வந்த பிள்ளைகள் எதற்கும் நேரம் இன்றி அளவுக்கு அதிகமான மாலைநேர வகுப்புகளுக்கு ஓட வேண்டிய நிலமை . பாடசாலையில் கற்றல் கற்பித்தலில் ஏற்பட்ட குறைபாடுகளை அதற்குக் காரணமாக மேற்கோள் காட்டி முன்வைக்கின்றனர் இம்மாணவர்களும் பெற்றோர்களும். இவ்வாறு மாணவர்கள் எல்லா பாடங்களுக்கும் பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்வதனால் அவர்களுக்கு ஓய்வு எடுக்கவோ விளையாடவோ நேரம் கிடைப்பதில்லை . இவ்வாறான செயற்பாடுகள் மூலம் மன அளவில் பலவீனமான ஒரு சமுதாயத்தை உருவாக்கும் மறைமுகத் திட்டம் நடந்தேறுகிறது எனலாம்.

மறுபுறம் ஏற்கனவே நாட்டின் பொருளாதார நெருக்கடியினால் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வரும் பெற்றோர் தமது பிள்ளைகளை ஆளாக்குவதற்கு அவதியுறுகின்றனர். அவர்கள் பணம் இன்றி திண்டாடுகின்றனர் . இதனால் குடும்பத்தில் சிக்கல்கள் உருவாகின்றன.

கடந்த காலங்களில் மாணவர்களுக்கு ஒரு பரீட்சை நடந்து முடிந்ததும் ஒரு சிறிய விடுமுறை அளிக்கப்பட்டு மாணவர்கள் புத்துணர்ச்சி அளிக்கப்பட்ட பின்பே மற்றும் ஒரு தவணை ஆரம்பமாகும். ஆனால் அண்மைக் காலங்களில் வழங்கப்



பட்ட விடுமுறைகளோ மாணவர்களுக்கு கற்க வேண்டிய தருணத்தையே ஏற்படுத்தியதல்லாமல் அவர்களுக்கு ஓய்வு மற்றும் சந்தோஷத்தை அனுபவிக்கும் வகையில் அமையவில்லை.

சிறந்த ஆசிரியர்கள் அழுத்தத்திற்கு உள்ளாகும் போது அவர்களது கடமையை சரிவர நிறைவேற்ற முடியாமல் திண்டாடுகின்றனர் . அவசரமாக பாடத்திட்டத்தை முடிக்க வேண்டும். அவசரமாக பரீட்சை நடத்த வேண்டும். அவசரமாக விடைப்பத்திரங்களை திருத்த வேண்டும் என்ற திண்டாட்டத்துக்கு உள்ளாகின்றனர். ஒரு கல்வியாண்டின் சரியான திட்டமிடல்களை மேற்கொண்டு சரியான முறையில் கல்வி செயற்பாடுகளை கால வரையறைக்குட்பட்ட வகையில் அமுல்படுத்தும் பாரிய பொறுப்பு உயர்மட்ட அதிகாரிகளின் கரங்களில் இருந்தாலும், மாணவர்க மற்றும் ஆசிரியர்களது உளநலத்தினை கருத்தில் கொண்டு உருவாக்கப்படும் கொள்கைகளே வெற்றிகரமான கல்வி முன்னேற்றத்திற்கு வழிகோலும்

நதீஹா ஹிஸ்மி
பேராதனை பல்கலைக்கழகம்

# கைத்தொழில் அமைச்சு

**(சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவு)**

## இலங்கை கைப்பணிச் சபை – லக்சல

LAKSALA State Gift & Souvenir Boutique

பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பலகை மற்றும் இரும்புப் பொருட்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் கழிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல்.

இலங்கை கைப்பணிச் சபையின் கீழ்க்காணும் வளாகங்களில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பலகை மற்றும் இரும்புப் பொருட்கள் அலுவலக உபகரணங்கள் மற்றும் ஏனைய கழிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இடம் | பொருட்களை பரீட்சித்தல் மற்றும் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் தினம் |
|---|---|
| 01. கோட்டை லக்சல கட்டிடம் இல.60, யோர்க் வீதி, கொழும்பு - 01 | 2024.07.10 |
| 02. கட்டுபெத்த லக்சல வளாகம் இல. 282, காலி வீதி, கட்டுபெத்த, மொறட்டுவை | 2024.07.10 |

இப்பொருட்களை கட்டுபெத்த லக்சல வளாகத்தில் மற்றும் கோட்டை லக்சல கட்டிடத்தின் காட்சியக முகாமையாளரைச் சந்தித்து மேலே தரப்பட்டுள்ள தினங்களில் பரீட்சித்துப் பார்த்து மீளளிக்கப்படாத ரூ. 1000/- தொகையை செலுத்தி விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்டு பொறியிடப்பட்ட விலைமனுக்களை மேற்படி தினங்களில் பி.ப. 2.00 இற்கு முன்பு சமர்ப்பித்தல் வேண்டும். பி.ப. 2.00 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அதிகூடிய விலையை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரி அன்றே பி.ப. 5.00 இற்கு முன்பு முழுத்தொகையைச் செலுத்தி அப்பொருட்களை அகற்றிக் கொள்ளல் வேண்டும்.

மேலதிக தகவல்களை 0112557132 தொ.பே.இலக்கத்தை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை கைப்பணிச் சபை - லக்சல,**
**இல. 215, பௌத்தாலோக்க மாவத்த, கொழும்பு - 07**

# பாதுகாப்பு அமைச்சு

## இலங்கை இராணுவம்

**இலங்கை இராணுவத்திற்கான புதிய / உலர் உணவுப் பொருட்களை வழங்கல் மற்றும் விநியோகிப்பதற்கான கொள்முதல் - 2025 வருடம்**

## விலைமனுக்கோரல் கூட்டத்தின் திருத்தம்

**ஒப்பந்த அடையாள இலக்கம்:**
**S&T/03/DRY RATION/FRESH RATION/2025(25)**

1. மேற்குறிப்பிடப்பட்ட கொள்முதல் தொடர்பாக 2024.06.26 ஆம் திகதி வார நாட்களில் வெளியான தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகை மற்றும் 2024.06.30 ஆம் திகதி வெளியான சிலுமின, சன்டே ஒப்சேவர் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட விளம்பரம் குறித்தானது. அவ்விலைமனுக்கோரலில் 07 இல் குறிப்பிடப்பட்ட முன் மனுக் கூட்டத்தின் திகதி மற்றும் நேரம் **2024.07.11 ஆம் திகதி பி.ப.03.00 மணி** எனத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.
2. மேலே குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரத் திருத்தத்தினை தவிர பந்தி 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பத்திரிகைகளில் வெளியான ஏனைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.
3. இது தொடர்பாக மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் மற்றும் தொலைபேசி இலக்கங்களினூடாக பெற்றுக்கொள்ளமுடியும்.

**கவனத்திற்கு** : பணிப்பாளர் (விநியோகம் மற்றும் போக்குவரத்து)
**விலாசம்** : இராணுவத் தளபதி,
இராணுவத் தலைமையகம்,
ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டை.

**தொலைபேசி இலக்கம்** : 011-2302569, 011-2302568
**மின்னஞ்சல்** : dteofsuptender@gmail.com

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான கொள்முதல் குழு,
(முப்படைகளுக்கான புதிய மற்றும் உலர் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்தல் - 2025)
பாதுகாப்பு அமைச்சு

SELACINE

# பாதுகாப்பு அமைச்சு

## இலங்கை கடற்படை

## விலைமனுக்கோரலின் கூட்டம் மீள் கால அட்டவணைப்படுத்தல்

**இலங்கை கடற்படையின் கப்பல்கள் / முகாம்களுக்கான புதிய/ உலர் உணவுப் பொருட்களை வழங்கல் மற்றும் விநியோகிப்பதற்கான கொள்முதல் - 2025 வருடம்**

**ஒப்பந்த அடையாள இலக்கம் : *SLN/VICT/ 01/2025***

1. மேற்குறிப்பிடப்பட்ட கொள்முதல் தொடர்பாக 2024.06.26 ஆம் திகதி வார நாட்களில் வெளியான தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகை மற்றும் 2024.06.30 ஆம் திகதி வெளியான சிலுமின, சன்டே ஒப்சேவர் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட விளம்பரம் குறித்தானது. அவ்விலைமனுக்கோரலில் பந்தி 07 இல் குறிப்பிடப்பட்ட முன் மனுக் கூட்டத்தின் திகதி மற்றும் நேரம் **2024.07.11 ஆம் திகதி பி.ப.03.00 மணி** எனத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.
2. மேலே குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரத் திருத்தத்தினை தவிர பந்தி 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பத்திரிகைகளில் வெளியான ஏனைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.
3. இது தொடர்பாக மேலதிக விபரங்களைப் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

**கவனத்திற்கு** : பணிப்பாளர் கடற்படை (உணவு மற்றும் சீறுடை)
**விலாசம்** : கடற்படை தளபதி
கடற்படை தலைமையகம்
த.பெ.இல.593, கொழும்பு 01.

**தொலைபேசி இலக்கம்** : 011 7190000 நீடிப்பு 12351, 011 7192351
**தொலைநகல் இலக்கம்** : 011 2424577
**மின்னஞ்சல்** : nhqdnvc@navy.lk, nhqdnvc@gmail.com

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான கொள்முதல் குழு,
(முப்படைகளுக்கான புதிய மற்றும் உலர் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்தல் - 2025)
பாதுகாப்பு அமைச்சு
2024.07.04

SELACINE

# இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## கிராமிய வீதித் திட்டத்திற்கான விலைமனுக்கோரல் (IFB)

**(IFB No. RRP/GR/CE(MNG)/2024/01)**

மேற்படி IFB இலக்கத்தின் கீழ் மொனராகலை மாவட்டத்தில் ஓர் வீதித் திட்டத்திற்காக, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) சார்பாக, பிரதம பொறியியலாளரின் பெறுகைக் குழு (மொனராகலை) இன் தலைவர் பொறியிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024.07.04 முதல் 2024.07.25 வரை (RDA) இணைய தளம் www.rda.gov.lk ஐ பார்வையிடுமாறு அல்லது தொலைபேசி இல. 055 - 2276597 ஊடாக அழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**பிரதம பொறியியலாளர் (மொனராகலை)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# பெறுகை அறிவித்தல்

## அரச அச்சக கூட்டுத்தாபனம்

**விலைமனுக்களுக்கான அழைத்தல்**

**(NCB) உள்ளூர் வழங்கல்**

கீழேயுள்ள பொருளின் வழங்கலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் உள்ளூர் முகவர்களிடமிருந்து அரச அச்சக கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| FILE REFERENCE | QTY (M/Tons) | ITEM | BID BOND (Rs.) |
|---|---|---|---|
| SPC/SUP/F1/002/2024/06 | 3900 Kg. | UV Flexo Ink | Rs. 255,000.00 |

1. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.
2. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக விலைமனுதாரர் பின்வரும் தகுதித்தன்மை தகவுத்திறனுடன் இணைந்தொழுகுதல் வேண்டும்.
   அ. உற்பத்தியாளரின் அதிகாரம்
   ஆ. செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வர்த்தக பதிவு
3. 2024.07.04 ஆம் திகதியிலிருந்து 2024.07.24 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு தொகுதிக்கும் 5,000 ரூபாவை செலுத்திய பின்னர், பாதுக்க, பாணலுவ, அரச அச்சக கூட்டுத்தாபன, வழங்கல் முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
4. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி குறிப்பீடு குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன், 2024.07.25 ஆம் திகதியன்று பி.ப.2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் பாதுக்க, பாணலுவ, அரச அச்சக கூட்டுத்தாபன, வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், அரச அச்சக கூட்டுத்தாபனம், பாணலுவ, பாதுக்க என்ற மேலேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் நிகழ்விற்கு சமுகமளிக்கலாம்.
5. விலைமனுவானது அதனை மூடும் திகதியிலிருந்து 30 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
6. இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கோரும்போது பெற்றுக் கொள்ளும் விலைமனு உத்தரவாத பணவைப்புக்கள் அல்லது நிபந்தனையற்றதும், தலைவர், அரச அச்சக கூட்டுத்தாபனம் என்ற முகவரிக்கு செலுத்தக்கூடிய வங்கி உத்தரவாதமானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை 011-2757500 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக / தொலைநகலூடாக வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**அரச அச்சக கூட்டுத்தாபனம்,**
**பாணலுவ, பாதுக்க.**
**03.07.2024**

SPC

# பாதுகாப்பு அமைச்சு

## இலங்கை விமானப்படை

## முன் ஏலக் கூட்டம் நீடிப்பு

**இலங்கை விமானப்படைக்கான புதிய/ உலர் உணவுப் பொருட்களை வழங்கல் மற்றும் விநியோகிப்பதற்கான கொள்முதல் - 2025 வருடம்**

**ஒப்பந்த அடையாள இலக்கம் : SLAF/RA/TB/2025**

1. மேற்குறிப்பிடப்பட்ட கொள்முதல் தொடர்பாக 2024.06.26 ஆம் திகதி வார நாட்களில் வெளியான தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகை மற்றும் 2024.06.30 ஆம் திகதி வெளியான சிலுமின, சன்டே ஒப்சேவர் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட விளம்பரம் குறித்தானது. அவ்விலைமனுக்கோரலில் பந்தி 07 இல் குறிப்பிடப்பட்ட **"புதிய மற்றும் உலர் உணவுப் பொருட்களை வழங்கல்"** இற்கான முன் மனுக் கூட்டத்தின் திகதி மற்றும் நேரம் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

   மனுக்கள் தொடர்பான கூட்டம் **2024.07.11 ஆம் திகதி பி.ப.03.00** மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, பாதுகாப்பு அமைச்சின் தலைமையக வளாகம், நந்திமித்ர கேட்போர் கூடம், முதலாவது மாடியில் நடைபெறும்.
2. மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பத்திரிகைகளில் வெளியான ஏனைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.
3. இது தொடர்பாக ஆர்வமுள்ள தகுதியினைக் கொண்ட மனுதாரர்கள் தலைமை கொள்முதல் அதிகாரியிடம் பின்வரும் முகவரியில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**கவனத்திற்கு** : தலைமை கொள்முதல் அதிகாரி,
**விலாசம்** : இலங்கை விமானப்படை தளபதி,
பாதுகாப்பு அமைச்சின் தலைமையகம்,
த.பெ.இல. 594,
பாதுகாப்பு அமைச்சின் வாளகம்,
ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டை.

**தொலைபேசி இலக்கம்** : 011 - 2495495/011- 2441553
**தொலைநகல் இலக்கம** : 011- 2441553
**மின்னஞ்சல்** : cpo@slaf.gov.lk

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான கொள்முதல் குழு,
(முப்படைகளுக்கான புதிய மற்றும் உலர் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்தல் - 2025)
பாதுகாப்பு அமைச்சு
2024.07.04

SELACINE


it's what you want
www.adz.lk

OBSERVER adz · வாரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements** (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Gampaha District**

**Gampaha - 033 22 23 464**
1602 - A. L. T. L. Liyanarachchi - Hemas Bookshop, No. 12, Orutota Road, Gampaha.

**Wattala - 011 2 937 989**
1522 - K. Dharmadasa - Dasa Brothers, Supermarket Building, Hendala Junction, Wattala.

**Nilpanagoda - 077 8 627 321**
1570 - K. L. Somasiri - 233/5, Diyulapitiya Road, Nilpanagoda.

**Wattala - 011 2 932 511**
1589 - J. A. Ranil Virendra Anthony Rodrigo - 660/12, Mabola Wattala.

**Kochchikade - 031 22 78 359**
1606 - M. S. A. Chaminda Fernando - Vinoda Advertising, No. 119/A, Chilaw Road, Kochchikade.

**Batuwatta - 071 8 921 271**
1626 - H. D. George - Renuka Grocery, No. 118/1, Station Road, Batuwatta.

**Dunagaha - 077 3 517 752**
1637 - H. Guththila Sarathchandra - Nelligaha Niwasa, Dunagaha.

**Ja-Ela - 011 2 947 379**
1659 - K. Dharmadasa - Dasa Brothers, No. 73, Main Street, Ja-Ela.

**Negombo - 071 480 43 55**
1684 - J. A. Kulasinghe Perera - No. 152/C, Greens Road, Udara Newspaper Agent, Negombo.

**Katunayake - 077 4 115 998**
1920 - S. M. N. Dinesha Fernando - No. 350, Colombo Road, Katunayake.

**Kandana - 011 2 233 651**
1927 - Y. A. D. Rajapaksha - Jayabima Stores, No. 105, Station Road, Kandana.

**Minuwangoda - 011 2 297 881**
1935 - K. L. Somasiri - No. 233/5, Diulapitiya Road, Minuwangoda.

**Katana - 031 2 241 687**
1938 - W. N. D. Agosthinu Appuhami - No. 124/D, Kaluwarippuwa West, Katana.

**Ja-Ela - 071 8 571 713**
1943 - Gamini Arambawatta - No. 28, Old Negombo Road, Kanuwana, Ja-Ela.

**Kotugda - 011 2 290 815**
1944 - M. K. Melcolm Silva - 'Jayamal' Kasagahawatta, Kotugoda.

**Negombo - 071 552 22 40**
1944 - H. A. S. Pushpalatha Rosairo - Rosairo Newspapers and Advertising, Negombo.

**Udugampola - 071 4 554 696**
1470 - K. K. Danesh Pradeepa - 'Kumudu' Nilwala Road, Udugampola.

**Ganumulla - 076 2 217 181**
1969 - S. Damith Mellawa Thanthrige - Ganumulla

**Indigolla - 033 5 613 736**
1982 - M. M. Manjula Saman Kumari - 72/5/C/2, Yakkala Road, Indigolla.

**Kelaniya - 011 2 947 379**
1457 - G. Wimalasiri Perera - No. 555, Dhanushka Velandasela, Waragoda Road, Kelaniya.

**Malwana - 011 2 487 560**
1461 - G. Shamila Vithana - No. 549/5, 'Dilsha' Walgama, Malwana.

**Kadawatha - 011 2 902 092**
1434 - M. M. S. Damayanthi Herath - Adz soon Advertising, 137/1, Kandy Road, Kadawatha.

**Dompe - 071 7 186 955**
1498 - S. A. C. Senadheera - 'Jayanthi', Dompe.

**Kiribathgoda - 077 3 719 282**
1499 - P. A. Priyani Peliarachchi - New Samanala Book Shop, No. 181, Kandy Road, Kiribathgoda.

**Yakkala - 077 3 475 696**
1561 - W. Mudalige - Ruhunu Hardware Stores, No. 50 A, Kirindiwela Road, Yakkala.

**Kirindiwela - 077 2 047 350**
1607 - D. M. Sarath Premathilake - Chandana News Center, Radawana Road, Kirindiwela.

**Nittambuwa - 033 22 89 608**
1654 - W. P. K. R. S. Narangoda - Ganga Trade Center, No. 134, Kandy Road, Nittambuwa.

**Nittambuwa - 077 3 191 979**
1905 - L. T. R. S. Jayawardana - Jayawardena Book Shop, No. 643, Wathupitiwala, Nittambuwa.

**Giriulla - 077 9 542 492**
1906 - K. A. Jagath Chandrasiri - No. 45, Negombo Road, Giriulla.

**Kelaniya - 011 4 820 896**
1910 - P. D. Sumedha Samarajeewa - No. 340, Biyagama Road, Sinharamulla, Kelaniya.

**Makola - 078 5 200 648**
1940 - R. D. Chirantha Jayawardena - No. 365/5, Gunarathna Mawatha, Makola North, Makola.

**ADZ HOTLINE - 011 2 429 369**

**CALL - 011 2 429 342/ 343**

www.adz.lk
it's what you want

# விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

# பெறுகை அறிவித்தல்

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் தங்கும் விடுதிகளின் உணவுத் தேவைப்பாடுகள், உற்சவங்கள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய சகல உணவுத் தேவைப்பாடுகளுக்கும் வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விலைமனுக்கோரல் - 2024

கொழும்பு - 07, பிலிப் குணவர்தன மாவத்தை, 09ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்குரிய தங்கும் விடுதிகளின் சமையலறைக்காக 01 முதல் 11 வரை பின்வரும் வகுதிகளின் கீழ் தேவையான உணவுப் பொருட்களை வழங்குவதற்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. அரிசி வகைகள்
2. தானிய வகைகள்
3. பலசரக்குப் பொருட்கள்
4. குரோசரிப் பொருட்கள் (உணவுப் பொருட்கள்)
5. குரோசரிப் பொருட்கள் (உணவுப் பொருட்கள் அல்லாதவை)
6. யோகட் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகள்
7. கருவாடு
8. இறைச்சி வகைகள் மற்றும் முட்டைகள் மற்றும் மீன்கள்
9. மரக்கறிகள்
10. பழவகைகள்
11. பேக்கரி உற்பத்திகள்

02) இந்த ஒப்பந்தத்தை வழங்குவதற்குத் தகைமை பெறுவதற்கான வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர்கள் பட்டியல்படுத்தப்படாதவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் உணவுப் பொருள் உற்பத்தி / வழங்குதல் தொடர்பில் வியாபாரப் பதிவு மற்றும் கம்பனிகள் பதிவுச் சட்டத்தின் கீழ் செல்லுபடியாகும் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் உணவுப் பொருட்கள் வழங்குதல் தொடர்பில் இரண்டு (02) வருட அனுபவம் மற்றும் திருப்திகரமான சேவையை வழங்கியமையை உறுதி செய்வதற்கான ஆவணங்களின் பிரதிகளை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் கட்டளை வழங்கப்பட்டு 12 மணித்தியாலங்களுக்குள் உணவுப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருள் அல்லாத பொருட்களை கொழும்பு - 07, பதனம் மாவத்தை ரீட் அவென்யூ விடுதிகளின் சமையலறைக்குக் கொண்டு வந்து வழங்கக்கூடிய இயலுமை கொண்டவர்களாகவிருத்தல் வேண்டும்.

03) விலைமனுதாரர்கள் மேற்கூறப்பட்ட அனைத்து பொருட்களையும் அல்லது தெரிவு செய்யப்பட்ட வகுதியொன்றுக்காக மட்டும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் வகுதி மற்றும் வகுதிகளில் உள்ளடங்கியுள்ள சகல பொருட்களுக்காகவும் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04) விளையாட்டுத்துறை அமைச்சின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத 5,000.00 ரூபா தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவிற்குச் சமர்ப்பித்ததன் பின் 2024.07.04 ஆம் திகதி முதல் 2024.07.24 ஆம் திகதி வரையான (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை) அலுவலக நாட்களில் இயைபுடைய பெறுகை ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 0112694566 அல்லது 0112677660 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக மேலதிகத் தகவல்களைப் விசாரித்தறியலாம்.

05) சகல விலைமனுதாரர்களும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வர்த்தக வங்கியிலும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளரின் பெயரில் பெற்றுக்கொண்ட விலைமனுக் காப்பொன்றை (பிணை முறியொன்றை) பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பெறுமதியின் பிரகாரம் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். இந்தப் பிணை முறி 2024.10.18ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

06) ஒவ்வொரு உருப்படியின் பொருட்டும் அங்கீகரிக்கப்பட்ட விலையை விட 10% சந்தை விலை அதிகரிக்கும் வேளையில் அல்லது குறையும் வேளையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசின் பேரில் பெறுகைக் குழுவின் அனுமதியின் பிரகாரம் 02 மாதங்களுக்கு ஒரு முறை விலைகள் தொடர்பான இணக்கப்பாடொன்றுக்கு வரலாம். (Central Bank Daily Price index, Department of Censes and Statistic Daily Price index, Colombo Consumer Price index, Peliyagoda Fish Market & Peliyagoda Maning Market Prices, Super market prices)

07) சந்தை விலை ஏற்ற இறக்கத்திற்கு அமைவாகச் சமர்ப்பிக்கப்படும் சகல விலைகளும் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 90 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும். (மேற்கூறப்பட்ட 06ஆம் இலக்கத்தின் பிரகாரம் விலைமனுக்கள் திருத்தப்பட்டால் அது விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 90 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்)

08) உரிய மாதிரிப் படிவத்தில் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை "மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி" என இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த விலைமனுக்களை 2024.07.25 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் "DSD/PRO/03/02/03-2024" மற்றும் "விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் தங்கும் விடுதிகளின் உணவுத் தேவைப்பாடுகள், உற்சவங்கள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய சகல உணவுத் தேவைப்பாடுகளுக்கு வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விலைமனுக்கோரல் - 2024" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

- பதிவுத் தபாலில் அனுப்பப்படும் விலைமனுக்களை பணிப்பாளர் நாயகம், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கப்படும் விலைமனுக்களை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையினுள் இட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பெறுகைக்கான பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

09) விலைமனுக்கள் 2024.07.25ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் அன்றைய தினம் நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

| ஒப்பந்த இலக்கம் | விபரங்கள் | விலைமனுப் பிணைமுறி | |
|---|---|---|---|
| DSD/PRO/03/02/03-2024 | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் தங்கும் விடுதிகளின் உணவுத் தேவைப்பாடுகள், உற்சவங்கள் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய சகல உணவுத் தேவைப்பாடுகளுக்கு வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விலைமனுக்கோரல் - 2024 | 1. அரிசி | ரூபா 430,000.00 |
| | | 2. தானிய வகைகள் | ரூபா 71,000.00 |
| | | 3. பலசரக்குப் பொருட்கள் | ரூபா 189,000.00 |
| | | 4. குரோசரிப் பொருட்கள் (உணவுப் பொருட்கள்) | ரூபா 708,000.00 |
| | | 5. குரோசரிப் பொருட்கள் (உணவு பொருட்கள் அல்லாதவை) | ரூபா 52,000.00 |
| | | 6. யோகட் மற்றும் பால் உற்பத்திகள் | ரூபா 99,000.00 |
| | | 7. இறைச்சி மற்றும் முட்டை, மீன் | ரூபா 1,759,000.00 |
| | | 8. கருவாடு வகைகள் | ரூபா 139,000.00 |
| | | 9. மரக்கறி | ரூபா 949,000.00 |
| | | 10. பழவகைகள் | ரூபா 298,000.00 |
| | | 11. பேக்கரி உற்பத்திகள் | ரூபா 154,000.00 |

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,**
**இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு-07.**
**தொலைபேசி : 0112-697934 தொலைநகல் : 0112-695822**

---

### இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

## சுகாதார அமைச்சு

### திருகோணமலை துறைமுக பயணிகள் தனிமைப்படுத்தப்படும் பிரிவின் வசதிகளை மேம்படுத்தல்

# விலைமனுக்கோரல்

| | |
|---|---|
| Date: | 04.07.2024 |
| Loan/Grant No. and Title | ADB Grant No.: 0618 - SRI, Health System Enhancement Project |
| Contract No. and Title | HSEP/PMU/PRO/W30.4/04/2024<br>Procurement of Facility improvements to Trincomalee Harbour Passenger Quarantine Unit W30.4 |
| Deadline for Submission of Bids | 15.07.2024 |

1. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) சுகாதார அமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதியுதவியை பெற்றுள்ளது. இந்த நிதியுதவியின் ஒரு பகுதி மேலே குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களின் கீழ் பணம் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படும். ADB யின் தகுதியான பிரதான நாடுகளைச் சேர்ந்த மனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. **சுகாதார அமைப்பு மேம்படுத்தல் திட்டம், திட்ட பணிப்பாளர், கொழும்பு 08, கின்சி வீதி, 3/19. சுகாதார அமைச்சின் செயலாளர் அலுவலகத்தின்** கீழ், (தொழிலாளர்) திருகோணமலை துறைமுக பயணிகள் தனிமைப்படுத்தல் பிரிவில் வசதி மேம்பாடுகளை உள்ளடக்கிய பணிகளை புதுப்பித்து நிறைவு செய்வதற்கான தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

3. ADB ஒற்றை-நிலை ஒரு கடித உறை நடைமுறைக்கு இணங்க திறந்த போட்டி முறையிலான ஏலம் நடத்தப்படும், மேலும் மனு ஆவணத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி, தகுதிவாய்ந்த நாடுகளைச் சேர்ந்த அனைத்து மனுதாரர்களுக்கும் விலைமனுகோரலுக்கான சந்தர்ப்பம் வழங்கப்படும்.

4. பின்வரும் முக்கிய தகுதிகளைக் கொண்ட தகுதியான மனுதாரர்கள் மட்டுமே இந்த மனுக்கோரலில் பங்கேற்க முடியும்.

**A.** நிதி

(i) **வரலாற்று நிதி செயல்திறன்** - வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனங்களின் சமர்ப்பிப்பு : / கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள். கூட்டாண்மை மற்றும் தனி உரிமையாளர் நிறுவனங்கள்: மனுதாரரின் தற்போதைய நிதி நிலையை நிரூபிக்க கடந்த மூன்று ஆண்டுகளுக்கான (2020/2021, 2021/2022 மற்றும் 2022/2023) அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்/பட்டய கணக்காளரால் சான்றளிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் அல்லது நிதி அறிக்கைகள்.

(ii) **சராசரி ஆண்டு கட்டுமான புரள்வு** - மனுதாரர் (கூட்டு நிறுவனம் மற்றும் கூட்டாண்மை உட்பட) குறைந்தபட்ச சராசரி ஆண்டு கட்டுமான புரள்வானது **LKR ரூ.68.19 மில்லியன்** ஆக இருத்தல் வேண்டும். கடந்த 3 ஆண்டுகளில் நடைபெற்று வரும் அல்லது முடிக்கப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெறப்பட்ட மொத்த சான்றளிக்கப்பட்ட கொடுப்பனவுகளாக கணக்கிடப்படுகிறது.

(iii) **நிதி திறன்** - மனுதாரர் (பொருந்தினால் கூட்டு முயற்சி மற்றும் கூட்டாண்மை உட்பட) தனது நிதி ஆதாரங்கள், தற்போதைய ஒப்பந்தக் கடமைகளுக்கான நிதிக் கடமைகளை கழித்து, **LKR ரூ.40.23 மில்லியன்** ஒப்பந்தப் பொருளுக்கான மொத்தத் தேவையை பூர்த்தி செய்துள்ளது அல்லது அதிகரித்துள்ளது என்பதை நிரூபித்தல் வேண்டும்.

**B.** அனுபவம்

(i) ஒப்பந்ததாரர் கடந்த 5 ஆண்டுகளில் ஒத்த அளவு மற்றும் அதே இயல்பினைக் ஒப்பந்தங்கள் - (பொருந்தினால் கூட்டு முயற்சி மற்றும் கூட்டாண்மை உட்பட) தனி ஒப்பந்ததாரராக, கூட்டு முயற்சியின் பங்குதாரராக அல்லது துணை ஒப்பந்ததாரராக, வெற்றிகரமாக அல்லது கணிசமாக முடிக்கப்பட்ட குறைந்தது ஒரு ஒப்பந்தத்தில் பங்கேற்றிருத்தல் வேண்டும், மேலும் இது முன்மொழியப்பட்ட பணிக்கு ஒத்ததாக காணப்படும். ஒப்பந்தத்தின் கீழ் ஒப்பந்ததாரரின் பங்களிப்பின் மதிப்பு **LKR.ரூ.27.27** மில்லியனுக்கும் அதிகமாக இருத்தல்.

**தகைமைகள் குறித்தான விபரங்கள் மனு ஆவணத்தில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன.**

5. மனுதாரர்கள் அலுவலக நேரங்களில் (09:00 மணி முதல் 15:00 மணி வரை) வேலை நாட்களில் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள மற்றும் மனு ஆவணங்களை இலவசமாக பரிசீலனை செய்துக்கொள்ளலாம்.

**திட்டப் பணிப்பாளர்,**
**சுகாதார அமைப்பு மேம்படுத்தல் திட்டம்,**
**இல-3/19, கின்சி வீதி, கொழும்பு 08, இலங்கை.**
**மின்னஞ்சல் : pmu@hsep.lk, தொ.பே : 011 – 2 697 173 மற்றும் தொ.ந: 011 – 2 697 163**

6. தகுதியான மனுதாரர்கள் ஆங்கில மொழியிலான மனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள பின்வருவனவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

- மேலே உள்ள முகவரிக்கு திருகோணமலை துறைமுக பயணிகள் தனிமைப்படுத்தல் பிரிவு W 30.4 க்கான வசதிகளை மேம்படுத்துவதற்கான மனு ஆவணங்களைக் பெறுவதற்கான கோரிக்கை ஒன்றினை முன்வைக்கவும்.
- **2024.08.07 அம் திகதி 15.00 மணிக்கு** அல்லது அதற்கு முன்னர் உருப்படி இல. 08 **(இலங்கை ரூபாய்)** கீழ் அட்டவணையில் கூறப்பட்டுள்ளபடி திருப்பிச் செலுத்த முடியாத கட்டணத்தைச் செலுத்தவும்.
- பணம் செலுத்தும் முறையானது, வேலை நாட்களில் 0900 மணி முதல் 1500 மணி வரை **"செயலாளர் - சுகாதார அமைச்சு, சுகாதார அமைப்பு மேம்படுத்தல் செயற்திட்டம் – கணக்கிலக்கம் - 7040799"** க்கு அல்லது பணமாக அல்லது காசோலை வடிவில் நேரடியா இலங்கை வங்கி கணக்கிலக்கம் 7040799 இற்கு வைப்புச்செய்யலாம்.

7. முன்மனுக் கூட்டம் **2024.07.15** ஆம் திகதி **1000** மணிக்கு நடைபெறும். பணிப்பாளரினால் நடத்தப்பட்ட பந்தி 5 இல் கொடுக்கப்பட்ட முகவரியில். மனுதாரர்கள் அனைவரும் இந்த முன்மனுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கடுமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

8. மனுக்கள் அனுப்பவேண்டிய முகவரி :

**திட்டப் பணிப்பாளர்,**
**சுகாதார அமைப்பு மேம்படுத்தல் திட்டம்,**
**இல-3/19, கின்சி வீதி, கொழும்பு 08, இலங்கை.**

மேலே முகவரியில் **2024.08.08** ஆம் திகதி 1000 மணிக்கு முன்னர் மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மனுப் பாதுகாப்புடன் இடுதல் வேண்டும். ஏலப் பாதுகாப்பு வங்கி உத்தரவாதத்தின் படிவத்தில் சமர்ப்பிக்கப்பட்டால், அவ் மனுப் படிவங்களின் பிரிவு 4 இல் கொடுக்கப்பட்டுள்ள வடிவமைப்பைப்பின்படி இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியினால் **"செயற்திட்ட பணிப்பாளர் - சுகாதார அமைப்பு மேம்படுத்தல் செயற்திட்டம்"** எனும் பெயரில் வழங்கப்படும்.

| சுகாதார நிலயத்தின் பெயர் | மனுப்பாதுகாப்பு (LKR) | மீளச்செலுத்தப்படாத கட்டணம்/ LKR |
|---|---|---|
| Facility improvements to Trincomalee Harbour Passenger Quarantine Unit. | 681,000.00 | 10,500.00 |

9. தாமதமான மனுக்கள் நிராகரிக்கப்படும் மற்றும் திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும். மனுக்கள் சமர்ப்பிப்பதற்கான நேரம் முடிந்தவுடன் மனுதாரர்கள் அல்லது கலந்துகொள்ளத் தேர்ந்தெடுக்கும் அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.

10. மனுக்கள் திறக்கப்பட்ட நாளிலிருந்து **120 நாட்களுக்கு** செல்லுபடியாகும். மனுப் பாதுகாப்பு மனு திறக்கப்பட்ட நாளிலிருந்து **148 நாட்களுக்கு** செல்லுபடியாகும்

11. மனுத் தயாரிப்பு அல்லது விநியோகம் தொடர்பாக மனுதாரர்களால் ஏற்படும் எந்தவொரு செலவுகளுக்கும் சுகாதார அமைச்சு அல்லது அலுவலகத்தின் சுகாதார அமைப்பு மேம்படுத்தல் திட்டம் பொறுப்பாகாது.

12. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர், உள்ளூர் மனுதாரர்கள் கட்டிடக் கட்டுமானத்தில் கட்டுமானத் தொழில் மேம்பாட்டு ஆணையத்தில் (CIDA) பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்/திட்ட பணிப்பாளர்,**
**செயற்திட்ட கொள்முதல் குழு,**
**சுகாதார அமைப்பு மேம்படுத்தும் செயற்திட்டம்,**
**இல-3/19, கின்சி வீதி, கொழும்பு 08, இலங்கை.**
**திகதி 2024.07.04**

SELACINE

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# அறிவித்தல்

## கித்துல் துறையில் பாரிய அளவிலான மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கான செயலமர்வு

### கித்துல் துறையின் நிலைப்பாட்டிற்கான செயலமர்வு

கித்துல் துறையின் நிலைப்பாட்டிற்காக அத்துறையில் ஈடுபட்டுள்ள பாரிய அளவிலான மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கான செயலமர்வு கித்துல் அபிவிருத்தி சபையினால் நடத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

தொழில் முயற்சியாளர்கள் முகம்கொடுக்கும் பிரதான சிக்கல்களை இனங்கண்டு அச்சிக்கல்களுக்கான தீர்வை வழங்குதல் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் உத்தேசிக்கப்படுவதுடன், இந்நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2024.07.10ம் திகதிக்கு முன்பு கீழே தரப்பட்டுள்ள தகவல்களை கீழ்க்காணணும் முகவரியின் ஊடாக அனுப்பி பதிவுசெய்யுமாறு தயவுடன் அறிவிக்கிறேன். ஆர்வம் காட்டுகின்ற தொழில் முயற்சியாளர்களில் முதன்முதலாக கிடைக்கும் 50 விண்ணப்பங்களை பதிவு செய்துகொள்வதற்கு உத்தேசிக்கப்படுவதுடன் அத் தொழில்முயற்சியாளர்களுக்கு இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைபெறும் திகதி மற்றும் நேரம் அறிவிக்கப்படும்.

**தலைவர்,**
**கித்துல் அபிவிருத்தி சபை,**
**9ம் மாடி,**
**செத்சிரிபாய 11ம் கட்டம்,**
**பத்தரமுல்ல**

பெயர் :-
வியாபாரத்தின் தன்மை :-
வியாபார பதிவு இலக்கம் :-
தொலைபேசி இல :-
மின்னஞ்சல் முகவரி :-
தபால் முகவரி :-

**மின்னஞ்சல் முகவரி : genkdb1@gmail.com**
**மேலதிக விபரங்கள் : 0112186259**




இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## கேள்விக்கோரல்களுக்கான அழைத்தல்

### இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலையின் வருமானத்தினால் நிதியிடப்பட்டது

| இல. | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பெயர் |
|---|---|---|
| 1. | RDA/EOM&M/PRC/2024/ELE/15 | தெற்கு நெடுஞ்சாலையில் 05 எண்ணிக்கையான முன்னெச்சரிக்கை கண்சிமிட்டும் முறையை விபத்துக்கள் இடம்பெறக்கூடிய அமைவிடங்களில் புனர்நிர்மாணித்தல் |

தேசிய போட்டிரீதியிலான கேள்விக்கோரல் நடைமுறையின் கீழ் மேலே குறிப்பிட்டுள்ள பெறுகைகளுக்கான கேள்விக்கோரல்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் ஆகியவற்றிற்கான இணைய பக்கங்களை 2024.07.04 ஆம் திகதியிலிருந்து 2024.07.24 ஆம் திகதியன்று வரையும் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அதிவேக நெடுஞ்சாலை இயக்குதல், பராமரிப்பு மற்றும் நிர்வகித்தற் பிரிவு,**
**பிரதி பணிப்பாளர் நாயகம் மே/பா.,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கஹட்டகஹஹேன, வல்கம,**
**பண்டாரகம.**

Repeat Your ad For Better Offers

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

WP - YA-7127 BAJAJ AR4S-UG - THREE WHEELER - 2010 - RED கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 081 2 081033.
043900

### வேலைவாய்ப்பு

**325 தொழில்துறை**
பொது

கொழும்பில் உள்ள சலூன் கடைக்கு முடி வெட்ட தெரிந்த ஆண் ஒருவர் தேவை. மேலதிக விபரங்களுக்கு தொ.இல. 0772976364.
043491

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## விலைக்கோரலுக்கான அழைப்பு

### கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
### தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை

## பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள், லொறிகளை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கோரல் – 2024

**பெறுகை இலக்கம்: E/7/G/VE/DES/2024**

01. தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையில் பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பின்வரும் வாகனங்களை விற்பனை செய்வதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | வாகன இலக்கம் மற்றும் அடையாளம் காணும் இலக்கம் | வர்க்கம் | ஏனைய விபரங்கள் |
|---|---|---|---|
| **மோட்டார் சைக்கிள்** | | | |
| 01 | 145-1680 | ஹீரோ ஹொண்டா CD 100 | |
| 02 | 154-3649 | ஹீரோ ஹொண்டா CD 100 | |
| 03 | GB – 4995 | பஜாஜ் ஜாலான் | |
| 04 | GB – 9357 | பஜாஜ் பொக்ஸர் | |
| 05 | 86 ஸ்ரீ 0930 | யமஹா | |
| 06 | GY – 0066 | ஹீரோ ஹொண்டா CD 100 | |
| 07 | Lot - 01 | கவசாகி | பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ளது |
| 08 | Lot - 02 | கவசாகி | பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ளது |
| 09 | Lot - 01 | பஜாஜ் பொக்சர் | பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ளது |
| **லொறி** | | | |
| 10 | 41-1129 | ISUZU TSD55 | |

02. மேற்கூறிய மோட்டார் சைக்கிள்களை மஹயாய மாதிரி தென்னந்தோட்டம், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, மாகந்துர, கோனவில எனும் முகவரியில் மற்றும் லொறியை நீர்கொழும்பு, விதை உற்பத்திப் பிரிவு, தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, இல. 19, கம்மிட்ட வீதி, நீர்கொழும்பு எனும் முகவரியில் 2024-07-04ஆம் திகதி முதல் 2024-07-25ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நேரத்தினுள் பரீட்சித்துப் பார்க்கலாம்.

03. ஆர்வமுள்ள தகைமை வாய்ந்த விலைமனுதாரர்கள் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் வழங்கல் அதிகாரியிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் தலைமை அலுவலகம்/ மஹயாய மாதிரி தென்னந்தோட்டம்/ நீர்கொழும்பு விதை உற்பத்திப் பிரிவு எனும் இடங்களில் 2024-07-04ஆம் திகதி முதல் 2024-07-25ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. ஒரு மோட்டார் சைக்கிளின் பொருட்டு 500.00 ரூபாவும் மற்றும் லொறிக்காக 2000.00 ரூபா வீதம் மீளளிக்கப்படாத விலைமனுப் படிவக் கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. ஒரு மோட்டார் சைக்கிளின் பொருட்டு 1000.00 ரூபா மீளளிக்கப்படாத வைப்பொன்றையும் மற்றும் லொறிக்காக 5000.00 ரூபா மீளளிக்கப்படாத வைப்பொன்றையும் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அதன்பொருட்டு வழங்கப்படும் பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

06. ஒரு விலைமனு ஒரு வாகனத்திற்காக மட்டுமே செல்லுபடியாகும் என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது மூலப்பிரதியை "Original" எனவும் நகல்பிரதியை "Duplicate" எனவும் குறிப்பிட்டு விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வாகனத்தின் இலக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

07. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஆவண முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையொன்றினுள் இட்டு 2024-07-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அவ்வாறல்லாவிடில் தலைமை அலுவலகத்தின் தரை தளத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

08. 2024-07-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்தவுடன் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

09. விலைக்கோரல் தொடர்பான இறதித் தீர்மானம் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானமாகும்.

அனுப்பவேண்டிய முகவரி:

**தவிசாளர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை,**
**9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**
**தொலைபேசி: 0112861331 / 0112193457**
**தொலைநகல்: 0112861332**

# அறிவித்தல்

## வ/ப அளவ்வ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 2024 – 06 – 30ஆம் திகதியில் வாக்குரிமையுள்ள அங்கத்தவர்களின் பெயர்ப் பட்டியலை காட்சிப்படுத்துதல்

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பதிவாளரினால் (வடமேல்) வெளியிடப்பட்டுள்ள 2131/54 மற்றும் 2019 ஜுலை 12ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் திருத்தப்பட்ட 1981/2 - 2016 ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்ட வடமேல் மாகாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதேச செயற்குழுவைத் தெரிவு செய்தல், கூட்டுறவு பதவிநிலை தேர்தல் கட்டளையின் 5.1 கட்டளையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள, சங்கத்தின் பின்வரும் கூட்டுறவுச் சங்கப் பிரதேசங்களின் வாக்குரிமை அங்கத்தவர் பெயர்ப் பட்டியல் 2024-07-11ஆம் திகதி முதல் 2024-07-25ஆம் திகதி வரையான காலத்தில் சங்கத்தின் பிரதான அலுவலகம் மற்றும் பின்வரும் இடங்களில் கடமை நேரங்களில் காட்சிப்படுத்தப்படும்.

| தொ. இல. | பிரதேச இல. | பிரசேத்தின் பெயர் | காட்சிப்படுத்தப்படும் இடம் |
|---|---|---|---|
| 01 | 01 | அளவ்வ | அளவ்வ கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 02 | 02 | கல்பொத்தேபொல | கல்பொத்தேபொல கூட்டுறவு மலர்ச்சாலை |
| 03 | 03 | குடுமுல்ல | குடுமுல்ல கூட்டுறவு பிரதேசம் |
| 04 | 04 | பம்பதெனிய | பம்பதெனிய கூட்டுறவு பிரதேசம் |
| 05 | 05 | வலகும்புர | வலகும்புர கூட்டுறவு பிரதேசம் |
| 06 | 06 | மகரச்சிமுல்ல | மகரச்சிமுல்ல கூட்டுறவு கிராமிய வங்கி |
| 07 | 07 | ஹும்புலுவ | ஹும்புலுவ கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 08 | 08 | நுகவெல | பம்பதெனிய கூட்டுறவு பிரதேசம் |
| 09 | 09 | யட்டிகல்மலுவ | யட்டிகல்மலுவ கூட்டுறவு பிரதேசம் |
| 10 | 10 | பொரமடல | பொரமடல கூட்டுறவு கிராமிய வங்கி |
| 11 | 11 | உடுமுல்ல | உடுமுல்ல கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 12 | 12 | வதாவ | உடுமுல்ல கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 13 | 13 | கெப்பிட்டிவலான | போயவலான கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 14 | 14 | போயவலான | போயவலான கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 15 | 15 | கல்தெனிய | கல்தெனிய கூட்டுறவு பிரதேசம் |
| 16 | 16 | மடவல | மடவல கூட்டுறவு பிரதேசம் |
| 17 | 17 | கிரிவானாபொல | மகரச்சிமுல்ல கூட்டுறவு கிராமிய வங்கி |
| 18 | 18 | வல்கமுவ | வல்கமுவ கூட்டுறவு பிரதேசம் |
| 19 | 19 | நவதல்வத்த | நவதல்வத்த கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 20 | 20 | வென்னொருவ | வென்னொருவ கூட்டுறவு கிராமிய வங்கி |
| 21 | 21 | புஜ்ஜொமுவ | புஜ்ஜொமுவ கூட்டுறவு பிரதேசம் |
| 22 | 22 | அபிபோவ | அபிபோவ கூட்டுறவு கிராமிய வங்கி |
| 23 | 23 | தும்புல்ல | நவதல்வத்த கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 24 | 24 | தமுனுபொல | உடுமுல்ல கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 25 | 25 | ஹுபுகஹகெதர | அளவ்வ கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 26 | 26 | ஹெட்டிகெதர | கல்தெனிய கூட்டுறவு கிராமிய வங்கி |
| 27 | 27 | போவல | நவதல்வத்த கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 28 | 28 | கந்தேகெதர | கந்தேகெதர கூட்டுறவு கிராமிய வங்கி |
| 29 | 29 | நுங்கமுவ | உடுமுல்ல கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 30 | 30 | கல்கமுவ | கல்கமுவ கூட்டுறவு கிராமிய வங்கி |
| 31 | 31 | ஹங்கவத்த | ஹங்கவத்த மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 32 | 32 | தெதெல்கமுவ | உடுமுல்ல கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 33 | 33 | ஓதர கிருவன்பொல | மடவள கூட்டுறவு பிரதேசம் |
| 34 | 35 | பாத்தயால | ஹும்புலுவ கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 35 | 36 | ஹென்டுவாவ வத்த | போயவலான கோப்சிட்டி விற்பனை நிலையம் |

**முக்கியம்** : இந்த வாக்குரிமை அங்கத்தவர் பெயர்ப் பட்டியலில் பெயரை உள்ளடக்காதவர்கள் தமது பெயரை உள்ளடக்கிக் கொள்ளல் தொடர்பில் மேன்முறையீடு அல்லது பட்டியலில் தற்போது உள்ளடக்கப்பட்டுள்ள அங்கத்தவர் பெயர் தொடர்பில் எதிர்ப்புகள் ஏதும் இருப்பின் அவைகளை 2024-07-11ஆம் திகதி முதல் 2024-07-25ஆம் திகதி வரையான காலத்தினுள் சங்கத்தின் செயலாளருக்கு எழுத்து மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**கவனிக்கவும்** : இந்த வாக்குரிமை அங்கத்தவர் பெயர்ப் பட்டியலுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளதானது 2023-06-30ஆம் திகதி வரை பங்குப் பணத்தைச் செலுத்தி முடித்து வருடத்தை பூர்த்தி செய்துள்ள அங்கத்துவத்திற்கு உரித்தான அங்கத்தவர்களின் பெயர்கள் மட்டுமே என்பதுடன், 2023-06-30ஆம் திகதியின் பின் அங்கத்துவத்தைப் பெற்றுள்ள அங்கத்தவர்கள் சங்கத்தின் பதவிநிலை தேர்தலில் கூட்டுறவுச் சட்டத்தின் பிரகாரம் வாக்குரிமை இல்லை என்பதை கவனத்திற் கொள்ளவும். (இது தொடர்பில் 2024-07-04ஆம் திகதிய தினமின பத்திரிகை, 2024-07-04ஆம் திகதிய தினகரன் தமிழ் பத்திரிகை விளம்பரத்தின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது)

**கட்டளையின் பிரகாரம்**

**செயலாளர்**
**எம்.எம்.டீ.டீ. குமாரி,**
**வ/ப அளவ்வ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**நாரம்மல வீதி, அளவ்வ.**
**037-2278131**

2024-07-01.




இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**
**1500 கி.மீ. வீதி புனர்நிர்மாணத்திற்கான செயற்றிட்டத்திற்கான**

## விலைக்கோரல்களுக்கான அழைத்தல்

| தொ.இல. | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | RDA/SP/1500KM/WP/220 | மாக்கோல தெற்கு சபாவ வீதியின் புனர்நிர்மாணம் |
| 2 | RDA/SP/1500KM/WP/221 | பியகம யட்டவத் பாரவின் புனர்நிர்மாணம் |
| 3 | RDA/SP/1500KM/WP/DL/215 | Laying and compaction of Aggerate Base Course (ABC), supply and applying of Prime Coat for Road at Avissawella EE Division (Kesbewa, Homagama, Galagedera & Kaluggala Depot) |
| 4 | RDA/SP/1500KM/WP/DL/216 | Laying and compaction of Aggerate Base Course (ABC), supply and applying of Prime Coat for Road at Colombo EE Division (Orugodawatta, Kaduwela, Navinna & Nawala Depot) |

மேலேயுள்ள வேலைகளுக்காக தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. **2024 ஜூலை 03 ஆம் திகதியிலிருந்து 2024 ஜூலை 23 ஆம் திகதியன்று** வரையும் **www.rda.gov.lk & mohsl.gov.lk** என்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணைய பக்கங்களை பார்வையிடுமாறு ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளரின் அலுவலகம் (மேல் மாகாணம்),**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகார சபை

## 1500KM கிராமிய வீதி திட்டத்தின் வழங்கல் வேலைக்கான விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

(IFB இல: 1,500 km/PD(UP)/SUPPLY/ASP/2024/01)

மேற்படி IFB இலக்கத்தின் கீழ் பதுளை மாவட்டத்தில் வீதி மேற்பரப்பிற்கான அஸ்போல்ட் பொருட்களை வழங்குவதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபை (RDA) இன் சார்பாக பெறுகைக் குழு (ஊவா மாகணம்) தலைவர் பொறியிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024.07.04 முதல் 2024.07.26 வரை RDA இணையதளம் ww.rda.gov.lk இணையதளத்தைப் பார்வையிடுமாறு அல்லது 057-2222170, 057-2222171 அழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**மாகாணப் பணிப்பாளர் (ஊவா),**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை.**

## மீட்கப்படாத அடகுத் தங்க நகைகளைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

வரையறுக்கப்பட்ட வயம்ப கூட்டுறவு கிராமிய வங்கிச் சங்கத்தின் பிரதிநிதிகளாக செயற்படுகின்ற வரையறுக்கப்பட்ட அலவ்வ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அலவ்வ அடகுப் பிரிவு, ஹும்புளுவ, உடுமுல்ல, நவதல்வத்த, மடவல, வில்கமுவ, மஹரச்சிமுல்ல, போயவலான, பம்பதெனிய, கல்கமுவ, பொரமடல, புஜ்ஜொமுவ, வலக்கும்புர, அப்போவ, கந்தேகெதர ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளில் 2023.04.30 வரை அடகு வைக்கப்பட்டு 2024 ஏப்ரல் 30 மு.ப. 10.00 இற்கு வரையறுக்கப்பட்ட அலவ்வ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையக கூட்ட மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**பொதுமுகாமையாளர்,**
**வரையறுக்கப்பட்ட அலவ்வ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**நாரம்மல வீதி,**
**அலவ்வ,**
**037 - 2278131**

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz Auto Focus

Sunday Observer
adz it's what you want

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
- Auto Focus
- Vehicle Rent / Wanted
adz Magazine Issued with Sunday Observer
- Photo Classifieds
Hot Line - 011 2 429 369/ 011 2 429 368
E-mail - adzsuo@gmail.com

## இலங்கை அரசாங்க அச்சக பௌத்த சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

காமினி லொக்குகே ஆகிய நான் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் “இலங்கை அரசாங்க அச்சக பௌத்த சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்” எனப்படும் சட்டமூல மொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த சங்கத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) புத்தக பகவானின் தூய்மையான உன்னத ஸ்ரீ சத்தர்ம போதனைகளை நீண்ட காலத்திற்கு பேணிப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு அதனைப் பாதுகாப்பதற்கு அவசியமான பலத்தை வழங்கி, தைரியமூட்டுவது மற்றும் அதற்காக தியாகங்கள் செய்வது :

(ஆ) மும்மணிகளின் ஆசிர்வாதத்துடன் புத்த மத போதனைகளுக்கு இணங்க தான, சீல மற்றும் தியானம் ஆகிய மூன்று புனித காரியங்களினூடாகவும் மற்றும் உயர்ந்த அட்டவகை வழிகள் மூலம் சரியான பாதைக்கு இட்டுச் செல்ல, அதற்கிணங்க செயற்பட்டு சேவைகளை வழங்கி அறிவுரை செய்தல்; மற்றும்

(இ) நன்நடைத்தையுள்ள ஜன சமூகமொன்றை தோற்றுவிப்பதற்காக சங்கத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரையும் புன்னிய காரியங்களில் கலந்துகொள்ளச் செய்தல், பங்கேற்கவைத்தல், நல்வழிப்படுத்தல்.

**பிறவும்.**

**காமினி லொக்குகே**
**பாராளுமன்ற உறுப்பினர்**

## 1964 இலக்கம் 28 இன் காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இல. :-** KES/DS/LND/AC/8/5/18
**காணி அமைச்சின் குறிப்பு இல.** 4-3/6/2018/HW/379

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 2023.11.01ஆம் திகதிய 2356119. இலக்க அரசாங்க வர்த்தமானியை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மேல் |
| மாவட்டம் | : கொழும்பு |
| பிரதேச செயலாளர் பிரிவு | : கெஸ்பேவ |
| கிராமத்தின் பெயர் | : பெலென்வத்தை |
| கிராம நிலதாரி பிரிவு | : இல. 582/பீ, பெலென்வத்தை கிழக்கு |
| ஆரம்ப வரைபட இலக்கம் | : கொ 10002 |
| துண்டு இலக்கம் | : 1 தொடக்கம் 5 (துண்டுகள் 5) |
| விஸ்தீரணம் | : 0.0307 ஹெக்டயார் |

**கே. பி. பிரேமதாச**
**பிரதேச செயலாளர்,**
**கெஸ்பேவ.**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**கெஸ்பேவ.**
**2024.06.18**

## தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதான உணவகத்தை நடத்திச் செல்லல் (2024/2025ம் ஆண்டு) இற்கான விலைமனுக் கோரல்

NIE/LP/2024/34

தேசிய கல்வி நிறுவகத்தின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் மஹரகம, தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதான உணவகத்தை நடத்திச் செல்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட உணவகம்/ரெஸ்டூரண்ட்/ ஹோட்டல் உரிமையாளர்களிடமிருந்து கேள்விகள் ஏற்கப்படும்.

கேள்விப் பத்திரத்திற்காக மீளளிக்கப்படாத ரூ. 1000.00 வைப்பை பணிப்பாளர் நாயகத்தின் கணக்கு இல. 607628 இல் TD24A00000A0 குறியீட்டு இலக்கத்தின் கீழ் இலங்கை வங்கி - மஹரகம இற்குச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை பெறுகை அதிகாரிக்கு சமர்ப்பித்து வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்கள் மற்றும் சகல விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் 2024.07.24 பி.ப. 3.00 இற்கு முடிவுறும்

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களைப் பொறியிட்டு 2024.07.25 பி.ப. 2.00 இற்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, தேசிய கல்வி நிறுவகம், த.பெ. எண். 21, ஹைலெவல் வீதி, மஹரகம என்ற முகவரிக்கு பதிவுத் தபாலின் மூலம் அனுப்பலாம். அல்லது பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாக நிதி மற்றும் உதவிச் சேவை) அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் உள்ளிடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘NIE/LP/2024/34 தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதான உணவகத்தை நடத்திச் செல்வதற்காக சேவை வழங்குநரைத் தெரிவு செய்தல்’ மற்றும் கேள்விகள் திறக்கப்படும் தினம் (2024.07.25) என்று குறிப்பிடுதல் வேண்டும்.

2024.07.25 பி.ப. 2.00 இற்கு கேள்வி ஆவணங்கள் திறக்கப்படும். இப்பெறுகை விடயங்கள் பற்றிய இறுதித் தீர்மானம் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமாகும். இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு 011-7601799, 011-7601797ஐ அழையுங்கள்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவகம்,**
**மஹரகம.**
2024.07.04

## திருத்தப்பட்ட கொள்முதல் அறிவிப்பு

### வெகுசன ஊடக அமைச்சு

**கொள்முதல் நடவடிக்கைகளை இரத்துச் செய்தல்**

N-78

அரச அச்சு திணைக்களத்திற்கு பின்வரும் இயந்திரங்களை வழங்குதல், பொருத்துதல் செயற்படுத்துதல் மற்றும் ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு 2024.06.14 திகதி தினகரன் பத்திரிகையில் பிரசித்தி செய்யப்பட்ட N75" இலக்க பத்திரிகை விளம்பரப்படி வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் / வழங்குனர்களின் இலங்கையின் அதிகாரபூர்வ முகவர்களிடமிருந்து விலைமனு கோரப்பட்டது.

குறியீட்டிலக்கம் : SI2024/11

இயந்திரம் : Both side four colour verical web offset printing machine for book printing

எண்ணிக்கை : 01

அவ் இயந்திரங்களை கொள்வனவு செய்வது தொடர்பான கொள்முதல் அறிவிப்பு இரத்து செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத் தருகின்றோம்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**வெகுசன ஊடக அமைச்சு**
**இல. 163 எசிதிசி மந்திரய**
**கிருலப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொட,**
**கொழும்பு-5.**
**தொலைபேசி / தொலைநகல் - 011-2513467/011-2513458**
**இணையதளம் - www.media.gov.lk**
**2024.07.02**

Applicable Rates for Obituary Notices of Daily News
For 15 Words - Rs. 300
* Each additional word Rs. 20/-
N. B. - Death Certificate is essential
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk
frontoffice@lakehouse.lk

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

வெறிநோயை கட்டுப்படுத்துவதற்காக கைகளை இணைப்போம்
ஆரோக்கியமானதொரு மேல் மாகாணத்தை நோக்கி நடை பயில்வோம்

## பெறுகை அறிவித்தல்

### நாய்களை மலடாக்கல் - 2024
### சுகாதார திணைக்களம் - மேல் மாகாணம்

கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் நாய்களின் பிறப்பை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் நாய்களை மலடாக்குவதற்காக முத்திரை குறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுகோரல் ஆவணங்கள் 2024.07.18 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளர், சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளரின் அலுவலகம், (மேல் மாகாணம்), மாளிகாவத்த, கொழும்பு-10 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேல் மாகாண, சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளரின் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள முத்திரையிடப்பட்ட கேள்விப் பெட்டியில் நேரடியாகவே சேர்க்கப்படல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் உடனடியாகவே கேள்விகள் திறக்கப்படும்.

2024.07.17 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 500 ரூபாவையும் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையான 7500 ரூபாவையும் செலுத்தி இந்த அலுவலக சிறாப்பரினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து வேலை நாட்களில் இந்த அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவிலிருந்து தேவைப்படுத்தப்படும் கேள்விகோரல் ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை கையேற்றுக் கொள்ளலாம்.

**பின்வரும் நிபந்தனைகள் பிரயோகப்படுத்தப்படும்.**

- ❖ தகைமையுள்ள கால்நடை மருத்துவர் ஒருவரினாலேயே சத்திரசிகிச்சை நடாத்தப்படல் வேண்டும்.
- ❖ ஒரு மாவட்டத்திற்கு மாத்திரமே பெண் நாய்களை மலடாக்குவதற்கான தெரிவு செய்யப்பட்ட அணிக்கு கேள்வி வழங்கப்படும்.
- ❖ விண்ணப்பங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது அதற்கமைவாக தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் தெளிவாக அடையாளப்படுத்தப்படல் வேண்டும்.
- ❖ இக்கேள்வியின் இறுதித்தீர்மானத்தை மேற்கொள்வதற்கான உரிமையை பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.
- ❖ மேலதிக விபரங்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்புகொள்ளல் வேண்டும். 011-2437154/ 011-2434660.

**மருத்துவ கலாநிதி (திருமதி) தம்மிக்க ஜயலத்,**
**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**சுகாதாரசேவைகள் மாகாண பணிப்பாளர் (மே.மா.),**
**மாளிகாவத்த,**
**கொழும்பு-10.**

## மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான பெறுகை அறிவித்தல்

### திருத்தம் செய்தல்

### கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை

2024.05.14 தினமின பத்திரிகையில் சிங்கள மொழியிலும் தினகரன் பத்திரிகையில் தமிழ் மொழியிலும் டெய்லி நியூஸ் பத்திரிகையில் ஆங்கில மொழியிலும் பிரசுரமான அறிவித்தலில் **கீழே குறிப்பிடப்படும் உருப்படிக்கு மாத்திரம் இத் திருத்தம் பொருந்தும்**

| No. | உருப்படி | அளவு | மதிப்பிடப்பட்ட தொகை ரூ. மில்லியன் | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | ICU Ventilator (Adult) | 2 | 16 | 4,000.00 |

மேற்படி பெறுகை உருப்படிகளுடன் சம்பந்தப்பட்ட கேள்வி ஆவணங்கள் 2024.07.11 பி.ப. 3.00 வரை இலவசமாக பரீட்சித்துப்பாாக்க முடிவதுடன் கேள்வி ஆவணங்கள் 2024.07.12 பி.ப. 3.00 வரை மேற்படி அறிவித்தலில் குறிப்பிடப்படுமாறு கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில, தெஹிவளை இடமிருந்து கொள்வனவு செய்யலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மேற்படி அறிவித்தலின் பிரகாரம் 2024.07.15 மு.ப. 11.00 இற்கு அல்லது அதற்கு முன்பு தலைவர், பிரதேச பெறுகைக் குழு, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவிலவிற்கு அனுப்புதல் வேண்டும்.

2024.07.15 மு.ப. 11.00 இற்கு கணக்காளர் பணிமனையில் கேள்விகள் திறக்கப்படும்.

கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.07.09 மு.ப. 11.00 இற்கு கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் அலுவலக கேட்போர்கூடத்தில் நடைபெறும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை,**
**களுபோவில,**
**தெஹிவளை.**

# பாரிஸ் ஒலிம்பிக்கிற்கு இலங்கையின் ஐவர் தகுதி: 3 வீரர்கள் காத்திருப்பு











பாரிஸில் இந்த மாத கடைசியில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கு இலங்கையில் இருந்து ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்ற ஓட்ட வீராங்கனை தருஷி கருணாரத்ன மற்றும் ஈட்டி எறிதல் வீராங்கனை டில்ஹானி லேகம்கே உட்பட ஐந்து பேர் இதுவரை தகுதி பெற்றுள்ளனர்.

இதில் இலங்கை பூப்பந்து, நீச்சல் மற்றும் தடகளப் போட்டிகளிலேயே ஒலிம்பிக்கில் பங்கேற்கவுள்ளது. விரேன் நெத்தசிங்க அண்மையில் இளம் இலங்கையராக ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றிருந்தார். அவர் ஆடவர் ஒற்றையர் பிரிவு பூப்பந்து போட்டியில் பங்கேற்கவுள்ளார்.

தடகள போட்டி நிகழ்ச்சிகளில் மத்திய தூர ஓட்;ட வீராங்கனையான 21 வயது தருஷி கருணாரத்ன பெண்களுக்கான 800 மீற்ற போட்டியில் பங்கேற்கிறார்.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் தகுதி பெறுவதற்காக தருஷி கடைசி வரை போட்டிகளில் பங்கேற்று வந்தார். கடைசியாக நடந்த தேசிய விளையாட்டுப் போட்டியில் அவர் பங்கேற்றபோதும் மழைக்கு மத்தியில் போட்டி நடைபெற்றதால் அவரால் போதுமான திறமையை வெளிப்படுத்த முடியாமல்போனது.

இதனால் கடந்த ஜூலை முதலாம் திகதி முடிவுற்ற ஒலிம்பிக் போட்டிகான தகுதி மட்டத்தை அவரால் எட்ட முடியாமல் இருந்தது. எனினும் இம்முறை பாரிஸ் ஒலிம்பிக்கின் பெண்களுக்காக 800 மீற்றர் ஓட்ட போட்டியில் 48 வீராங்கனைகள் தகுதி பெறுவதோடு இதில் அவர் தரப்படுத்தலில் 45 ஆவது இடத்தை பெற்றிருப்பதால் ஒலிம்பிக் தகுதியை உறுதி செய்துள்ளார்.

பாரிஸ் ஒலிம்பிக்கிற்காக இலங்கையின் சிறந்த தர நிலையுடன் டில்ஹானி லேகம்கே தகுதி பெற்றுள்ளார். பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் 32 வீராங்கனைகள் தகுதி பெறும் நிலையில் லேகம்கே தர நிலையில் 26 ஆவது இடத்தை பெற்று பாரிஸ் செல்ல வாய்ப்புப் பொற்றுள்ளார்.

நீச்சலோட்டப் போட்டியில் சர்வதேச தரப்படுத்தல் அடிப்படையில் கைலி அபேசிங்க ஆண்களுக்கான 100 மீற்றர் பிரீஸ்டைல் மற்றும் கங்கா செனவிரத்ன பெண்களுக்கான 100 மீற்றர் பாக்ஸ்ட்ரோக் போட்டிகளில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளனர்.

இதேநேரம் பல்வேறு தகுதி நிலை அளவுகோல்கள் அடிப்படையில் ஒலிம்பிக்கிற்கு தகுதி பெறும் எதிர்பார்ப்புடன் இலங்கையின் மூன்று வீரர்கள் காத்துள்ளனர்.

ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் அருண தர்ஷன தற்போது உலகத் தரப்படுத்தலில் 51 ஆவது இடத்தில் உள்ளார். இந்நிலையில் மூன்று வீரர்கள் வாபஸ் பெறும் பட்சத்தில் அவர் ஒலிப்பிக் தகுதிக்கான 48 வீரர்களுக்குள் வர முடியும்.

அதேபோன்று தெற்காசியாவின் அதிவேக வீரரான யுபுன் அபேகோனும் ஒலிம்பிக்கிற்கு தகுதிபெறும் எதிர்பார்ப்புடன் தொடர்ந்தும் காத்துள்ளார். ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியின் நேரத் தகுதிக்கான வரம்பை எட்ட அவரால் முடியாமல்போனபோதும் சர்வதேச தரநிலை அடிப்படையில் தகுதி பெற தொடர்ந்தும் வாய்ப்பு உள்ளது.

ஈட்டி எறிதல் வீரர் ருமேஷ் தரங்க அண்மையில் காண்பித்த திறமை அடிப்படையில் அந்தப் போட்டியில் ஒலிம்பிக்கில் பங்கேற்பதற்கு தொடர்ந்து வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டி எதிர்வரும் ஜூலை 26 ஆம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## சர்வதேச செய்திகள்



# காசா மக்கள் தொகையில் 80 வீதமானோர் இடம்பெயர்வு: புதிதாக 250,000 பேர் பாதிப்பு

## தொடரும் தாக்குதல்களில் மேலும் பலர் பலி

தெற்கு காசாவின் கான் யூனிஸ் மற்றும் ரபா நகரங்களில் இஸ்ரேலின் புதிய வெளியேற்ற உத்தரவினால் 250,000 பலஸ்தீனர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கும் காசாவுக்கான ஐ.நா. மனிதாபிமான இணைப்பகம் முற்றுகையில் உள்ள அந்தப் பகுதியின் மக்கள் தொகையில் 80 வீதமான 1.9 மில்லியன் மக்கள் தற்போது இடம்பெயர்ந்திருப்பதாக தெரிவித்துள்ளது.

கான் யூனிஸ் நகரில் இருந்து இஸ்ரேலை நோக்கி பலஸ்தீன போராளிகள் ரொக்கெட் தாக்குதல்களை நடத்தியதை அடுத்து அந்த நகரில் இஸ்ரேல் கடந்த திங்களன்று வெளியேற்ற உத்தரவை பிறப்பித்திருந்தது. இதனால் இஸ்ரேலின் குண்டுவீச்சுக்கு மத்தியில் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறியுள்ளனர்.

எனினும் இஸ்ரேல் பாதுகாப்பான வலயம் என்று கூறிப்பிட்ட மத்திய காசாவின் டெயிர் அல் பலாஹ்வில் தொடர்மாடிக் கட்டடம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரே குடும்பத்தின் ஒன்பது பேர் உட்பட குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

'காசாவில் உள்ள பலஸ்தீனிய மக்கள் துன்பப் படுகுழியில் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களது வீட்டு வாழ்வு சிதைக்கப்பட்டு, அவர்களின் வாழ்க்கை நிலைகுலைந்துள்ளது' என்று காசாவுக்கான ஐ.நா. இணைப்பாளர் சிக்ரிட் காக் பாதுகாப்புச் சபையில் நேற்று முன்தினம் (02) குறிப்பிட்டார்.

'ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் அடைக்கலம் மற்றும் பாதுகாப்புத் தேடி மீண்டும் ஒருமுறை இடம்பெயர்ந்திருப்பதோடு, காசா வெங்கும் தற்போதும் 1.9 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

கான் யூனிஸ் பகுதியில் இருந்து வெளியேறுவதற்கு பிறப்பிக்கப்பட்டிருக்கும் புதிய உத்தரவு பெரும் கவலை அளிப்பதாக உள்ளது' என்றும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக இடம்பெறும் காசா போரில் இஸ்ரேல் வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பகுதிகளில் படை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி இருக்கும் நிலையில் கான் யூனிஸில் நேற்று முன்தினம் இரவும் உக்கிர தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரிலும் இஸ்ரேலின் படை நடவடிக்கை இடம்பெற்று வருகின்றன. ரபாவின் தால் அல் சுல்தான் பகுதியில் நேற்று இடம்பெற்ற தாக்குதல்களில் இருவர் கொல்லப்பட்டதாக அல் ஜசீரா செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார். இங்கு இடிபாடுகளில் இருந்து ஏழு சடலங்கள் மீட்கப்பட்டிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

ரபா நகரின் மத்திய பகுதியில் உள்ள இரு இடங்களில் கடந்த செவ்வாய் இரவு உக்கிர மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இதன்போது பல பகுதிகளையும் கைப்பற்றிய டாங்கிகள் நகரில் அண்மைய நாட்களாக மேலும் மேற்கு மற்றும் வடக்கு பக்கமாக முன்னேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காசா நகரின் சுஜையா பகுதியில் இஸ்ரேலிய படை கடந்த ஒரு வாரமாக படை நடவடிக்கையை முன்னெடுத்த நிலையில் அங்கிருந்து வெளியேறிய மக்கள் தமது வீடுகளுக்கு திரும்ப முயன்ற நிலையில் போர் விமானங்கள் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது நால்வர் கொல்லப்பட்டு மேலும் 17 பேர் காயமடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேபோன்று மத்திய காசாவின் மகாசி அகதி முகாமில் கார் ஒன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் மூவர் கொல்லப்பட்டதாக அல் ஜசீரா தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

காசாவில் 271ஆவது நாளாகவே இஸ்ரேல் நேற்றும் தாக்குதல்களை நடத்தியது. இதுவரை இடம்பெற்ற தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 38 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.



### பரவும் நோய்

இதேவேளை காசாவில் இஸ்ரேல் போரை ஆரம்பித்தது தொடக்கம் தமது வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டு மோசமான நிலையில் வாழும் 150,000க்கும் அதிகமான மக்களிடையே தோல் நோய் பாதிப்புகள் ஏற்பட்டிருப்பதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இதில் குறிப்பாக சிரங்கு மற்றும் சின்னம்மை பாதிப்பு அதிகரித்திருப்பதாக மருந்தாளர் ஒருவரான சமி ஹமித் குறிப்பிட்டுள்ளார். டெயிர் அல் பலாஹ் அகதி முகாமில் இடம்பெயர்ந்த மக்களுக்காக அவர் தற்காலிக சிகிச்சை மையம் ஒன்றை நடத்தி வருகிறார்.

தற்காலிக அடைக்கலமாக உள்ள பாடசாலை ஒன்றுக்கு அண்மையில் சென்றபோது அங்கு 150 மாணவர்களில் 24 பேருக்கும் சிரங்கு நோய் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

ஊட்டச்சத்து குறைபாட்டால் காசாவில் உள்ள குழந்தைகள் இடையே நோய் எதிர்ப்பு சக்தி குறைந்திருக்கும் நிலையில் அவர்கள் நோய்களால் பாதிக்கப்படும் நிலை தீவிரம் அடைந்திருப்பதாக எல்லைகளற்ற மருத்துவர்கள் அமைப்புக்கான காசாவில் உள்ள இணைப்பாளர் முஹமது அபூ மகைசீப் குறிப்பிட்டுள்ளார். இடம்பெயர்ந்த மக்கள் சரியான வீடுகளில் வசிக்காததாலும், சுகாதாரமின்மையாலும் அவர்கள் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

காசாவில் நிலவும் வெப்பமான காலநிலை வியர்வை மற்றும் அழுக்குகள் குவிவதை அதிகரித்திருப்பதோடு அது சொறி மற்றும் ஒவ்வாமைக்கு காரணமாகிறது மற்றும் தொற்று நோய்க்கும் வழிவகுப்பதாக அவர் கூறினார்.

'நாம் மணல் மீது வெறும் தரையில் உறங்குகிறோம். கீழால் புழுக்கள் வெளி வருகின்றன' என்று தற்காலிக முகாமில் வசிக்கும் ஏழு குழந்தைகளின் தாயான வபா எல்வான் குறிப்பிட்டார்.

'எனது மகனால் இரவு முழுவதும் தூங்க முடியவில்லை. ஏனென்றால் அவனால் சொறிச்சலை நிறுத்த முடியவில்லை' என்றார். மத்திய காசா நகரான டெயிர் அல் பலாஹ்வுக்கு நெருக்கமாக உள்ள மணல் திட்டு ஒன்றில் வசிக்கும் ஆயிரக்கணக்கானவர்களில் எல்வானின் குடும்பமும் ஒன்றாகும்.

'முன்னர் போன்று எமது குழந்தைகளை குளிப்பாட்ட முடியவில்லை. துப்புரவேற்பாடுகள் மற்றும் கழுவுவதற்கு மற்றும் சுத்தம் செய்வதற்கு துப்புரவு பொருட்கள் எம்மிடையே இல்லாத நிலையில் தொற்று நோய்கள் ஏற்படுவதை தவிர்க்க முடியாது' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதில் கான் யூனிஸில் இருந்த புதிதாக இடம்பெயர்ந்த மக்களுக்கு போதுமான தற்காலிக முகாம்கள் இல்லாத நிலையில் அவர்கள் வீதிகளில் உறங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் நகரின் கிழக்கு பக்கமாக அடைக்கலம் பெற்றுள்ளனர்.

கட்டார், எகிப்து மற்றும் அமெரிக்காவின் மத்தியஸ்தத்தில் இடம்பெற்ற போர் நிறுத்த முயற்சியும் எந்த முன்னேற்றமும் இன்றி ஸ்தம்பித்துள்ளது.

இதில் அமெரிக்க நிர்வாகம் இஸ்ரேலின் சில போர் நடவடிக்கைகளுக்கு கவலையை வெளியிட்டபோதும் அது இஸ்ரேலுக்கு தொடர்ந்தும் உறுதியான ஆதரவை வழங்கி வருகிறது.

பலஸ்தீனர்களின் கொலைகளுக்கு உடந்தையாக இருப்பதாகக் குறிப்பிட்டு அமெரிக்க நிர்வாகத்தில் இருந்து மேலும் 12 அதிகாரிகள் வெளிப்படையாக இராஜினாமா செய்துள்ளனர்.

'காசாவில் முற்றுகையில் உள்ள பலஸ்தீன மக்கள் மீதான கொலை மற்றும் வலுக்கட்டாயமான பட்டியில் அமெரிக்கா இஸ்ரேலுக்கு தொடர்ச்சியான ஆயுத விநியோகம் மற்றும் ஒத்துழைப்பை வழங்கி வருகிறது' என்று இந்த அதிகாரிகள் கூட்டாக வெளியிட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சீனாவில் கன மழையால் 240,000 பேர் வெளியேற்றம்



சீனாவில் கடும் மழை காரணமாக 240,000 பேர் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கிழக்கில் யாங்ஸி நதியிலும் மற்ற ஆறுகளிலும் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது. சீனா கடந்த சில மாதங்களாக மோசமான பருவநிலையை எதிர்கொள்கிறது.

ஒரு பக்கம் கொளுத்தும் வெயில், மறுபக்கம் மக்களை ஆட்டிப்படைக்கும் அடைமழையால் பாதிக்கப்பட்டுள்ளது. உலகம் மோசமான வானிலையை எதிர்கொள்ள வெப்ப வாயு வெளியேற்றமே காரணம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். சீனா அதில் முன்னணி வகிக்கிறது.

கடுமையான மழையால் கிழக்கில் இருக்கும் அன்ஹுய் மாநிலத்தில் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக ஷின்ஹுவா செய்தி நிறுவனம் கூறியது.

# பைடன் மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதற்கு எதிர்ப்பு



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இரண்டாவது தவணைக்கு போட்டியிடுவதற்கு அவரது ஜனநாயக கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு வலுத்து வருகிறது. அவர் பதவி வகிப்பதற்கான உடல் மற்றும் உளதகைமை பற்றி கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது.

குடியரசுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் டிரம்புடன் கடந்த வாரம் இடம்பெற்ற தொலைக்காட்சி விவாதத்தில் 81 வயது பைடன் தடுமாற்றம் கண்டார். இதனை அடுத்தே அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிடுவது குறித்து விமர்சனம் வலுத்துள்ளது.

இந்நிலையில் அந்தத் தொலைக்காட்சி விவாதத்தின்போது தமக்கு தூக்கம் வந்துவிட்டதாக பைடன் ஒப்புக்கொண்டுள்ளார். நீண்ட பயணங்கள் மற்றும் களைப்பினால் தூக்கம் வந்தது என்று விர்ஜினியா மாநிலத்தில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் இரண்டு வாரம் பிரான்ஸுக்கும் இத்தாலிக்கும் தனித்தனிப் பயணங்களை மேற்கொண்டார். நாடு திரும்பிய பின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவோடு லொஸ் ஏஞ்சலிஸ் நகரில் நிதி திரட்டும் நிகழ்ச்சியில் பங்கேற்றார். இதனை அடுத்தே அவர் டிரம்புடன் விவாதத்தில் பங்கேற்றிருந்தார்.

பைடன் தேர்தலில் இருந்து விலக வேண்டும் என்று டெக்சாஸைச் சேர்ந்த ஜனநாயக கட்சி பிரதிநிதிகள் அவை உறுப்பினர் லொயிட் டொக்கெட் முதலாமவராக வெளிப்படையாக அழைப்பு விடுத்துள்ளார்.

அவரது ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்களில் மூவரில் ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் இருந்து பைடன் விலக வேண்டும் என்று விரும்புவதாக ரோய்ட்டர்ஸ் நடத்திய புதிய கருத்துக் கணிப்பு குறிப்பிடுகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 4ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# கொள்முதல் அறிவித்தல்

கடற்றொழில் அமைச்சு

## வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

பூராணவெல்ல மீன்பிடித் துறைமுகத்தில் மேடை தரைப்பாலத்திற்குப் பின்னால் உள்ள சேதமடைந்த கொங்கிரீட் பகுதியைச் சரிசெய்தல் மற்றும் முன்மொழியப்பட்ட உழவு இயந்திரம் மற்றும் கிரேன் பாரந்தூக்கி வாகன நிறுத்துமிடத்தினை நிர்மாணித்தல்.

கொள்முதல் இலக்கம் - **CFHC/PD/T/D-QUAY/P-TRA/PUR/2024-39**

ஹம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுகத்தில் முன்மொழியப்பட்ட நீர்த் தாங்கி கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு கட்டிடத்தினை புனரமைத்தல்.

கொள்முதல் இலக்கம் - **CFHC/PD/T/SEC.BLD./WATER T./HAM/2024-40**

ஹிக்கடுவ மீன்பிடித் துறைமுகத்தில் காணப்படும் பிரதான நுழைவாயில் உள் வீதியை சீரமைத்தல்

கொள்முதல் இலக்கம் - **CFHC/PD/T/REP. INT. ROAD/HIK/2024-41**

ஹம்பாந்தோட்டை, ஹிக்கட்டுவ மற்றும் பூராணவெல்ல மீன்பிடித் துறைமுகங்களில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்காக பொருத்தமான ஒப்பந்ததாரர்களைத் தெரிவுசெய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவத்தை பெற்றுக்கொள்ள பூராணவெல்ல மீன்பிடித் துறைமுகத்திற்காக **ரூ.3,500.00** ஹம்பாந்தோட்டை மற்றும் ஹிக்கடுவ மீன்பிடித் துறைமுகத்திற்காக **ரூ.1,000.00** மீள்செலுத்தப்படாத கட்டணத்தினை செலுத்திய பின்னர் மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புடைய விவரக்குறிப்புகள் பின்வருமாறு.

| தொ/ இல. | கொள்முதல் இலக்கம் | மதிப்பீட்டு செலவு மற்றும் காலம் | தேவையான தகுதிகள் | விலைமனு பிணைத்தொகை | மனுக்கள் செல்லுபடியாகும் காலம் | முன்மனுக் கூட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | **CFHC/PD/T/ D-QUAY/ P-TRA/ PUR/2024-39** | செலவு ரூ.6.0 மில்லியனாகும் (வரி மற்றும் எதிர்பாராத செலவுகளற்ற) ஒப்பந்த காலம் 60 நாட்கள். | 01). C7அல்லது C6 தரத்தில் CIDA பதிவு (விசேடமாக ICTAD கட்டிட கட்டுமானத்திற்காக) 02). (ii) 1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் பிரிவு 8 உடன் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தினால் வழங்கிய சான்றிதழ் பெற்றிருத்தல். (ரூ.05 மில்லியனுக்கு அதிகமான ஒப்பந்ததிற்காக) | **பெறுமதி ரூ.74,000.00** இலங்கையினுள் செயற்படுத்தப்படும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வணிக வங்கியிடம் பெறவேண்டியதுடன் தலைவர், வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இல.15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15 பெயருக்கு வெளியிட வேண்டும். வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கமைய செல்லுபடியாகும் காலம் 2024.11.06 அல்லது பண வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். | மனுக்கள் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து 2024.10.09 ஆம் திகதி வரை | 2024.07.15 மு.ப.10.30 மணி |
| 02. | **CFHC/PD/T/ SEC.BL./ WATER T./ HAM/ 2024-40** | செலவு ரூ.1,894,269.85 மில்லியனாகும் (வரி மற்றும் எதிர்பாராத செலவுகளற்ற) ஒப்பந்த காலம் 60 நாட்கள். | C9 அல்லது அதற்கு மேல் CIDA பதிவு (விசேடமாக கட்டிட கட்டுமானத்திற்காக) | **பெறுமதி ரூ.22,000.00** இலங்கையினுள் செயற்படுத்தப்படும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வணிக வங்கியிடம் பெறவேண்டியதுடன் தலைவர், வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இல.15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15 பெயருக்கு வெளியிட வேண்டும். வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கமைய செல்லுபடியாகும் காலம் 2024.10.09 அல்லது பண வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். | மனுக்கள் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து 2024.09.11 ஆம் திகதி வரை | 2024.07.15 மு.ப.11.00 மணி |
| 03. | **CFHC/PD/T/ REP. INT. ROAD/HIK/ 2024-41** | செலவு ரூ.1.5 மில்லியனாகும் (வரி மற்றும் எதிர்பாராத செலவுகளற்ற) ஒப்பந்த காலம் 30 நாட்கள். | C9 அல்லது அதற்கு மேல் CIDA பதிவு (விசேடமாக கட்டிட கட்டுமானத்திற்காக) | **பெறுமதி ரூ.18,500.00** இலங்கையினுள் செயற்படுத்தப்படும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வணிக வங்கியிடம் பெறவேண்டியதுடன் தலைவர், வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இல.15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15 பெயருக்கு வெளியிட வேண்டும். வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கமைய செல்லுபடியாகும் காலம் 2024.10.09 அல்லது பண வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். | மனுக்கள் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து 2024.09.11 ஆம் திகதி வரை | 2024.07.15 மு.ப.11.30 மணி |

இதற்காக ஆர்வம் காட்டும் தகுதியான வழங்குனர்கள/முகவர்கள் அல்லது பரிந்துரைக்கப்பட்ட முகவர்கள் **2024.07.04 ஆம் திகதி முதல் 2024.07.23** ஆம் திகதி வரை காரியாலய வேளை நாட்களில் **மு.ப.9.00 மணிமுதல் பி.ப.3.00** மணி வரை தலைமை அலுவலகத்தில் உள்ள கொள்முதல் முகாமையாளரிடம் எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பித்தப் பின்னர் மனு ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைமை அலுவலகத்தில் உள்ள கொள்முதல் முகாமையாளரிடம் அல்லது அந்தந்த துறைமுகங்களில் உள்ள துறைமுக முகாமையாரை அணுகி ஆவணங்களை இலவசமாக பரிசீலனை செய்யலாம்.

நகல் பிரதிகள் இரண்டுடன் முத்திரையிடப்பட்ட மனு ஆவணங்கள் **2024.07.24 ஆம் திகதி பி.ப.02.00** மணிக்கு முன்னர் தலைமை அலுவலகத்தில் கொள்முதல் பிரிவில் மனுக்கள் சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள மனுப் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதமான மனுக்கள் நிராகரிக்கப்படும்.

**2024.07.24 ஆம் திகதி பி.ப.02.00** மணிக்கு கொள்முதல் பிரிவில் மனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் மனுக்கள் திறக்கப்படும்.

எந்தவொரு மனு ஆவணத்தையும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்க அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை கொள்முதல் குழு கொண்டுள்ளது.

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக தகவல்களை 011-2529391/011-2525063 எனும் இலக்கங்களினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,**
**இல-15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,**
**கொழும்பு 15.**

SELACINE

---

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

## இலங்கைச் சுங்கம்

# சுங்க அதிகாரிகள் சார்பாக சீருடைத் துணி பெறுகைக்காக அழைப்பு விடுத்தல்

### தேசிய போட்டி கேள்வி முறைமை (NCB)

சுங்க அதிகாரிகள் சார்பாக சீருடைத் துணி பெறுகைக்காக திணைக்கள (பாரிய அளவான) பெறுகைக் குழுவின் தலைவரால் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | பெறுகையின் பெயர் | கேள்விப் பிணையின் பெறுமதி (ரூ) | கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தல் | |
|---|---|---|---|---|
| | | | திகதி | நேரம் |
| CUS/LOG/S/03/ Uniform/2023(Vol-ii) | சீருடைத் துணி | 100,000.00 (ஒரு இலட்சம்) | 2024.07.23 | பி.ப 2.00 |

1. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்வி முறைமையின் கீழ் நடைபெறும்.
2. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்களை, சுங்கப் பணிப்பாளர் (சேவை மற்றும் வழங்கல்) இடம் பெற்றுக்கொள்ள முடிவதுடன், 2024.07.04 முதல் 2024.07.22 வரை வேலை நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை கீழ்க்காணும் முகவரியில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
3. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2024.07.22 அல்லது அதற்கு முன்பு வேலை நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 3.00 இற்கு இடையில் ரூ. 2500.00 மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி இலங்கைச் சுங்கத் தலைமையகத்தின் 6ம் மாடியில் அமைந்துள்ள சேவை மற்றும் வழங்கல்கள் பிரிவிற்கு எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியை கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை காசாக மட்டுமே மேற்கொள்ளலாம்.
4. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் 2024.07.23 பி.ப 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். 2024.07.23 பி.ப 2.00 இற்கு கீழே தரப்பட்டுள்ள முகவரியில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் நேரடியாக சமுகமளிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரரின் பிரதிநிதிகளுக்கு அதற்காக சமுகமளிக்கலாம். சகல கேள்விகளும் ரூ. 100,000.00 கேள்விப் பிணையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

   **சுங்கப் பணிப்பாளர் (சேவை மற்றும் வழங்கல்)**
   **சேவை மற்றும் வழங்கல் பிரிவு,**
   **6ம் மாடி, இலங்கைச் சுங்கம்,**
   **இல. 40, பிரதான வீதி, கொழும்பு - 11**
5. வழங்க வேண்டிய சீருடைத் துணி சம்பந்தமான கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.07.12 மு.ப 10.30 இற்கு இலங்கைச் சுங்கத் தலைமையகத்தின் 6ஆம் மாடியில் அமைந்துள்ள சேவை மற்றும் வழங்கல்கள் பிரிவில் இடம்பெறும்.
6. கேள்வி வழங்கல் பற்றிய சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கைச் சுங்கம்,**
**இல. 40, பிரதான வீதி, கொழும்பு - 11,**
**தொலைபேசி: 011 - 2221680 / பெக்ஸ்: 011 - 2436096**

---

## விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம்

வடமேல் மாகாண விளையாட்டுக் கட்டிடத்தொகுதி, பிங்கிரிய

# தடகள விளையாட்டுகளுக்காக 400 மீற்றர் சுவட்டை நிர்மாணித்தல்

### CONTRACT No.: DSD/PRO/3/3/14/2024

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டும் பிங்கிரிய, வடமேல் மாகாண விளையாட்டுக் கட்டிடத்தொகுதியில் விளையாட்டு மைதானத்தை (400 மீற்றர் சுவடு) நிர்மாணித்தல் எனும் வேலைக்கு தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்கள, திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் இப்போது அழைக்கின்றார்.

   வேலையில் பிரதானமாக பிங்கிரிய, வடமேல் மாகாண மட்ட விளையாட்டுக் கட்டிடத்தொகுதியில் தளத்தை தயார்நிலைப்படுத்தல், மண் வேலைகள், 400 மீற்றர் சுவடு, மின்சார வேலைகள், நீர்க்குழாய் வேலைகள் என்பன உள்ளடக்குகின்றன. இந்த வேலைகள் 270 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதவற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் தகுதிநீக்கப் பட்டியலுக்கு உட்பட்டிருத்தல் கூடாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   3(அ) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் பெருந்தெருக்கள் / வீதி நிர்மாண துறையில் C3 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கான செல்லுபடியாகும் பதிவை ஒப்பந்தக்காரர் கொண்டிருத்தல் வேண்டும்.

   3(ஆ) கடந்த பத்து வருடங்களில் 150 மில்லியன் ரூபா பெறுமதியான நீர்க்குழாய் வேலைகள் மற்றும் மின்சார வேலைகள் சகிதம் ஆகக்குறைந்த ஐந்து (5) நிர்மாணத் திட்டங்களை ஒப்பந்தக்காரர் வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

   3(இ) கடந்த 10 வருடங்களில் விளையாட்டு மைதானமொன்றில் ஆகக்குறைந்தது ஒரு (1) தடகள சுவட்டை ஒப்பந்தக்காரர் வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-7, இல. 9, பிலிப் குணவர்தன மாவத்தை, விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம், பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 0112694566 மற்றும் பின்வரும் முகவரியில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையான விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-07-04ஆம் திகதி முதல் 2024-07-24ஆம் திகதி வரையில் (வேலை நாட்களில்) மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக 35,000.00 ரூபாவைச் செலுத்திய பின்னர் கொழும்பு-7, இல. 9, பிலிப் குணவர்தன மாவத்தை, விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களுக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2024-07-25ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும்.
